கோகுலம்

GOKULAM

செப்டம்பர் '90 ரூ. 3/-





சுவைக்கச் சுவைக்க தனியின்பம்
அதுவே கோகனட் குக்கீஸ் அளித்திடும் பேரின்பம்
நியூட்ரின் குக்கீஸ்
பாலும் தேங்காயும் திரண்டு அளிக்கும் அருஞ்சுவை
THE FINEST, WIDEST RANGE
nutrine
India's largest selling sweets
COOKIES
Visesh/NC8815/Tam


கோகுலம்

1990 செப்டம்பர் மாத இதழ்
மலர் 8 ○○ இதழ் 8



அன்புத் தம்பி, தங்கைகளே!





ஆசிகள் பல. உயர் கல்வியும் ஓங்கு புகழும், துயரற்ற வாழ்வும், தூய உள்ளமும், அயர்வற்ற உழைப்பிலே ஆனந்த வாழ்வும், அதற்கேற்ற ஆரோக்கிய நலமும் பெற்று வாழ வாழ்த்துகிறேன்.

இந்த செப்டம்பர் திங்கள் மிகமிக மரியாதைக்குரிய மாதம். துவக்கத்தில் (5 ம் தேதி) வரும் ஆசிரியர் தினத்தை முதலில் நினைவு கூருங்கள். ஏடுதூக்கும் பிள்ளைகளின் ஏற்றத்துக்குப் பாடுபடும் குருவை— மாதா பிதாவை அடுத்து மதிக்கப்பட வேண்டிய ஆசிரியப் பெருந்தகையை வணங்கிப் போற்றுங்கள், நன்றி கூறுங்கள் என்று உங்களுக்கெல்லாம் ஞாபகப்படுத்தவே நான்காட்டியில் ஒதுக்கப்பட்ட நல்லதொரு நாள். ஆசானைப் போற்றி, வணங்கி, நன்றி சொல்வோம்.

அதேபோல் மதிப்புக்கும் மரியாதைக்கும் உரிய மாற்றோர் ஆசிரியர் தினமும் இதே மாதத்தில்தான் வருகிறது. உங்கள் கரங்களிலே தவழ்ந்து கருத்திலே இனிக்கும் இந்தக் கோகுலம் உருவாகக் காரணமாய் இருந்த அந்த ஆசிரியரும் இந்த மாதத்தில்தான் பிறந்தார். ஆம், ஆசிரியர் கல்கி பிறந்த நாள்: 9.9.1899. பிறந்த நாளின் கூட்டுத் தொகையும் ஒன்பது தான்! எண் ஒன்பதுக்கு எத்தனை சிறப்புண்டு என்று உங்கள் கணித ஆசிரியரைக் கேட்டுப் பாருங்கள், தெரியும்.


ஆசிரியர் அமரர் கல்கியின் சிறப்பும் அத்தகையதுதான். இன்றைய பத்திரிகைகள் அத்தனைக்கும் குரு பீடம் அமரர் கல்கிதான் என் பதில் இரண்டாவது கருத்துக்கே இடமில்லை.

அந்த மாமனிதருக்குத்தான் உங்களைப் போன்ற சிறார்களிடம் எத் தனை அன்பு, பாசம்! அவரை நினைவு கூர்ந்து நமது நன்றிக் கடன் செலுத்தும் நல்லதொரு மாதம் இந்த செப்டம்பர் என்று கொண்டாடு வோம். அப்படிக் கொண்டாடும் வகையில்தான் அமரர் கல்கியின் அருமைப் புதல்வி ஆனந்தி, அப்பாவைப் பற்றிய அரிய நினைவுகளைக் கோத்துத் தந்திருக்கிறார். படித்துச் சுவையுங்கள்.

அன்பு அண்ணன்,

(கௌரவ ஆசிரியர்).

உயிர்களிடத்தில் அன்பு வேணும் — தெய்வம்
உண்மையென்று தானறிதல் வேணும்.
— பாரதியார்.





இந்த இதழில்..



“கல்கி மாமா,

“மாமா மாமா, ஒரு கதை சொல்லுங்கோ மாமா! பெரிய கதை!” இது ராதா என்ற சிறுமி.

“கல்கி மாமா, நீங்கதான் கதை எழுதறவர் ஆச்சே! எங்களுக்காக ஒரு புதுக் கதை செல்லுங்கோளேன்.” இது வயதில் கொஞ்சம் பெரியவளான தங்கம்.

தூணருகில் பொம்மையும் கையுமாய்த் தயங்கி நின்ற குழந்தையைப் பார்த்து, “என் விஜயா! உனக்கு என்ன கதை சொல்லணும்?” என்றார்.

“நேக்கு குட்டிப் பாப்பா கிருஷ்ணன் கதைதான் வேணும்.”

“தம்பி, உனக்கு என்ன கதை?”

“எனக்குச் சண்டைக் கதைதான் பிடிக்கும்.”

கல்கியவர்கள் பெரிய எழுத்தாளராக இருந்தார் என்பது எல்லாருக்



கதை சொல்லுங்கோ!”

கும் தெரியும். ஆனால் குழந்தைகளுக்கு அவர் எவ்வளவு ஜோராகக் கதை சொல்லுவார் என்பது அதைக் கேட்டு மகிழ்ந்த சிலருக்குத்தான் தெரியும்.

அவர் உணர்ச்சியோடு கதை சொல்லும் போது கேட்கும் சிறுவர் சிறுமியர் முகத்தில் சிரிப்புத் தவழும். கண்களில் கண்ணீர் பொங்கி வழியும். உடல் நடுங்கும். திடீரென்று கலகல வென்று சிரிப்பார்கள்.


குழந்தைகள் கலீர் என்று சிரிக்கும் ஒலி கேட்டால், பெரியவர்கள் கூட, “கல்கி கதை சொல்றார் போலிருக்கு,” என்று கைக்காரியத்தைப் போட்டு விட்டு வந்து உட்கார்ந்து விடுவார்கள். அவர் கதை சொல்லும் போது உணர்ச்சியோடு சில சமயம் சைகை கயோடு அற்புதமாகச் சொல்லுவார்.

தங்கம் என்ற சிறுமி புதிய கதை கேட்ட போது எங்களையெல்லாம் கொஞ்ச நேரம் பொறுமையாக இருக்கச் சொல்லி விட்டு குழந்தையான விஜயாவை அருகில் வந்து உட்காரச் சொன்னார். முதலில் அவளுக்குக் கிருஷ்ணன் தொட்டிலில் பாப்பாவாக இருந்த போது சகடாசுரனைக் காலால் உதைத்துத்தள்ளிய கதையைச் சொன்னார். பிறகு வயதான கிழவி நாகப்பழம் விற்ற கதையைச் சொன்னார்.

‘‘போறுமா!’’ என்று கேட்டுவிட்டு, கொஞ்சம் வயதில் பெரியவர்களான எங்களுக்கெல்லாம் ‘மோகினித் தீவு’ என்ற கதையை இட்டுக் கட்டிச் சொன்னார்.

கொஞ்ச காலத்துக்குப்பிறகு இந்தக் கதையை ஒரு குறு நாவலாகவும் எழுதினார். அந்தக் கதை கல்கியில் வெளியான போது முதலில் அவர் வாய்

ஆனந்தி



மூலமாகவே கதையைக் கேட்ட எனக்கும் என் தோழிகளுக்கும் ரொம்பப் பெருமையாக இருந்தது.

''இதை முன்னாடியே கல்கி மாமா எங்களுக்குச் சொல்லியிருக்கிறார்,'' என்று என் தோழிகள் பெருமையடித்துக் கொண்டார்கள்.

என் தகப்பனார் இரண்டு வயதுக் குழந்தைக்கும் புரியும்படி வேடிக்கையாகக் கதை சொல்லுவார். பத்துப் பன்னிரண்டு வயதுச் சிறுவர்களுக்கு வீரம் தீரம் மிகுந்த ஸாகசக் கதைகளைச் சொல்லுவார். அப்படியே கண்ணால் பார்க்கிற மாதிரி தோன்றும்.

நான் சிறுமியாக இருந்த போதெல்லாம் பொழுது விடியும் போதே சீக்கிரம் இரவு வராதா என்று தோன்றும். அப்பா ஆபீஸிலிருந்து வந்து இரவு சாப்பாடு ஆன பிறகு ஊஞ்சலில் உட்காருவார். நானும் என் தம்பியும் இரண்டு பக்கத்திலும் உட்கார்ந்து கொள்வோம். ஊஞ்சலை லேசாக ஆட்டியபடியே எங்களுக்கு ராமாயணம், மகாபாரதம், கிருஷ்ணலீலைகள் முதலிய புராணக் கதைகளை முழுவதுமாகச் சொல்லியிருக்கிறார். தூக்கம் கண்ணைச் சுழற்றினாலும் ஆர்வத்துடன் கதை கேட்போம்.

மறுநாள் கதை ஆரம்பிக்கும் போது, ''நேத்திக்கி எங்கே நிறுத்தினேன்?'' என்பார்

''அபிமன்யு சக்கரவ்யூகத்தை உடைக்க வேகமாப் போறான்!''

''பேஷ்! ஞாபகம் வைச்சிண்டிருக்கேளே!'' என்று சொல்லி விட்டு முதல் நாள் சொன்ன கதையை மறுபடியும் சுருக்கமாகச் சொல்லிவிட்டு மேலே தொடர்ந்து சொல்லுவார்.


அபிமன்யு வதம் கதை சொல்லும் போது நாங்கள் கண்ணீர் விட்டு விசித்து விசித்து அழுவோம்.

ஒருநாள், 'மண்ணும் இமயமலை' என்ற பாரதியார் பாட்டை எங்களுக்குக் கற்றுக் கொடுத்தார்.

'பூரண ஞானம் பொலித்த நன்னாடு
புத்தர் பிரான் அருள் பொங்கிய நாடு.'

என்ற அடியைப் பாடிய பிறகு, ''இன்னிக்கு நான் புத்தர் கதை சொல்றேன்,'' என்று தொடங்கினார்.

சித்தார்த்தர் இளவரசராக இருந்த போது அன்னப் பட்சி அடிபட்டு விழுந்ததையும், அந்தப் பட்சியின் உடலிலிருந்து எடுத்த அம்பினால் தன் கையை அவர் குத்திப் பார்த்துக் கொண்டு வலி என்றால் என்ன என்று தெரிந்து கொண்டதையும் அந்த அன்னப் பறவையிடம் அவர்



காட்டிய பரிவையும் கருணையையும் மனம் உருக எடுத்துச் சொன்னார்.

நான் பிற்காலத்தில் தேசிக விநாயகம் பிள்ளையின் ஆசிய ஜோதியைப் படித்தபோது அப்பா கதைசொன்னது ஞாபகம் வந்து கொண்டே இருந்தது. இந்தக் கட்டத்தை ரொம்ப ரசித்தேன்.

''குழந்தை ராகுலனும் யசோதராவும் தூங்கிண்டிருந்தா. குழந்தையை விட்டுப் போகவே மனம் வரல்லே. வாசல் படி மட்டும் போனார். திரும்பி வந்து குழந்தை முகத்தைப் பார்த்தார். கார்த்தாலே

'அப்பா'ன்னு கூப்பிடுவாளே! யசோதரா தன்னைத் தேடுவாளே என்று வருத்தமாக இருந்தது. ஆனாலும் மனசைத் திடம் பண்ணிண்டு உலகம் முழுக்க எல்லா ஜீவராசிகளுக்கும் நல்லது என்னன்னு கண்டு பிடிக்கணும் என்ற வேகத்திலே கிளம்பினார். அவருடைய குதிரை வாசல்லே இருந்தது. அதுமேலே தாவி ஏறிண்டார்.''



இப்படி அவர் விவரமாகச் சொல்லிக் கொண்டு வரும் போது கண்ணீர் பொங்கிப் பொங்கி வரும்.

கல்கியவர்கள் அடிக்கடி வெளியூர்களுக்குச் செல்வார். அப்போதெல்லாம் எங்களுக்குத் தான் பார்த்த காட்சிகளை விவரித்து ரசமான கடிதங்கள் எழுதுவார். வேடிக்கையாகவும் இருக்கும்.

''ரயிலில் போய்க் கொண்டே இருந்தேன். ''க்ரீச்!'' என்று ஒரு சத்தம் கேட்டது. திரும்பிப் பார்த்தால் ஒரு குரங்கு, ''என் தோழி ஆனந்தியை ஏன் அழைத்து வரவில்லை?'' என்று கேட்டது.

''ஆனந்தி குழந்தைதானே? கொஞ்சம் பெரியவளான பிறகு அழைத்து வருகிறேன் என்று சொன்னேன்,'' என்பதாக ஒரு சமயம் எழுதியிருந்தார்.

'அப்பா என்னையும் அழைத்துக் கொண்டு போகவில்லையே என்று மனத் தாங்கலுடன் இருந்த எனக்கு அந்த வார்த்தைகள் சமாதானமாகவும் இருந்தன.

குழந்தைகள் மகிழ்ச்சியோடு இருக்க வேண்டும். பயமில்லாமல் வளர வேண்டும் என்று விரும்பினார் கல்கி. தண்டனை என்ற வார்த்தையே அவருக்குப் பிடிக்காது.

எழுத்தாளர் துமிலனுடைய பெண் பத்மா என்னை விட வயதில் சிறியவள். அடிக்கடி என்னோடு விளையாட வருவாள். பத்மாவுக்கு இருட்டு என்றால் பயம். அஸ்தமித்து விட்டால் விளக்கில்லாத அடுத்த அறைக்குள் கூட நுழைய மாட்டாள். அப்பா ஒருநாள் எங்களை இருட்டாக இருந்த அடுத்த அறைக்கு அழைத்துக் கொண்டு போனார். பத்மா என் கையைக் கெட்டியாகப் பிடித்துக் கொண்டிருந்தாள். பளீரென்று விளக்கு எரிந்தது. பத்மா சிரிப்புடன் சுற்றிலும் பார்த்தாள். விளக்கை அணைத்தார் அப்பா. 'லைட்டுப் போடு!' என்றாள் பத்மா! பல்பு ஒளி பாய்ச்சியது. ''அணை,'' என்றாள்.

இப்படிப் பல தடவைகள் அவள் சொன்னபடி விளக்கைப் போட்டும் அணைத்தும் ஒளியும் இருளும் பழக்கமாகும்படி செய்தார். இதை அவர் தானாகச் செய்தாரோ அல்லது எங்காவது படித்தாரோ, தெரியாது. பத்மாவின் பயம் தெளிந்தது.

சிறுவர் சிறுமியர்களைப் பார்த்து விட்டால் சந்தோஷமாக இருப்பார் கல்கி, அவர்களைப் பாடச் சொல்லியும் ஆடச் சொல்லியும், கவிதை


களைச் சொல்லச் சொல்லியும் உற்சாகப்படுத்துவார்.

நாட்டியமாடினால், ''பலே! பலே!'' என்று பாராட்டுவார். நன்றாகப் பாடினால் ரொம்ப சந்தோஷப்படுவார். சிறுவர்கள் அவரை வட்டமிட்டுக் கொண்டே இருப்பார்கள்.

ஒரு நாள் என்னைக் கூப்பிட்டு, ''ஒரு பாட்டுப் பாடு,'' என்று சொன்னார்.

நான் புதிதாகக் கற்றுக் கொண்டிருந்த ஆபோகி ராகப் பாடலைப் பாடினேன். எனக்குப் பாட்டுக் கற்றுக் கொடுத்த வாத்தியார் என் தகப்பனாருக்குப் பிடிக்கும் என்பதற்காகத் தமிழ்ப் பாட்டுக்கள்தான் கற்றுத் தருவார்.

அந்தப் பாடலின் சரணத்தைப் பாடினேன்.



''ஈனச் செயல்கள் புரிந்தேன். உன்
இணையடியினை மறந்தேன்..'
இந்த அடிகளைக் கேட்ட உடனே அவர், ''ச்சீ! சின்னக் குழந்தை நீ! இப்படி ஒரு பாட்டுப் பாட வேண்டுமா. ஈனமாவது செயலாவது!'' என்றார். ''சரி, மேலே பாடு.''

ஞான குருவாய் வருவாய் என்றே
நம்பி நம்பி நம்பி இருந்தேன்.
(பல்லவி) அபராதங்கள் பொறுப்பாய் – கண்ணா! என்று பல்லவியைப் பாடி முடித்தேன். ''பேஷ், இது நன்னாத்தான் இருக்கு,'' என்று சொல்லி விட்டுச் சிறிது நேரம் மௌனமாக இருந்தார்.

பிறகு, ''இப்படிப் பாடு,'' என்றார். ''ஈனச் செயல் புரிந்தறியேன் – உன் இணையடி மறந்தறியேன்...'' என்று பாடிக் காட்டினார். நான் வாத்தியாரிடம் அப்படியே பாடிக் காட்டினேன். ''உங்கப்பா மாத்திக் கொடுத்தாரா? நன்னாத்தான் இருக்கு. நானும் இப்படியே பாடறேன்,'' என்று சொன்னார்.

பல சமயங்களில் பல மாணவர்களுக்கு உதவி செய்திருக்கிறார் கல்கி. நாகராஜன் என்ற மாணவரிடம் அவருக்கு ஒரு தனி அன்பு. ரொம்பப் புத்திசாலி என்று சொல்லுவார். நாகராஜன் பள்ளி இறுதி வகுப்புப் படிக்கும் போது ஒரு வேலை நிறுத்தம் நடந்தது. அதில் சேர்ந்து விட்டான் நாகராஜன். பள்ளிக்குப் போக வில்லை. பரீட்சை எழுதக் கூடாது என்று சொல்லி விட்டார்கள். பரீட்சை எழுத வேண்டுமானால் ரூ30/- அபராதம் கட்ட வேண்டும். முப்பது ரூபாய் அந்தக் காலத்தில் ஒரு மாணவனுக்கு மிகப் பெரிய தொகை. பள்ளிக் கூடச் சம்பளம் ரூ 3/- ஆக இருந்த காலம். இதை வீட்டில் சொல்ல நாகராஜனுக்கு ரொம்பப் பயம். ''கல்கி மாமா எப்படியாவது இந்த இக்கட்டிலிருந்து தன்னை விடுவித்து விடுவார்,'' என்று வந்தான் நாகராஜன்.

கல்கிமாமா கதையைக்கேட்டாரோ இல்லையோ ரொம்பக் கோபம் வந்து விட்டது அவருக்கு. ''படிக்கிற நாளில்

சரியாகப் படிக்க வேண்டாமா? வேலை நிறுத்தம் ஸ்டிரைக் இதற்கெல்லாம் நீ போகலாமா? உன் பள்ளிக் கூடத்தில் என்ன செய்யச் சொல்கிறார்களோ, அப்படித்தான் நீ செய்ய வேண்டும். நான் குறுக்கிட முடியாது,'' என்று சொல்லித் திருப்பி அனுப்பி விட்டார் கல்கி.

நாகராஜன் தலையைத் தொங்கப் போட்டுக் கொண்டு வீடு போய்ச் சேர்ந்தான்.

இரவு திடீரென்று கல்கி மாமா வந்தார். வீட்டிலிருந்தவர்களுடன் சில நிமிடங்கள் உரையாடினார். போகும் போது, ''நாகராஜா, இங்கே வா,'' என்று கூப்பிட்டார். என்ன சொல்லப் போகிறாரோ என்ற பயத்தோடு வந்தான் நாகராஜன். ''இந்தா! நாளைக்குப் பள்ளிக் கூடம் போ,'' என்று சொல்லிவிட்டு ஒரு காகிதத்தை அவன் கையில் திணித்தார் கல்கி மாமா.

நாகராஜனுக்கு ஒன்றும் புரியவில்லை. பிரித்துப் பார்த்தால் ரூ 30/- அபராதம் செலுத்திய ரசீது!

சென்னைக்கு அருகில் கல்கிக்கு ஒரு சிறிய பண்ணை இருந்தது. வாரந்தோறும் நாங்கள் அங்கே போய் வருவோம். சிறிய கிராமம். கார் வரும் சத்தம் கேட்டதும் கிராமத்துப் பிள்ளைகள் விழுந்தடித்துக் கொண்டு ஓடி வருவார்கள். வண்டியிலிருந்து இறங்கவே முடியாது.

ஒரு வழியாக இறங்கியதும் தாம் கொண்டுவந்த பையிலிருந்து பிஸ்கட், மிட்டாய் பொரி கடலை எதையாவது எடுத்து எல்லாருக்கும் கொடுப்பார். அந்தக் குழந்தைகள் ஆசையாகத் தின்பதைப் பார்த்து மகிழ்வார்.

அருவிகள் சொரியும் மலைப் பிரதேசமான திருக்குற்றாலத்தில் ஒரு நண்பர் வசித்து வந்தார். அவர் பெயர் ரசிகமணி டி. கே. சி. அவருடைய இல்லத்தில் அடிக்கடி போய்த் தங்குவார் கல்கி.

டி. கே. சியின் பேரன் நடராஜன் மூத்தவன். அடுத்தவள் பேத்தி. அண்ணன் நடராஜன் அவளைத் தங்கச்சி தங்கச்சி என்று கூப்பிட்டதால்



அமரர் கல்கியுடன் அருமைப் புதல்வி ஆனந்தி — கட்டுரை ஆசிரியை.

அந்தப் பெயரே நிலைத்து விட்டது. அவர்களுக்கு இன்னும் இரண்டு தம்பிகளும் இருந்தார்கள். கல்கியவர்கள் கடைக் குட்டியான சாமியிடம் பேசிக் கொண்டிருந்தாராம். அதைப் பற்றி எழுதுகிறார்.

''உன் பெயர் என்ன தம்பி?'' என்று கேட்டேன்.

''குமாரசாமி,'' என்று பதில் வந்தது.

''உன் தாத்தா பெயர் என்ன?''

''தீக்குச்சி!'' (டி. கே. சி.)

நான் சிரித்து விட்டு, ''உன் அக்காள் பெயர் என்ன?'' என்றேன்.

''தங்கச்சி,'' என்றான். எப்படியிருக்கிறது கதை? என்று கடிதத்தை முடித்திருந்தார் கல்கி.

இதெல்லாம் நடந்து பல ஆண்டுகளுக்குப் பிறகு என் மகள் கௌரி பிறந்த போது பத்து நாள் குழந்தையை மடியில் வைத்துக்கொண்டு, ''சிருஷ்டி தான் என்ன ஆச்சரியமா இருக்கு? சின்னக்கால். சின்னக்கை. அதிலே முளைத்த மாதிரி நகம். மொட்டு மாதிரி விரல். சின்ன மூக்கு, சின்னக் காது. பட்டுக் கன்னம்,'' என்று வருணித்து விட்டு, ''உலகத்திலேயே பெரிய அதிசயம் — பிறந்த குழந்தை தான்,'' என்று சொன்னார்.

அது எப்படிப்பட்ட உண்மை!



அஞ்சலி

பெண் குழந்தைகள் ஆண்டாகக் கொண்டாடப்படும் இந்த வருடத்தில் வெளியாகியிருக்கிறது அஞ்சலி திரைப் படம். மனவளர்ச்சிக் குன்றிய ஒரு குழந்தையிடம், பிற குழந்தைகளும், ஏன் பெரியவர்களும் எப்படி நடந்து கொள்கிறார்கள், எப்படி நடந்து கொள்ள வேண்டும் என்பதுதான் இந்தக் கதையின் மையக்கரு.

அஞ்சலி திரைப்படத்தைப் பார்த்து விட்டுச் சில சிறுவர்கள் இங்கே தங்கள் கருத்துக்களைப் பரிமாறிக் கொள்கிறார்கள்.

சரண்யா: தியேட்டரை விட்டு வரவே மனசில்லே. அஞ்சலி பாப்பா பொழச்சுடும்னு ரொம்ப எதிர்பார்த்தேன்: ஆனா பாவம்...

பாலாஜி: நானும் அப்படித்தான் நெனைச்சேன். அஞ்சலி பிழைச்சுடுவான்னு தான் நெனைச்சேன்...

ஆனந்த்: அதுதான் டாக்டரம்மா சொல்லிடறாங்களே, 'பொறந்த நாலஞ்சு நாளைக்குள்ளே அஞ்சலி செத்துப் போயிடுவா; அதனாலேதான் உங்ககிட்ட குழந்தை செத்தே பொறந்ததுன்னு உங்க வீட்டுக்காரர் உங்ககிட்டே பொய்ச் சொன்னார்'னு ரேவதிகிட்டே லேடி டாக்டர் சொல்றாங்களே... அப்பவே எதிர்பார்க்க வேண்டியது தானே?

ப்ரியா: அது சரிதான். ஆனா மிச்ச குழந்தைங்கள்ளாம் ஆரம்பத்திலே வெறுத்துட்டு அப்புறம் அன்பாய்ப் பழக ஆரம்பிச்சப்புறம்... அஞ்சலி பொழச்சிருக்கலாம் இல்லியா?

சதீஷ்: கரெக்ட் ப்ரியா. எத்தனையோ படங்கள்ல பார்த்திருக்கோம். அம்மாவும் அப்பாவும் வந்து, 'அஞ்சலி'ன்னு கூப்பிடுவாங்க. 'டக்'குனு குழந்தை எழுந்து உக்காந்துக்கும். எல்லாரும் அந்தக் குழந்தையோட பாடி 'வணக்கம்' பாங்க. அந்த மாதிரி இந்தப் படத்திலேயும் பண்ணியிருக்கலாம்.

ஜெயஸ்ரீ: சரிதான், ஒரே மாதிரி எல்லாப் படமும் இருந்திட்டா செம போர் அடிக்கும்.

ஆனந்த்: டிஸ்கோ டான்ஸ் சூப்பர் இல்லே. நாற்பது அம்பது பசங்களும் ஒரே மாதிரி அழகா ஸ்டெப் போடறாங்க. ரொம்ப நல்லா இருக்கு.

பாலாஜி: ஆனா பசங்க டான்ஸ் ஆடும் போது ஏன் ஒரே இருட்டா இருக்கு? படமே நிறைய இருட்டாத்தான் இருக்கு.

ஜெயஸ்ரீ: பாலாஜி, நீ கண்ணாடி போட்டுக்கிட்டா, பளிச்னு தெரியும்.

சரண்யா: அதுதான்டா புது டெக்னிக். வெளிச்சமும் இருட்டுமா மாறி மாறிக் காட்டறாங்க. மிச்சப் படங்களை விட இது வேற மாதிரி இருக்கு இல்லியா?



*** கலந்துரையாடலில் பங்கு கொண்டவர்கள் இடமிருந்து வலம்: சதீஷ், ஆனந்த், சரண்யா, ப்ரியா, பாலாஜி, ஜெயஸ்ரீ.**

அஞ்சலி.. அஞ்சலி...

சதீஷ்: கரெக்ட். இருட்டும் இந்தப் படத்திலே அழகா நடிச்சிருக்கு!

ப்ரியா: படத்திலே எல்லாப் பாட்டுமே சின்னப் பசங்க பாடறதுதான். கவனிச்சீங்களா? அதுவும் இந்தப் படத்திலே புதுமை தான்.

ஆனந்த்: எனக்கு ஒரு விஷயம் புரியலே. ரேவதி நர்ஸ்கிட்ட வந்து, 'அஞ்சலி எல்லார்கிட்டேயும் பழகறா. என்கிட்ட மட்டும் வர மாட்டேங்கறா'ன்னு சொல்றாங்க. அதுக்கு நர்ஸ், 'உங்க கணவர் — அஞ்சலியோட அப்பா — தினமும் இங்கே வந்து அவகிட்ட விளையாடிக்கிட்டிருந்தாரு; அதனால அவர்கிட்ட பழகறா. இந்த மெண்டல் ஆஸ்பத்திரியில நிறையக் குழந்தைங்க கூட அவ பழகிட்டதால உங்க குழந்தைங்ககிட்டே பழகறா. ஆனா அவ அம்மா கூடப் பழகலியே. அதனாலதான் உங்ககிட்ட வர மாட்டேங்கறா! அப்படின்னு சொல்றாங்க. இது சரியில்லே. ஏன்னா நர்ஸ்தான் அம்மா மாதிரி. அஞ்சலிகிட்டே பழகியிருக்காங்களே; பசங்களோட பழகின அஞ்சலி அதே நினைப்பிலே புதுப் பசங்களோட பழக முடியும்னா, நர்ஸ்கிட்ட வளர்ந்த அவ, அதே மாதிரியான அம்மாகிட்டே ஏன் பழகக் கூடாது?

சதீஷ்: கரெக்ட். நானும் அதைத்தான் நெனைச்சேன்.

சரண்யா: அதுதான் சினிமா. ரேவதிகிட்டே அஞ்சலி நல்லாப் பழகிட்டா, அப்புறம் ரேவதிக்கு ஆக்டிங் சான்ஸ் இருக்குமா என்ன? அதுக்காகத்தான் அப்படிப் பண்ணிட்டாங்க.

ப்ரியா: அதுவும் சரிதான். ஆனா அந்த நர்ஸ் — ரேவதி டயலாகைக் கட் பண்ணியிருக்கலாம்.

ஜெயஸ்ரீ: கடைசியிலே அனு வந்து செத்துப் போன அஞ்சலியைப் பார்த்து 'எந்திரி, எந்திரி'ன்னு கத்தறானே... ரொம்ப டச்சிங்.

பாலாஜி: ஆமாம்பா. நான் கூட அழுதிட்டேன்.

ப்ரியா: ஆனா, அனு அப்படி கத்தறானே, அவனுக்கு அஞ்சலி செத்துப் போனது புரியலியா என்ன?

ஜெயஸ்ரீ: தெரியாமத்தானே அப்படிக் கத்தறா? ரொம்ப டச்சிங் சீன்பா.

ப்ரியா: ஏன் தெரியாதாம்? சும்மா உடாதே. 'டைவர்ஸ்' பத்தியெல்லாம் அவ பேசறா. இது தெரியாதா?

சதீஷ்: அவ எங்கே டைவர்ஸ் பத்திப் பேசினா? அவளோட அண்ணன் அர்ஜுன் தானே பேசறான்? 'டைவர்ஸ்னா என்ன?'ன்னு கேட்கறாளே அவ? அதனால அவளுக்கு அதெல்லாம் தெரியாது.



ஆனந்த்: அஞ்சலி 'வா'ன்னு கையால சைகை காட்டறதே அழகா இருக்கு இல்லே? விரல்களைப் பிரிச்சுக்கிட்டு, கையை நீட்டி, மேலேயும் கீழேயும் ஆட்டி ஆட்டி கூப்பிடறது ரொம்ப அழகு... என்னமா ஆக்ட் பண்ணுது!

ப்ரியா: ஆமாம்! எவ்வளவு சின்னக் குழந்தை அது! ரேவதியோட மூக்கைத் தடவி, உதட்டைத் தடவி... அடடா, அன்பா இருக்குதேன்னு நெனைச்சா உடனே 'பட்'னு கன்னத்திலே அடிச்சுட்டு கை தட்டி



* சின்ன பசங்களெல்லாம் சண்டை போட்டாலும் அப்புறம் ஒண்ணாயிடுவோம்னு ரொம்ப அழகாச் சொல்லியிருக்காங்க — சரண்யா.

சிரிக்கறா. அஞ்சலியா நடிக்கற ஷாமிலி கிரேட்!

பாலாஜி: ஏன் அவளோட அண்ணன், அர்ஜுனா நடிக்கறானே தருண், அவனும் தான் சூப்பரா நடிக்கறான். ஆரம்பத்திலே காம்பவுண்டிலே மிச்ச ஃப்ளாட் பசங்களோட சண்டை போடறான். அப்போ போலீஸ்காரர் வந்து மிரட்டறபோது, 'அடி தடியா? ஒண்ணுமில்லியே!' அப்படின்னு சொல்லி, சண்டையையே ஃப்ரண்ட்ஷிப்பா மாத்திடறானே... நல்ல ஆக்டிங்.

சரண்யா: கரெக்ட். சின்ன பசங்கள்ளாம் சண்டை போட்டுக்கிட்டாலும் அப்புறம் ஒண்ணாயிடுவோம்னு ரொம்ப அழகாச் சொல்லியிருக்காங்க.

ப்ரியா: அதே மாதிரி, 'டேய் அர்ஜுன், உன் தங்கை பைத்தியமாடா'ன்னு கிண்டலா மிச்ச பசங்கள்ளாம் கேலி பண்றாங்க. அப்புறம் அஞ்சலி சட்டையிலே டின் கயிற்றைக் கட்டி விட்டுட்டு அவளை அழ விட்டு வேடிக்கை பார்க்கறாங்க. அப்போ அர்ஜுன் வந்து, 'யார்ரா இப்படிப் பண்ணவன்? அவ என் தங்கைடா'ன்னு சண்டைக்கு வர்றான்...

பாலாஜி: ஆனா அதே அர்ஜுன்தான், 'அஞ்சலி பாப்பா செத்துப் போகணும்'னு சாமிகிட்டே வேண்டிக்கிட்டதாச் சொல்றானே!

ஆனந்த்: ஆனாலும் அவனுக்குப் பாசம் விடலே. அதனாலதான் தன்னோட பைத்தியக்காரத் தங்கையை மிச்ச பசங்க கேலி பண்ண போது சண்டைக்கு வர்றான். 'அஞ்சலி பாப்பா செத்துப் போகணும்'னு ஆரம்பத்திலே சொன்னவன்தான் கடைசியிலே 'அஞ்சலி பாப்பா பொழைச்சிக்கணும்னு வேண்டிக்கறேன்'னு சொல்றான். அந்த ரெண்டு இடமும் ஒரே மாதிரி வருது, கவனிச்சியா?

சதீஷ்: அந்த டின் கட்டற சீனுக்காகவே முதல்ல ஜனகராஜைப் பைத்தியமா காட்டறாங்க போலிருக்கு. அவர் சட்டையிலே டின் கயிறு கட்டி விளையாடற பசங்கதான் அஞ்சலி சட்டையிலேயும் கட்டறாங்க. பின்னால அஞ்சலிக்கும் டின் கட்டறதா காட்டறதுக்காகவே முதல்ல ஜனகராஜை பைத்தியமா காட்டறாங்க. இது எதுக்கு? ஜனகராஜ் ரோலே வேஸ்ட்.

ஜெயஸ்ரீ: அது சரி, வந்து... வந்து... (ரகசிய குரலில்) ஹஸ்பண்டை, வைஃப் பேர் சொல்லியா கூப்பிடுவாங்க?

பாலாஜி: அது மட்டுமில்லே. அனு அப்பாவை 'சேகர்'னு கூப்பிட்ட போது அப்பா அவளை அடிக்க வர்றார். அம்மாவும் 'அப்பாவைப் பேர் சொல்லியா கூப்பிட்டே?'ன்னு கண்டிக்கறாங்க.



* பைத்தியக்கார அஞ்சலியோட ஃப்ரெண்டா ஆயிடற சீன் ரொம்ப உருக்கம்! — சதீஷ்.

ஆனந்த்: அது விளையாட்டாத்தானே கண்டிக்கறாங்க...

பாலாஜி: அது சரி, ரேவதி ஹஸ்பண்டை பேர் சொல்லிக் கூப்பிடாம இருந்தா பசங்க கூப்பிடுமா? பசங்களை இப்படிக் கூப்பிட வைச்சதே அவங்க அம்மாதானே?

ஆனந்த்: நீ சொல்றதும் சரிதான்.

சரண்யா: அப்பாவா வர்ற ரகுவரன் எவ்ளோ சாதுவா, குழந்தைங்ககிட்டே அன்பா இருக்காரு...

ப்ரியா: மூணாவது குழந்தையைத்

இனமும் பார்க்கப் போறதுக்காக அங்கே போனேன். இங்கே வந்தேன்னு பொய் சொல்றாரு... அது சரியா?

சதீஷ்: அதைத்தான் அவரோட பையனும் பொண்ணும் 'பொய் சொல்றே'ன்னு பட்பட்டுனு கேட்டுடறாங்களே...

ஜெயஸ்ரீ: ஆனா அவரு பசங்க பொய் சொல்லக் கூடாதுன்னு உபதேசம் பண்றார்.

ஆனந்த்: முதல் சீனே பொய்யிலேதான் ஆரம்பிக்குது. 'எங்கப்பா அஸிஸ்டன்ட் கமிஷனர் — டிராஃபிக்'னு பொய் சொல்லி டாக்ஸி பிடிச்சுக்கிட்டுப் பசங்க வர்றது... இப்படிப் பொய் சொல்லலாமா?

சதீஷ்: சும்மா தமாஷ்தானேடா ஆனந்த்..

பாலாஜி: ஆனா பெரியவங்ககிட்டே போய்க் கிண்டல் பண்றதெல்லாம் ஓவர்பா...

ஜெயஸ்ரீ: புது வீட்டுக்குக் குடி போன உடனே, ஒவ்வொரு ரூமா குதிச்சு ஓடி, 'ஆஹா இது நம்ம ரூம்!' அப்படின்னு அர்ஜுனும் அனுவும் சொல்றது ரொம்ப நேச்சுரலா இருக்கு. நாமளும் அப்படித் தானே பண்ணுவோம்?

சரண்யா: அவங்க டைனிங் டேபிள் பாத்தியா. ஜப்பான்ல இருக்கா மாதிரி! அகலமா, குட்டைக் காலோட... அவங்க தரையிலே உக்காந்துக்கிட்டு குட்டி டேபிள்ளேயிருந்து எடுத்துச் சாப்பிடறாங்க. வித்தியாசமா இல்லே?

ப்ரியா: ஆமாம். எல்னோ....ஸ் பெரிய்....ய வீடு!

சதீஷ்: ஆனா இந்தப் படம் என்னவோ வெகேஷன்ல எடுத்தா மாதிரி இருக்கு.

• இது நம்ப ரூம்னு அர்ஜுனும் அனுவும் சொல்றது ரொம்ப நேச்சுரலா இருக்கு! — ஜெயஸ்ரீ.





• அஞ்சலி பிழைச்சிடுவான்னுதான் நெனைச்சேன்! — பாலாஜி.

பசங்க ஸ்கூலுக்குப் போகவே மாட்டாங்களா?.

ஆனந்த்: என்ன சதீஷ், தூங்கிட்டியா? அர்ஜுனும் அனுவும் ஸ்கூலுக்குப் போறதைக் காட்டறாங்க; வீட்ல படிக்கறதைக் காட்டறாங்க; ஸ்கூல் பஸ்லேயிருந்து இறங்கறதைக் காட்றாங்க... கவனிக்கலியா நீ?

சதீஷ்: ஓ, சாரி! கவனிச்சேண்டா. ஆனா இந்த மாதிரி நடு ராத்திரியிலே எப்படி அம்மா — அப்பால்லாம் பசங்களை வெளியே விளையாட விடறாங்க?

ஆனந்த்: அதைச் சொல்லு. ஹூம்... சினிமா அம்மா — அப்பாதான் இப்படி அலவ் பண்ணுவாங்க...

ஜெயஸ்ரீ: சும்மா இந்தப் பசங்க கலாட்டா பண்றதும் பெரியவங்களுக்குத் தொல்லை கொடுக்கறதுமா இருக்கறதோட ஏதாவது விளையாட்டு விளையாடறா மாதிரி, ஒத்துமையா, ஜெயிச்சவங்க, தோத்தவங்கன்னு வித்தியாசம் பார்க்காம பழகறா மாதிரி ஒரு சீன் காமிச்சிருக்கலாம்.

ப்ரியா: ஆமாம், பசங்களோட கலாட்டா ரொம்ப அதிகம். ஓவர் டோஸ்...

ஆனந்த்: அப்படிச் சொல்ல முடியாது. பசங்கன்னா குறும்புத்தனம் பண்றவங்கதான்னு அந்த ஆங்கிள்ல காமிச்சிருக்காங்க. ஸ்போர்ட்ஸ்ல இன்டரஸ்ட் இருக்கறதா இன்னொரு படத்திலே காட்டுவாங்க.

சதீஷ்: ஆனந்தா நடிக்கறானே ஒரு பையன்...

பாலாஜி: முட்டைக் கண்ணனா?

சதீஷ்: ஆங்! அவன்தான். சூப்பர்டா அவன். பைத்தியக்கார அஞ்சலியை கேலி பண்ணிட்டோமேன்னு வருத்தப்பட்டு, அப்



* அஞ்சலி 'வா'ன்னு கையால சைகை காட்டறது ரொம்ப அழகு! — ஆனந்த்.

புறம் அவகிட்டே ஃப்ரண்டா ஆயிடற சீன் ரொம்ப உருக்கமா இருந்திச்சு.

சரண்யா: சயன்ஸ் ஃபிக்ஷன் கதை எப்படி? அம்மாடியோவ். பயம்மா இருந்திச்சுப்பா எனக்கு.

ஜெயஸ்ரீ: ஆமா சரண்யா, ரொம்ப த்ரில்லிங்.

பாலாஜி: ஆனா பசங்க பாட்டுப் பாடிக்கிட்டே சைக்கிள் ஓட்டிக்கிட்டுப் போறா மாதிரி ஒரு சீன் வருதே. அதிலே சைக்கிள் எப்படி மிதக்குது?

ஆனந்த்: அவங்கதான் சந்திரனுக்குப் போறா மாதிரிக் காட்டறாங்களே. சந்திரன்ல வெயிட்டே கிடையாதே. அங்கே ஏது கிராவிடி?

சதீஷ்: சந்திரன்ல எங்கடா கேட்வே ஆப் இந்தியால்லாம் வருது?

பாலாஜி: அது சும்மா காமிரா ட்ரிக் ஷாட்டுடா. மை டியர் குட்டிச்சாத்தான் மாதிரி ஒரு ட்ரிக். ஆனா அது ரொம்ப ஜோர்டா.

ஆனந்த்: கடைசியிலே ஒரு ஃபைட்டிங் சீனும் போட்டு நம்மளை சந்தோஷப்படுத்திட்டாங்க.

ப்ரியா: ஆமா. ஆனா அதிலே யார் யாரை அடிக்கறாங்கன்னே தெரியலே. ஒரே இருட்டு.

ஜெயஸ்ரீ: அது ராத்திரி நடக்கற ஸீன் தானே? இருட்டாத்தான் இருக்கும்.

சரண்யா: பிரபுவை அந்தச் சண்டைக்காகவே போட்ட மாதிரி இருக்கு. அவரும் ஒரு வேஸ்ட்.

சதீஷ்: குழந்தைங்ககிட்டே அன்பா இருக்கணும். அவங்க என்னதான் குறும்பு பண்ணினாலும் அவங்களைக் கோச்சிக்கவே கூடாதுன்னு படத்திலே சொல்றாங்க.

ஆனந்த்: அதெல்லாம் சினிமாவிலே தான் நடக்கும். போடா...

ப்ரியா: பைத்தியக்காரக் குழந்தைகிட்டே ரொம்ப அன்பா நடந்துக்கணும்; அதுக்கு மத்தவங்களை மாதிரி யோசிக்கவோ, பேசிப் பழகவோ தெரியாதுங்கறதால அந்தக் கிண்டல் பண்ணவோ, சீண்டவோ, அழ விடவோ கூடாதுன்னும் நல்லா சொல்லியிருக்காங்க.

சரண்யா: ஆமாம். இந்தப் படத்திலே மிச்ச சங்கதிகளை விட்டுட்டு நாம அதைத்தான் எடுத்துக்கணும்.

ஜெயஸ்ரீ: நாமளும் அப்படித்தான் இருக்கணும். நம்ம சொந்தத் தம்பி, தங்கச்சி மாதிரிதான் எல்லார்கிட்டேயும் பழகணும்...



* படத்துல எல்லாப் பாட்டுமே சின்னப் பசங்க பாடறது தான். — ப்ரியா.

நம்ப வயசுக் குழந்தைங்க யாரையும் நாம கஷ்டப்படுத்தக் கூடாது...

பாலாஜி, ஆனந்த்: கரெக்டா சொன்னே...

அஞ்சலி, அஞ்சலி, அஞ்சலி... என்று பாடியபடியே சிறுவர்கள் கலைந்து சென்றார்கள்.

படங்கள், கட்டுரைத் தொகுப்பு: பிரபு சங்கர்.


தோப்புக்கரணம் போட்ட ராஜா!
கதை. ரே
படம். மாலா.
மந்திர நாட்டு மன்னர் தம் கொடுங்கோல் ஆட்சியைச் சிறப்புற நடத்தி வந்தார்! ஒருநாள்..
வேட்டையாடப் போன சமயம் ஓர் சிறுத்தையைத் துரத்திச் சென்று காட்டிற்குள் வெகுதூரம் போய் விடுகிறார். உடன் வந்த வீரர்களையும் பிரிந்து திரும்ப வழி தெரியாமல் தவிக்கும் பசி வேறு! களைப்பின் மிகுதியால் ஒரு மாமரத்தின் நிழலில் பாறை மேல் அமர்கிறார். அப்போது மரத்தில் கிளி ஒன்று வந்து உட்கார அதை நோக்கிப் பாடுகிறார்;
பச்சைக்கிளியே எனக்காகப் பழத்தைப் போடேன் பசியாற!
கொடுங்கோல் மன்னா! உன்னைப் பார்க்க மிகவும் பரிதாபமாக உள்ளது! போகட்டும் இனியாவது கொடுங்கோலாட்சி செய்ய மாட்டேனென்று தோப்புக்கரணம் போடு! நானும் உன் பசிக்குப் பழங்களைப் போடுகிறேன். என்ன சம்மதமானால் போடு!
வேறு வழியின்றி மன்னவனும்—
இனி கொடுங்கோல் ஆட்சி செய்யவில்லை.
இனி கொடுங்கோல் ஆட்சி செய்யவில்லை
இனி கொடுங்கோல் ஆட்சி செய்யவில்லை
கல்கண்டு போல மாம்பழம் அதன் சுவையோ மிகப் பிரமாதம், ஹைஹா!
இதற்குள் வீரர்கள் அரசனைத் தேடி வந்தார்கள்!
இந்தத் திமிர் பிடித்த கிளியைக் கூண்டில் அடைத்து நம்முடைய அரண்மனைக்குக் கொண்டு வாருங்கள்!


கூண்டில் அடைந்த கிளி வஞ்சக மன்னனை அவமானப்படுத்த எண்ணிப் பாடியது!
மந்திரநாட்டு மன்னவராம் மாம்பழம் ஒன்று கேட்டாராம் தோப்புக்கரணம் போட்டாராம் தொழுது கெஞ்சிக் கேட்டாராம்
அழகுவடி கிளி இதைப் பாடவே அவமானம் அடைந்த மன்னன் ஆத்திரம் மிகக் கொண்டான்!
யாரங்கே! இந்தக் கிளியைக் கொண்டுபோய் நம் நந்தவனத்தில் குழிதோண்டிப் புதைத்துவிடுங்கள்.
கிளி புதைக்கப்பட்ட இடத்திலிருந்து ஓர் இரவுக்குள் செடி ஒன்று வளர்ந்து அதில் இருந்த மலர் களெல்லாம் அரசனைப் பார்த்துப் பாட்டுப்பாட ஆரம்பித்தன!


கொடி நீண்டு வளர்ந்து அரசனின் அறைக்குள் வந்து...
கிளியாய் இருந்ததும் நானே நான் குழிக்குள் புதைந்ததும் நானே நான் கொடியாய் முளைத்ததும் நானே நான் கொடுமைப்படுத்தும் கொற்றவனே!
சேனாதிபதி இந்தக் கொடியை வெட்டி மானுக்குப் போடுங்கள்
கொடி தின்ற மானோ மன்னனைப் பழித்து நடனம் ஆடியவாறு பாட்டுப் பாடியது?
கிளியாய்க் கொடியாய் இருந்தேனே கொஞ்சும் மானாய் வந்தேனே கொடுமை நிறைந்த மன்னவனே அறிவாய் இதையும் உணர்வாயே!
கோபம் கொண்ட மன்னன் மானை சிங்கத்திற்கு இரையிட ஆணையிட்டான்


மானைத்தின்ற சிங்கமோ...
கொடியும், கிளியும், நானேதான் கொத்தும் மானும் நானேதான் கொடியசிங்கம் நானேதான் கொல்லேன் உன்னை மன்னவனே!
திருந்திவிட்டேன். நல்லவனாக இருப்பேன். என்னை ஒன்றும் செய்யாதே!
என் நினைப்பு இருந்தால்தான் பயம் இருக்கும்! நல்லாட்சி நடத்துவாய்! உன் ஆசனத்தின் இருமருங்கிலும் என் உருவத்தை அமைத்துக்கொள்!
சிங்கத்தின் ஆணைப்படி ராஜா தனது ஆசனத்தில் சிங்க உருவங்களை அமைத்துக்கொண்டார்
ராஜாக்களின் ஆசனம் சிங்காசனம் ஆன கதை இதுதான்!
கதையும் முடிந்தது! கத்தர்க்காயும் காய்த்தது!

ஸ்போர்ட்ஸ்-1



சின்னஞ்சிறு வயதில் பள்ளி விட்டு வரும் சிறுவனிடம், ''டேய், பாடம் படி. விளையாடப் போய் விடாதே!'' என்று தாய் எச்சரிப்பதைத்தான் கண்டிருக்கிறோம்.

ஆனால் ஆனந்தின் அன்னை சுசிலா அந்த ஏழு வயதுச் சிறுவனிடம், ''வா, உனக்குச் செஸ் கற்றுத் தருகிறேன்,'' என்று அழைத்து, சொல்லிக் கொடுத்தாள். அன்னைக்குச் செஸ் ஆட்டம் நன்கு தெரிந்திருந்ததால் அந்த விளையும்

எதிர்கால இதோ ஓர் உலக சாம்பியன்!

பயிருக்குக் கற்றுத் தருவதில் கஷ்டமிருக்கவில்லை.

தென்னிந்திய ரயில்வேயில் ஜெனரல் மானேஜரான ஆனந்தின் தந்தை பணி நிமித்தமாக பிலிப்பைன் நாட்டுக்குச் சென்றார்! ஆனந்த் பிலிப்பைன் நாட்டில் கல்வி கற்றான்; அதோடு செஸ்ஸிலும் ஆழ்ந்த கவனம் செலுத்தினான். பிலிப்பைவில் அனைத்துப் பள்ளிகளுக்கான போட்டியில் தங்கப் பதக்கம் சூடியது தான் இந்த இளம் வித்தின் திறமைக்குக் கிடைத்த முதல் பரிசு. டெலிவிஷனில் வாரந் தோறும் நடக்கும் செஸ்குவிஸ்ஸில் பங்கேற்றான் ஆனந்த். இப்படி டெலிவிஷன் செஸ் குவிஸ் போட்டியில் ஏழு தடவை வெற்றி வாகை சூடினான்.

1982ல் சென்னை திரும்பிய ஆனந்த் தமிழக ஜூனியர் செஸ் சாம்பியன் விருதைப் பெற்றான். ஆனந்த் படிப்பிலும் கெட்டிக்காரன்; செஸ்ஸிலும் சூரப்புலி! 1984ம் வருஷமே தேசிய ஜூனியர் சாம்பியன் பட்டத்தை வென்றான். இவன் முதன் முதலில் கலந்து கொண்டது ஒரு சர்வ தேசப் போட்டி. பிரான்ஸுக்குச் சென்று உலக சப் ஜூனியர் செஸ் பந்தயத்தில் கலந்து கொண்டு வெண்கலப் பதக்கம் பெற்றான். இத்தகைய உலக சாதனையைச் செய்த முதல் இந்தியச் சிறுவன் ஆனந்த்தான்! இந்த சர்வ தேச மாஸ்டர் விருது ஆனந்துக்குக் கிடைத்தது, பிரிட்டனிலுள்ள லாயிட்ஸ் பாங்க் மாஸ்டர்ஸ் செஸ் சாம்பியன் போட்டியில்தான்! ஆனந்துடன் கூடவே அன்னை சுசிலாவும் சென்று ஊக்கமும் உற்சாகமும் அக்கரைச் சீமையில் அளித்து அவனது வெற்றிக்கு உறுதுணையாக இருந்தார்!

கிரீஸில் இளைஞன் ஆனந்த் செஸ் ஒலிம்பியாட்டில் அதிக ஸ்கோர்

குண்டுமணி

எடுத்த புள்ளி.

ஆசியப் போட்டியில் இரு தடவை ஆனந்த் வென்றாலும் தேசிய விருதை 1986ம் ஆண்டில்தான் சூடிக் கொண்டான்!

ஆனந்த் பிறந்தது 1969ம் வருஷம் டிசம்பர் 11ந் தேதி. அவனைத் தமிழக செஸ் ஆட்டக்காரர்கள் 'மின்னல் சிறுவன்' என்று அன்புடன் அழைத்தனர்!

இளமையில் கல்வி கற்ற பிலிப்பைன் நாட்டுக்கு ஆனந்த் 1987ல் சென்று பாகியோ நகரில் நடைபெற்ற உலக ஜூனியர் செஸ் பந்தயத்தில் பங்கு கொண்டு மக்னோலியா கோப்பையைப் பெற்று இந்தியாவுக்குப் புகழைத் தேடித் தந்தான். அனைவரும் கொண்டாடினர்!

செஸ்ஸின் சகல கலைகளிலும் வல்லவனான ஆனந்த் ஒரு நிறைகுடம்! பந்தயங்களில் சிங்கமாகப் பவனி வரும் அவன் உண்மையில் மிகவும் கூச்சப்படுபவன்! இந்திய அரசு இந்த இளம் உலக செஸ் மன்னனுக்கு 'பத்மஸ்ரீ' வழங்கிக் கௌரவித்திருக்கிறது!

உலக செஸ் மன்னர்களின் பட்டியலில் 95வது இடம் ஆனந்துக்குக் கிட்டியுள்ளது. 1987 நவம்பர் 14ந் தேதி குழந்தைகள் தினத்தில் சோவியத் நாடு நேரு பரிசு இவனுக்கு வழங்கியது.

ஆனந்தின் செஸ் திறமையை மெச்சி ஹைதராபாத்திலுள்ள நேரு தொழில் நுட்ப சர்வகலா சாலை 'கலா ப்ரவீண' என்ற டாக்டர் பட்டத்தைக் கொடுத்துள்ளது!

பூனாவில் 1989ல் தேசிய சாம்பியன் பட்டம், ஹாங்காங்கில் ஆசிய செஸ் விருது என்று இவனது திறமைக்குப் பரிசுகள் தொடர்ந்து வந்த வண்ணமிருக்கின்றன. இவை எல்லாவற்றுக்கும் மகுடம் வைத்தது போல் மணிலாவில் நடைபெற்ற சர்வதேச செஸ் போட்டியில் கிராண்ட் மாஸ்டர் மிக்கேல்குருவிச்சோடு ஆடி அவரைத் திணறடித்ததோடு, உலக செஸ் போட்டிக்குத் தகுதி பெற்று அதிசயச் சாதனையைச் செய்து ஆனந்த், இன்று உலகப் புகழ் பெற்று விட்டான்!



ஸ்போர்ட்ஸ்-2

அர்ஜன்டைனா

மேற்கு ஜெர்மனி மூன்றாவது தடவையாகக் கால் பந்தாட்டத்தில் வெற்றி வாகை சூடியது. அர்ஜன்டைனா ஹீரோ மாரடோனாவும் அவரது அணியினரும் உலகக் கோப்பையைக் கைப்பற்றச் செய்த பெரு முயற்சிகள் கைகூடவில்லை! ஆட்டத்தின் 85வது நிமிஷத்தில் அர்ஜன்டையான ஆட்டக்காரர் அண்ட்ரியாஸ் பிரக்மியின் 'பௌல்'. பெனல்டி ஷாட்டாக உருவாகி அர்ஜன்டைனா இறுதி ஆட்டத்தில் தோல்வியுறுவதற்கு 'யமனாக' முடிந்தது! நான்கு ஆண்டுகளுக்கு முன் மெக்ஸிகோவின் சாம்பியன் பட்டம் பெற்ற மாரடோனா இந்த முறை புகழ் மங்கிப் போனார்! இங்கிலாந்துக் குழுவை



* வெற்றி வாகை சூடிய மேற்கு ஜெர்மென் அணியினர்.



பறிகொடுத்தது!

மேற்கு ஜெர்மனி செமி பைனலில் வென்றதும் இதே கதைதான்! மேற்கு ஜெர்மனியின் காப்டன் லூதர் மாத்யூசும் அவரது சகாக்களும் வெற்றி வாகை சூடி மேற்கு ஜெர்மனியின் 'ஹீரோக்கள்ாகப் பாராட்டிக் கௌரவிக்கப்பட்டனர்! அர்ஜன்டைனாவிலும் இறுதி ஆட்டத்தில் கோட்டை விட்ட மார்டோனா குழுவினருக்கு ராஜ மரியாதை கிடைத்தது! மெக்ஸிகோ 'ரிபரி' 'மெட்கார்டோ' கொடேகல். 'திருட்டு'த்தனமாக பெனல்டி வழங்கியதாகக் குறை கூறப்பட்டார்!

மேற்கு ஜெர்மனி காப்டனும் 'கோச்'சுமான பெக்சன்பாயர் வெற்றி தேடித் தந்த அதிர்ஷ்டசாலி. ஐரோப்பிய சாம்பியன் பட்டத்தை மேற்கு ஜெர்மனி இழந்த போது, அதற்கு உயிரூட்ட பெக்கன்பாயர் வரவழைக்கப்பட்டார். இதற்கு முன் 'கோச்' செய்து பெக்சன்பாயருக்குப் பழக்கமில்லை. ஆனால் மெக்ஸிகோவில் 1986ம் ஆண்டில் இறுதி ஆட்டத்துக்கு மேற்கு ஜெர்மனி குழு செல்ல வழிவகுத்தவர் அவர்தான்!

பெக்கன்பாயருக்கு 44 வயதாகிறது. கால்ஃப் ஆட்டத்தில் வல்லவர். அவர் தமது இரண்டாவது மனைவி சிபில்லோடு ஆஸ்திரியன் மலைவாசஸ்தலமான சிட்ஸ்புயலில் வசிக்கிறார். உலகக் கோப்பையின் மூலம் கிடைக்கும் 1,25,000 மார்க்குகளை அவரது அறக்கட்டளைக்கு வழங்கி. அத் தொகை உடல் ஊனமுற்ற குழந்தைகளுக்குப் பயன்படப் போகிறது! உலகக் கோப்பைப் பரிசு ஒரு நல்ல காரியத்திற்குப் பயன்படப் போகிறது. பெக்சன்பாயருக்குக் கலீல் கிப்ரான் கவிதைகளில் அதிக ஈடுபாடு,

நில், கவனி, புறப்படு! 9

அழகுடன்

ஒளி படைத்த விழிகளோடு கனி படைத்த மொழியினோடு உயர உயரப் பறந்து செல்கின்ற உயிரான இலக்கியமே, உன் உன்னத மடல் கண்டு உள்ளம் பூரித்தேன்.

எளிமையான சொல்லாக்கங்கள், வளமையான கருத்தாழங்கள், இளமையான பளபளப்புகள் — இவை மூன்றையும்தான் இளந்தலைமுறையினரிடம் நான் எதிர்பார்க்கிறேன். இவை மூன்றும் சொல்லிலும் எழுத்திலும் செயலிலும் இணைந்திருக்குமேயாயின் வெற்றி அவர்கள் வீடு தேடி வரும். 'எங்கும் வெற்றி; எதனிலும் வெற்றி' எனப் பாரதி கொட்டி முழக்குகிறானே அந்த எக்களிப்பு நிலை இந்த எளிமை, வளமை, இளமை ஆகியவைகளில்தான் அடங்கியுள்ளது!

இளந்தலைமுறையின் ஏற்றமிகு செல்வமே, நீ எந்தத் துறையில் எதிர்காலத்தில் சேர்ந்தாலும் அந்தத் துறையில் இந்த மூன்று மந்திரங்களை இணைத்துக் கொள். இவை சிறப்பான வெற்றியை உனக்கு ஈட்டித் தரும்!

பொதுவாக மடல்கள் எழுதினாலும் சரி, பொதுத் தேர்வில் விடைகள் எழுதினாலும் சரி உன்னத அழகுடன் அவை அமைதல் வேண்டும். மேடைகளில் இசை மழையைப் பொழிந்தாலும் சரி, அல்லது ஆடைகளில் உன்னை அலங்கரித்துக் கொண்டாலும் சரி - ஓர் உன்னத அழகு இருத்தல் வேண்டும். அவ்வளவு ஏன்? மனப்பாடப் பாடல்களை ஒப்பிப்பதில் கூட ஓர் உன்னத அழகு முத்திரை அவசியம் தேவை!

இந்த உன்னத அழகினைத்தான், 'வாக்கினிலே இனிமை வேண்டும்,' என்று பாரதி குறிப்பிடுகிறார். வாக்கினிலே இனிமை எளிதில் வருவதல்ல; எல்லாருக்கும் வருவதல்ல! 'உள்ளத்தில் உண்மையொளி உண்டாயின் வாக்கினிலே ஒளியுண்டாகும்,' எனப் பாரதியே குறிப்பிடுகிறார்.

இத்தகைய அழகு நயம் என்பது ஆதி காலத்திலிருந்து வருவது; எதிர்காலத்திலும் நீடித்து நிற்பது! என்று இந்த அழகு குறைகிறதோ, அன்று உலகம் போர்க்களமாக மாறி மனிதர்கள் வாழவே பிரியப்படாத நரகமாக மாறி விடும். ஏனெனில், 'அழகுடன் எதனையும் சொல்கின்ற — எதையும் செய்கின்ற நயம்' என்பது உள்ளம் தூய்மையாக இருந்தால் மட்டுமே அமையக்கூடியது.

உனக்குப் பாடப் பகுதிகளாக வருகின்ற பாடல்களையே பார். சங்க



எதனையும் சொல்!


காலப் பாடல்களிலேயே பார். 'யாதும் ஊரே; யாவரும் கேளிர்' போன்ற பாடல்களைப் படிக்கும் பொழுது எவ்வளவு அழகாக உள்ளது!

ஔவையின் ஆத்திச் சூடியைப் பார். எத்தனை எளிமை, எத்தனை வளமை, எத்தனை இளமை! அதனையே பாரதி தன் பாணியில் கையாளும் பொழுது அதில் புதுமையும் தெரிகிறதே 'தெய்வம் நீ என்றுணர்; தீயோர்க்கு அஞ்சேல்; சிறுவோர்க்குச் சீறு; கோல்கை கொண்டு வாழ்; நுனியளவு செல்; நையப் புடை; முனையிலே முகத்து நில்; வெடிப்புறப் பேசு; வேதம் புதுமை செய்,' என்பன போன்ற புதிய கருத்துக்களை முன்னவர்கள் சொல்லிய அறவழிப் பாடல்களுக்கு எதிர்க் கருத்துக்களைப் பாரதி இயம்பும் பொழுது நம் இதயம் அதில் லயித்து விடுகிறதல்லவா? பல புதுமைகளை — காலத்தின் கட்டாயத்திற்காகப் பாரதியார் எடுத்து வைக்கின்ற நேரத்தே பழமையையும் விட்டுக் கொடுத்து விடவில்லை. 'நீதி நூல் பயில்; கூடித் தொழில் செய், ஞாயிறு போற்று, நோற்பது கைவிடேல், மேழி போற்று, மோனம் போற்று, யாரையும் மதித்து வாழ்; வருவதை மகிழ்ந்துண்' என்ற வகையில் எக்காலத்துக்கும் பொருந்துகின்ற பழமைக்கும் தன்

எளிமை
வளமை
இளமை
புதுமை
பழமை

5 'மை'கள்

பேரளம் புகழ்மதி

பாடல்களில் இடம் தந்து கௌரவிக்கிறார்.

இவ்வாறு உன்னத அழகுடன் சொல்லுகையில் சொல்லப்படும் சொற்களில், 'எளிமை, வ[illegible]மை, இளமை, புதுமை, பழமை,' [illegible] 'ற ஐந்து 'மை'கள் உள்ளதா [illegible]ன ஆராய்ந்து பார்க்க வேண்டும். இந்த ஐந்து 'மை' கொண்டு எவை ஆக்கப்பட்டிருந்தாலும் அவை உன்னத அழகுடன் உள்ளன என நாம் உணரலாம்.

உன் பாடப் பகுதியில் வருகின்ற கம்ப இராமாயணம், பெரிய புராணம், சிலப்பதிகாரம் போன்ற பல பாடல்களில் உள்ள சிற்சில வரிகள்—எடுத்துக்காட்டாகக் கம்ப இராமாயணத்தில், 'அன்றலர்ந்த செந்தாமரையை வென்றதம்மா,' பெரிய புராணத்தில் 'மை பொதி விளக்கேயன்ன மனத்தினுள கருப்பு வைத்து,' சிலப்பதிகாரத்தில், 'வண்ணச் சீரடி மண்மகள் அறிந்திவள்,' சங்க இலக்கியத்தில், 'அற்றைத் திங்கள் அவ் வெண்ணிலவில்...' என்ற பாரி மகளிர் பாடல் போன்றவை உன் நெஞ்சில் நீ இருக்கும் வரை பசுமையாக இருப்பதற்கு என்ன காரணம்? அவ் வரிகளில் காணப்படும் எளிமை, வளமை, இளமை, புதுமை, பழமை ஆகிய ஐந்து 'மை'களாகும்.

அறிவியல் துறைகளிலும் இதனை அறிவியல் மேதைகள் கடைப்பிடிக்கிறார்கள். ஆய்வரங்கத்தில் தங்களின் 'கண்டுபிடிப்பு'கள் பற்றிப் படிக்கப்படும் கட்டுரைகளில் இந்த ஐந்தும் அமைந்து வரும் விதத்தில் ஆக்கிக் கொள்கிறார்கள். படிக்கப்படுகின்ற எந்த ஆய்வுக் கட்டுரைகளிலும் இந்த ஐந்தும் கட்டாயம் இருக்கும்; இன்னும் சொல்லப் போனால் இந்த ஐந்தினால்தான் அவை ஆக்கப்பட்டிருக்கும்.

கட்டுரைப் போட்டிகளிலே நீ கலந்து கொண்டால் இந்த ஐந்தையும் மறவாதே. எடுத்துக்காட்டாக 'சேமிப்பு' என்ற தலைப்பில் கட்டுரை எழுதச் சொன்னால், ''பூவென்றால் பூவுலகில் விரும்பார் உண்டோ; எனினும் 'சேமிப்பு' என்றால் சிலருக்கு கசப்பு; சிலருக்கு வெறுப்பு; சிலருக்கோ அலுப்பு'' என்று தொடங்கினால் படிக்க எத்தனை சுவையாக இருக்கும்! பேச்சுப் போட்டிகளிலும் இதே விதத்தில் பேசத் தொடங்கினால் அவையிலுள்ளோர் சற்று ஆர்வத்தோடுகேட்கத்தொடங்குவார்கள்.

பேச்சு நிகழும் இடத்திற்குப் பொருந்தினாற் போல் சில நயங்களைக் கையாளும் பொழுது அவை அழியா இலக்கியங்களாகி விடும்.

குற்றாலத்தில் பருவ கால நேரத்தில் 'சாரல் விழா' நடப்பதுண்டு. சாரல் அற்புதமாக விழத் தொடங்குகின்ற காலகட்டத்தில் அவ் விழா நடத்தப்படும். ஒரு குறிப்பிட்ட ஆண்டில் சாரலே குற்றால அருவியில் விழவில்லை. அப்பொழுது விழாவை நடத்த வந்த தலைவர் அது பற்றிக் குறிப்பிடுகையில், ''நாம் நடத்துவது சாரல் விழா; எனவே சாரல் 'விழா''' ('விழாது' என்ற பொருள்பட) என்றார்.

ஒருமுறை மாணவர்கள் சென்னையில் மாநாடு நடத்தினர். அம் மாநாட்டில் நடந்த கவியரங்கில் 'தென்றல்', 'மக்கள்', 'நிலவு' ஆகிய தலைப்புகளில் கவிதை பாட வேண்டியவர்கள் வர இயலாமல் போய் விட்டது. தலைமை வகித்த தலைவர் கூறினார். ''கவியரங்கம் நடப்பது குளிர்சாதன அரங்கில்; எனவே 'தென்றல்' வரவில்லை. இது மாணவர்கள் நடத்தும் விழா; எனவே 'மக்கள்' வரவில்லை. இவ் விழா பகலில் நடைபெறுகிறது; எனவே 'நிலவு' வரவில்லை,'' என்றார். எத்தனை அழகுமிக்க சொல் நயம் இது!

எல்லா மொழிகளிலுமே இந்த



அப்படியா?!

ஸ்விட்சர்லாந்தில் உள்ள பாரி என்ற நாய்க்கு ஒரு சிலை உள்ளது. அது தன் வாழ்நாளில் 40 மனிதர்களைக் காப்பாற்றி இருக்கிறது. அதிக தூரத்தில் மனிதர்கள் ஆபத்தில் இருக்கிறார்கள் என்று உணர்ந்து, ஓடிச் சென்று உதவுமாம் இந்த நாய்.

அமெரிக்க ஜனாதிபதி பதவிக்கு 1828 இல் போட்டியிட்ட கல்வி அறிவு இல்லாத ஆண்ட்ரு ஜாக்ஸன் என்பவர் O.K. என்ற சொல்லைப் பயன்படுத்தினார். இதன் உண்மையான பொருளை இன்னும் ஆராய்ந்து வருகிறார்கள்.

சூவுரி பாஷாணம், வீரம், பூரம், லிங்கம், மனோசிலை, பாதரசம், அரிதார துத்தம், காபி என்ற கிழங்கு போன்ற கொடிய விஷம் உடைய இந்த ஒன்பதையும் போகர் என்ற சித்தர் சித்த வைத்திய முறைப்படி ஒரு கட்டுக்குள் அடக்கி செய்த சிலையே — பழனி முருகன் சிலையாம்.

எம். ஆனந்தன், வந்தவாசி.

நயங்கள்தான் இலக்கியங்களை வாழ வைக்கின்றன. உன்னத அழகுதான் அவைகளைச் சிரஞ்சீவிகளாக்குகின்றன. "**Men may come and men may go, But I go on for ever**" போன்ற பாடல்கள் உன் பாடப் பகுதியில் படித்திருப்பாயே; உன்னால் அவற்றை என்றாவது மறக்க முடியுமா?

இது போன்ற இலக்கிய உலகிற்கோ, அறிவியல், உலகிற்கோ மட்டும்தான் உன்னத அழகு தேவையென்று எண்ணி விடாதே. சாதாரணமாக நம்முடைய உரையாடலிலும் உன்னத அழகு ஒளி விட்டால் நம்முடன் பேசுவதற்கு அனைவரும் விரும்புவர். அப்படிப் பேச இயலாவிடின், 'சொல்றதைத் தெளிவாச் சொல்லேன்', 'சுருக்கமாச் சொல்லத் தெரியாதா உனக்கு?' 'சுவாரசியமாச் சொல்லேன்,' 'நயமாச் சொல்லேன்,' என்றெல்லாம் மற்றவர்கள் கடிந்து கொள்வதை நீ கேட்டிருக்கலாம்.

வள்ளுவர் கூடத் தன் பாடல்களில் மிக அழுத்தமாகச் சொல்கிறார்.

'விரைந்து தொழில் கேட்கும்
ஞாலம் நிரந்தினிது
சொல்லுதல் வல்லார் பெறின்,'

— இக் குறளில், "கருத்துக்களை ஒழுங்காகக் கோத்து இனிமையாச் சொல்ல வல்லவரைப் பெற்றால் உலகம் விரைந்து அவருடைய ஏவலைக் கேட்டு நடக்கும்," என்று கூறுகிறார். கருத்துக்களை ஒழுங்காகக் கோத்து இனிமையாகச் சொல்லுகின்ற கலையினைத்தான், 'உன்னத அழகுடன் எதனையும் சொல்,' என்ற வரிகளில் உனக்கு நினைவூட்டுகிறேன்.

ஆன்மீகம், அறிவியல், தத்துவம், அரசியல், பொருளியியல், வணிகவியல், இலக்கியம் ஆகிய அனைத்திலும் கருத்துக்களை ஒழுங்காகக் கோத்து இனிமையாகச் சொல்லுகின்ற உன்னத அழகு அவசியம் தேவை. இந்த உன்னத அழகால் ஆக்கப்பட்டவைதான் உலகினரின் கவனத்தை ஈர்க்கின்றன ; காலங்களைத் தாண்டியும் அமரத்துவம் பெறுகின்றன.

'சொல்லொன்று வேண்டும், எனப் பாரதி தவமிருந்தது இதற்காகவே. உன்னத அழகால் ஆக்கப்பட்ட இத்தகைய சொல்லைத் தேடித்தான் அறிஞர்களும் மேதைகளும் ஞானிகளும் தங்கள் வாழ்நாளை ஓட்டுகின்றனர்; உயிருக்குள்ளே நுழைந்து ஒளியூட்டுகின்ற இந்தச் சொல் கிடைத்த அன்றுதான் தாங்கள் பூரணத்துவம் அடைந்ததாக எண்ணுகிறார்கள்.

ஆதி சங்கரர் ஆரம்ப நாளில், ஒரு புலையன் தன் மீது பட்டு விட்டானே எனச் சீறியபொழுது அப்புலையன் கூறிய சொல் உன்னத அழகுடன் சங்கரரின் உள்ளத்தையே மாற்றி அவரை ஞானியாக்கியது! 'காதற்ற ஊசியும் வாராது காண் கடைவழிக்கே,' என்ற பட்டினத்தாரின் ஞான வரிகளில் ஊறியுள்ள உன்னத அழகு எத்தனையோ பேரை முனிவர்களாக்கியுள்ளது! 'பாட்டி, பழம் சுடுதா?' என்ற வரிகள் ஔவையாரையே ஒளி பொருந்தியவராக்கியது!

'ARISE, AWAKE AND STOP NOT TILL THE GOAL IS REACHED.' உன்னத அழகுடன் விவேகானந்தர் கூறிய இந்த வரிகள் எத்தனை இளம் உள்ளங்களை எழுச்சி மயமாக்கியது. **'THE CHILD IS THE FATHER OF MAN.'** எத்துணை அற்புதமான வரிகள்!


அறிவியல் பாடங்களில் நியூட்டன் விதிகள், எடிசன் எஃபெக்ட், ஐயின்ஸ்டின் தியரி போன்ற பல தத்துவங்களிலும், பொருளியலில் 'மார்க்ஸின் தத்துவம்' போன்றவற்றிலும், **'GOVERNMENT FOR THE PEOPLE...** போன்ற ஜனநாயக சித்தாந்தங்களிலும் நீ மனத்தைப் பறிகொடுத்துப் படித்து ஆசிரியர் கேட்கும் பொழுதும் தேர்வுத் தாட்களில் எழுதும் பொழு

தும் அற்புதமாகச் சொல்லியும் எழுதி யும் மகிழ்ந்திருப்பாய். இவ்வாறு எளிதில் ஒப்புவிக்கவும் மனத்தில் ஆழமாகப் பதிந்திருக்கவும் காரணம் அவற்றில் காணப்படும் உன்னத அழகே என நீயறிவாய். படிக்கும் பொழுதே உன் மனத்தில் பதியும் வகையில் எளிமையாகவும் வளமை யாகவும் இளமையாகவும் அவ் வரிகள் அமைந்திருக்கும்.

பொதுவாக எதைச் சொன்னா லும் புனிதம் தவறாத புதுமையோடு சொல். எதை நீ சொல்ல நினைத்தா லும் நீ சொல்ல நினைத்த துறையில் போதிய வலிவினை ஆக்கிக் கொள். அதற்கு நீ தேர்ந்தெடுத்துள்ள துறை யில் ஏராளமான நூல்களைப் படிக்க வேண்டும்; அது குறித்து அடிக்கடி சிந்திக்க வேண்டும்; ஆழமாகச் சிந்திக்க வேண்டும். நீ படித்த நூல் களில் உனக்கு ஒரு தெளிவு இருக்க வேண்டும்; எந்தச் சந்தேகமும் இல்லாமல் முதலில் நீ உன்னை ஆக் கிக் கொள்ள வேண்டும். அத்தகைய தெளிவு பெறுமுன் நீ எதைச் சொன் னாலும் நீயும் குழப்பத்தில் ஆழ்ந்து போவாய்; கேட்பவரையும் குழப்பத் தில் ஆழ்த்தி விடுவாய். ஆக 'வலிவு', 'தெளிவு' ஆகிய இரண்டையும் பெற்றபின் நீ சொல்வதைப் 'பொலி' வுடன் சொல்ல வேண்டும். கேட்டா ரைத் தன் வயப்படுத்தி கேளாதவரை யும் தன் பக்கம் கவரும் வகையில் பொலிவோடு உன் பேச்சு அமைய வேண்டும். ஆக 'வலிவு', 'தெளிவு', 'பொலிவு' ஆகிய மூன்றையும் நீ தேர்ந்தெடுக்கும் துறையில் அடைந்து விட்டால் உன்னை வெல்ல யாராலும் முடியாது.

உன் வலிவு, தெளிவு இரண்டை யும் வெளிப்படுத்துகின்றது எது? உன் பேச்சில் காணப்படும் பொலிவே. அந்தப் பொலிவில்தான் ஐந்து 'மை' கள் அடங்கியுள்ளன. எளிமை, வளமை, இளமை, புதுமை, பழமை இந்த ஐந்தும் உன் பேச்சில் பொலிவை ஏற்படுத்தும். இந்த உன்னத அழகு மட்டும் உன்னை அடைந்து விட்டால் நீதான் இந்த உல குக்கே கடவுள்!

(தொடரும்)



பிருந்தாவனக் கதையரங்கம்



சிறந்த கோமாளி!



நாட்டில் சிறந்த கோமாளித்தனம் செய்பவனுக்கும், அந்தக் கோமாளியை அழைத்து வருபவர்க்கும் தக்க பரிசுகள் வழங்கப்படும் என்றும், எத்தனை கோமாளி கள் வந்தாலும் அவர்களுக்கு இருக்க இடமும், உண்ண உணவும் இலவசம் என்றும் தருமாபுரத்தை ஆண்ட அரசர் சத்ரபதி முட்டாள்தனமான அறிவிப்பை வெளியிட்டார்.

அன்று முதல் அரண்மனையில் ஒரே கோமாளிகள் கூட்டம்தான். கோமாளிகள் செய்து காட்டும் சேஷ்டைகளைக் கண்டு களிக்கப் பொது மக்களும் பெருமளவு கூடி ரசித்தனர். ஆனால் கிட்டத்தட்ட ஒரு மாத காலம் ஓடியும் அரசர் சிறந்த கோமாளியைத் தேர்வு செய்யவே இல்லை. எவருமே அவர் நினைக்கும் அளவிற்கு—கோமாளித்தனங் களை செய்ய முடியவில்லை.

நாளுக்கு நாள் கோமாளிகளின் எண்ணிக்கை பெருகியது தங்களால் முடிந்த அளவில் கோமாளித்தனங்களை செய்து காட்டினர். மக்கள் விழுந்து விழுந்து சிரித்தனரே தவிர, அரசர் ஒருவரையும் தேர்வு செய்யவே இல்லை.

ஒரு நாள் — ஒரு வயோதிகன் அரசரை சந்தித்து, தான் ஒரு மிகச் சிறந்த கோமாளியைக் காட்டப் போவதாகவும் கண்டிப்பாக உலகிலேயே மிகச் சிறந்த கோமாளி அவனாகத்தான் இருக்க முடியும் என்றும் கூறினான்.

அந்த வயோதிகன் அழைத்து வரும் கோமாளியையும் அவன் சேஷ்டைகளையும் காணும் ஆவலில், அரசனும் மந்திரிகளும் பொது மக்கள் ஏராளமானோரும் அடுத்த நாள் சபையில் கூடியிருந்தனர். ஆனால் வயோதிகரோ தனியாகவே வந்தார்.

''எங்கே அந்தக் கோமாளி?'' அரசர் ஆர்வம் தாங்க முடியாமல் கேட்டார்.

''அரசே! கோமாளி இங்கு எனக்கு முன்பே வந்து விட்டார்...''

''என்ன...!''

''யார் அந்தக் கோமாளி? முன்னே வாரும்!'' உத்தரவிட்டார் அரசர்.

ஆனால் யாருமே முன்னால் வரவில்லை.

வயோதிகர் சொன்னார்:

''அவர் முன்னே வர மாட்டார். ஏனென்றால் அந்தக் கோமாளி தாங்கள்தான்!''

அனைவரும் அதிர்ச்சியில் அப்படியே உறைந்து போயினர்.

வயோதிகர் பொறுமையுடன் பேச்சைத் தொடர்ந்தார்.

''ஆம் அரசே! தங்களின் அறிவிப்பால் தற்போது தலைநகரில் கோமாளிகள் என்றும் அவரை அழைத்து வந்தவர் என்றும்

தினமும் ஆயிரக்கணக்கில் இலவசமாக உணவு உண்கின்றனர். இதற்கெல்லாம் பணம் ஏது? மக்களின் வேர்வை சிந்தி உழைப்பில் கிடைத்த வரிப்பணம்தானே.. நாட்டில் உள்ள சோம்பேறிகள் உணவு உண்டு கொழுப்பதற்குத் தங்கள் அறிவிப்பு சாதகமாகி விட்டது. அத்துடன் உழைப்பவர்கள் கூட நல்ல சுவையான உணவிற்கு மயங்கி கோமாளிகளாக மாறி வந்துள்ளனர். தலைசிறந்த கோமாளியைத் தங்களீ கண்டு பிடித்து பரிசு கொடுப்பதற்குள் கஜானாவும் காலியாகி விடும். அந்தக் கோமாளியால் நாட்டிற்கு எந்தப் பயனும் ஏற்படப் போவதும் இல்லை. இதைக் கூட அறியாமல் தாங்கள் இப்படி ஓர் அறிவிப்பை வெளியிட்டுள்ளீர் என்றால் தங்களை விட சிறந்த கோமாளி வேறு எங்காவது இருக்க இயலுமா?''

வயோதிகரின் ஒவ்வோர் வார்த்தையும் அரசரின் இதயத்தை சாட்டையாகக் கிழிக்க, தன் தவறை உணர்ந்து, அதைத் தைரியமாகச் சுட்டிக்காட்டிய வயோதிகருக்குப் பரிசுகளும் வழங்கிக் கௌரவித்தார்.

— மு. இருநாவுக்கரசு, மொரப்பூர்.

ஒரு நாட்டின் விலை?



பாக்தாத் நகரில் பேரரசர் ஒருவர் ஆட்சி செலுத்தி வந்தார். அவர் மிகவும் ஆடம்பரப் பிரியர்.

ஒருநாள், அரசர் தமது நண்பருடன் உட்கார்ந்துபேசிக்கொண்டிருந்தார். அரசருக்குத் தாகம் அதிகரித்தது. உடனே நீர் வரவழைக்கப்பட்டது. தண்ணீர்க் கோப்பையை எடுத்துக் குடிக்கத் தயாரானார். அரசரைத் தடுத்த நண்பர், ''அரசே! கொஞ்சம் பொறுங்கள். தங்களுக்குத் தீராத தாகம். அப்பொழுது தண்ணீரே கிடைக்கவில்லையெனில், தாகம் தீர்வதற்காக எவ்வளவு பணம் கொடுப்பீர்கள்?'' என்று கேட்டார்.

''அப்படிப்பட்ட நிலைமை ஏற்படின், ஒரு கோப்பை நீருக்காக என் நாட்டில் ஒரு பாதியைக் கொடுத்தேனும் வாங்கிக் கொள்வேன்,'' என்றார் அரசர். ''மன்னரே! இப்போது இந்தத் தண்ணீரை அருந்துங்கள்,'' என்றார் நண்பர்.

அரசர் நீரைப் பருகினார்.

''இப்போது குடித்த தண்ணீரைச் சிறுநீர் கழிக்க முடியாவிட்டால், குடித்த நீரை வெளியேற்ற எவ்வளவு செலவு செய்வீர்கள்?'' என்று திரும்பக் கேட்டார் நண்பர்.

''என் நாட்டில் பாதியைக் கொடுத்து விடுவேன்!''

''அரசே! ஒரு கோப்பைத் தண்ணீர், சிறுநீர் — இவற்றின் விலைதானா உங்கள் நாடு! இந்தக் கீழான நாட்டை ஆள இவ்வளவு ஆடம்பரமா?''

இதைக் கேட்டுத் தம் ஆடம்பரங்களை எண்ணிக் கண்ணீர் உகுத்த மாமன்னர் தம்மை எளிய வாழ்க்கைக்கு மாற்றிக் கொண்டார்.

— ஆர். ஆமினா பீவி, நீடூர்.

கூடை சொன்ன சாட்சி



அந்த ஊர் வியாபாரி முருகனுக்கு மக்களிடம் நல்ல பெயர்.

ஒருநாள் முருகன் வழக்கப்படி கூடை நிறைய அரிசியை எடுத்துக் கொண்டு விற்கச் சென்றான். ஒரு வீட்டின் வாசலில் கூடையை வைத்துவிட்டுப் பக்கத்தில் இருந்த கிணற்றில் தண்ணீர் குடித்துவிட்டு வந்து பார்த்த போது, கூடை காணாமல் போயிருந்

தது.

அவன் தெருவில் உள்ள அனைவரையும் கூட்டி, "என் கூடை காணாமல் போய் விட்டது. அதை யாராவது பார்த்தால் என்னிடம் வந்து கூறுங்கள்," என்று கேட்டுக் கொண்டான்.

அன்று மாலை முருகன் சாலை வழியாகச் சென்ற போது தன் கூடை ராமு என்ற ஒருவன் கையில் இருப்பதைப் பார்த்தான். அவனிடம் சென்று கேட்டான்.

உடனே ராமு கூடை தன்னுடையது என்று கூறினான். இருவருக்கும் சாலை ஓரமாகப் பெரும் தகராறு நடந்தது. கடைசியில் இருவரும் அரண்மனைக்குச் சென்று அரசனிடம் இதுபற்றி முறையிட்டனர்.

அரசர், "இது யாருடைய கூடை?" என்று கேட்டார்.

"என்னுடையதுதான் அரசே. இந்தக் கூடையில்தான் நான் பல ஆண்டுகளாக எடுத்துச் சென்று வியாபாரம் செய்து வாழ்க்கையை நடத்திக் கொண்டு வருகிறேன்," என்று முருகன் சொன்னான்.

"இது என்னுடைய கூடைதான் அரசே. பல ஆண்டுகளாக இதில் பருப்பு வியாபாரம் செய்து வருகிறேன்," என்றான், ராமு.

அரசர் காவலாளியை ஒரு பிரம்போடு வரச் சொன்னார். பிரம்பை ஓங்கிக் கூடையின் மீது அடி என்று அரசர் கட்டளையிட, காவலாளி ஓங்கி ஓங்கிக் கூடை மீது அடித்தார். கூடை துள்ளிக் குதித்துக் கவிழ்ந்தது. கூடை இருந்த இடத்தில் அனைவரையும் அரசர் பார்க்கச் சொன்னார். கூடை இருந்த இடத்தில் இரண்டு மூன்று அரிசி மணிகள் கிடந்தன.

அரசர் முருகனிடம், "இது உன் கூடைதான். இதோ கூடையே சாட்சி சொல்லி விட்டது. எடுத்துக் கொள்," என்று கூறினார். ராமு செய்த தவறுக்குத் தக்க தண்டனையும் வழங்கினார்.

— ஜே. சித்ராங்கதன்,
திருத்துறைப்பூண்டி.

புத்தியுள்ளவன் பலவான்



ராஜாவும், கண்ணனும் இணை பிரியாத நண்பர்கள். அவர்கள் இருவரும் தங்கள் ஊர் மேல்நிலைப் பள்ளியில் பதினொன்றாம் வகுப்பு படித்து வருகின்றனர். இருவரும் தாங்கள் பார்த்த திரைப்படத்தைப் பற்றி, சுவாரசியமாகப் பேசியபடி வந்து கொண்டிருந்தனர்.

திடீரென்று அவர்களை மறித்தது ஓர் இரும்புக்கரம். இருவரும் திடுக்கிட்டுப் பார்க்க —

அவர்கள் முன் முரடன் ஒருவன் கத்தியுடன் நின்று கொண்டிருந்தான். நிலவின் ஒளியில் அவனுடைய கத்தி பள, பளவென மின்னியது.

அவன் கரகரத்த குரலில் அவர்களை நோக்கி, "டேய் தம்பிகளா! மரியாதையா நீங்க இரண்டு பேரும் கையில் போட்டிருக்கிற வாட்சையும், விரலிலே போட்டிருக்கிற மோதிரத்தையும் கழட்டுங்கடா!" என்றான்.

அவன் அப்படிச் சொன்னவுடன் இருவருக்கும் பயத்தில் வியர்க்க ஆரம்பித்து விட்டது. திக்பிரமை பிடித்தது போல் நின்றனர்.

"டேய்...! சீக்கிரம் கழட்டுங்கடா!" — திருடன் அதட்டினான்.

ராஜா வாட்சைக் கழற்றுவதற்குத் தயாரானான். அப்போதுதான் கண்ணனுக்குத் திடீரென்று அந்த யோசனை தோன்றியது.

"அண்ணே! எங்களை விட்டுடுங்க!" என்று கூறியபடி, அவன் முரடனின் காலில் விழுவது போல் பாசாங்கு செய்து, திடீரென்று மண்ணை அள்ளி, முரடனின் கண்களில் வீசினான்.

திருடன் கண் தெரியாமல் திசை மாறிப் போனான். அந்தச் சொற்ப நேரத்தைப் பயன்படுத்தி, இருவரும் திருடனின் கையில் இருந்த கத்தியைத் தட்டிவிட்டு, அவனைக் கீழே தள்ளி, சரமாரியாகத் தாக்கினர். அவர்களின் திடீர்த் தாக்குதலைச் சமாளிக்க முடியாமல் முரடன் மூர்ச்சையானான்.

பிறகு, இருவரும் சேர்ந்து அக்கம் பக்கத்தில் உள்ளவர்களை உதவிக்கு அழைத்து வந்து, அந்த முரடனை அவர்கள் ஊர்க் காவல் நிலையத்தில் ஒப்படைத்தனர்.


அவர்களுடைய துணிச்சலைக் காவல் துறையினரும், அவ்வூர் மக்களும் வியந்து பாராட்டினர்.

இக்கதையிலிருந்து ஆபத்து வருங்காலத்தில், அஞ்சாமல் புத்திசாலித்தனமாகச் செயல்பட்டால், எந்த ஆபத்தையும் வெற்றி கொள்ளலாம் என்பது தெரிகிறதல்லவா?

— கே. எல். ரமணன், கல்லிடைக்
குறிச்சி.

உண்மைக் கதை

கையைக் கடித்த முதலை!



ஆஸ்திரேலியாவின் கடற்கரை நகர் சிட்னியின், புகழ்பெற்ற போண்டி கடற்கரை அமர்க்களப் பட்டது. குடும்பத்தோடு கடல் குளியல் ஆஸ்திரேலியர்களுக்கு ஒரு விருப்பமான பொழுதுபோக்கு.

திடீரென்று ஏதோ அரக்கனைக் கண்டது போல் எல்லோரும் அலறினர்! பாதிக் குளியலிலேயே பலரும் கலவரமடைந்து கரையேறினர்.

இவ்வளவுக்கும் காரணம், கடலில் அவர்களோடு குளிக்க வந்து விட்ட ஒரு முதலை!

குளித்து விட்டுக் கரையில் அமைதியாக உடலைத் துடைத்துக் கொண்டிருந்த கேசியைக் கண்டதும் கூட்டத்தினரின் ஆத்திரம் அதிகமாயிற்று! எல்லோரும் அவர்மேல் சீறிப் பாய்ந்தனர். காரணம், அவர்தான் அந்த முதலையைச் செல்லமாக வளர்த்து வருபவர்!

"அதுவும் முடியாது உங்களால். சார்லீனை இரண்டு இலட்சம் ரூபாய்க்கு இன்ஷ்யூர் பண்ணியிருக்கேன். அதோடு, அதற்கு யாராலெல்லாம் ஆபத்து நேரக்கூடும் என்ற பட்டியலையும் கொடுத்திருக்கிறேன். அதில் முதல் பெயர் உங்களுடையது தான். என் சார்லீனுக்கு வேறு யாராலாவது ஆபத்து ஏற்பட்டால் கூட, அரசாங்கம் உங்களைத்தான் முதலில் விசாரிக்கும். அதோடு, இப்பொழுது நீங்கள் மிரட்டியதையும் நான் உடனே அரசுக்கு அறிவித்து விடப் போகிறேன்," என்றார் கேசி அமைதியாக.

ஆஸ்திரேலியாவின் சிட்னி நகரவாசியான கேசி ஓர் அரசுப் பணியாளர். வேட்டையாடுவதில் பெரும் விருப்பம் கொண்ட அவர், விடுமுறை நாட்களில் துப்பாக்கியோடு கிளம்பி விடுவார்.

ஒருமுறை நதியில் புதிதாகப் பிறந்த குட்டியோடு தாய் முதலை ஒன்று விளையாடிக் கொண்டிருந்தது. கேசி அதன் அடிவயிற்றுக்குக் குறி வைத்தார். தாய் முதலை துடிதுடித்தபடி அவர் இருந்த கரைக்கு நீந்தி வந்து, மிகவும் சிரமப்பட்டுக் கால்களால் ஊர்ந்து அவரது காலடிக்கு அருகே நிமிர்ந்து பார்த்து உயிரை விட்டது! அவர் முதுகிலிருந்து குதித்த குட்டி அவர் கால்களில் ஏறி விளையாடியது! அந்த நிகழ்ச்சி கேசியின் மனத்



ஹரிசிங்


தைத் தொட்டது. அன்றே அவர் துப்பாக்கிக்கு விடை கொடுத்தார். குட்டி முதலையைத் தன்னுடன் எடுத்து வந்து சார்லீன் என்று பெயரிட்டுச் செல்லமாக வளர்க்கத் தொடங்கினார்.

தொடக்கத்தில் கேசியின் குடும்பத்தினரோடு, ஊர்க் குழந்தைகளும் சார்லீனைத் தூக்கி வைத்துக் கொண்டு கொஞ்சினர். சிறந்த செல்லப் பிராணிக்கான பரிசையும் பலமுறை வென்று புகழ்பெற்றது!

பொதுநலப் பணி நிதிக்காக நடைபெற்ற பல கண்காட்சிகளில் சார்லீன் பங்குகொண்டது. அதற்குத் தனியாக ஒரு ஸ்டால் ஒதுக்கினார்கள். அது பேண்ட், டை அணிந்து நடனமாடியது! ஊஞ்சலாடியது! ஏணி மேல் ஏறிச் சறுக்கி வந்தது! பந்தை உருட்டி விளையாடியது! பூனையையும், நாயையும் முதுகிலேற்றிக் கொண்டு நீந்தி வந்தது! அதன் விளையாட்டுக்களைப் பார்க்கவே ஏராளமான மக்கள் வந்தனர். தொலைக் காட்சியிலும் சார்லீன் பங்கு கொண்டு பெரும்புகழ் பெற்றது.

கேசியின் குடும்பத்தினர் அனைவரும் சார்லீனைத் தங்கள் குடும்பத்தில் ஒருவராகவே எண்ணி அன்பு காட்டினர். டின்னர் மேசையில் அதற்கும் இடம் ஒதுக்கியிருந்தனர்.

நாளாக ஆக, சார்லீன் வளர வளரப் பிரச்னைகள் தோன்றின. அது குட்டியாகக் கைக்கு அடக்கமாக இருந்த போது, கையில் தூக்கி, இடுப்பில் வைத்துக் கொண்டு கொஞ்சி விளையாடிய குழந்தைகள் இப்பொழுது அதன் வளர்ந்த தோற்றத்தைக் கண்டு அஞ்சினர். கேசியின் குடும்பத்தினரைத் தவிர மற்றவர்கள் அதைக் கண்டு மருண்டு விலகினர்.



ஆட்கொல்லி இனமான சார்லீனைச் சுட்டு விட வேண்டும், அல்லது முதலைப் பண்ணையில் சேர்த்து விட வேண்டும் என்று அக்கம் பக்கத்தார் நகராட்சிக்கு மனு அனுப்பினர்! சார்லீன், இதுவரை எந்த ஒரு சிறு உயிருக்காவது தீங்கு செய்ததாக யாராவது நிரூபித்தால் நானே அதைச் சுட்டுக் கொன்று விடுகிறேன் என்று சார்லீன் வாதாடி வென்றார். யாராலும் அப்படி ஒரு நிகழ்ச்சியை நிரூபித்துக் காட்ட முடியவில்லை.

ஊராரின் எதிர்ப்பு அதிகமாக ஆகக் கேசிக்கும், சார்லீனுக்கும் இடையே இருந்த பாசப் பிணைப்பு அதிகமாகியது. காலம் ஓடியது. கேசிக்கு இப்பொழுது எழுபத்தொன்று வயதாகி விட்டது. சார்லீன் அவரிடம் வந்து இருபத்து மூன்று ஆண்டுகளாகி விட்டன! அது இப்பொழுது ஏழரை அடி நீளமுள்ள பயங்கரமான தோற்றத்தோடு இருந்தது. தரையில் முன் போல் அதனால் வேகமாக நடந்து வேடிக்கை காட்ட முடியவில்லை. கடல் குளியலுக்காகக் காரில் ஏற்றிக் கொண்டு போனால் கூடக் காரிலிருந்து நீருக்குக் கொண்டு போய் விட, மறுபடி எடுத்து வர ஆறு பேர் உதவி தேவைப்பட்டது. அதனால், கேசி தன் வீட்டின் காம்பவுண்டுக்குள்ளேயே ஒரு குளத்தைக் கட்டியிருந்தார்.

சார்லீன் பெரும்பாலும் அந்தக் குளத்தில்தான் படுத்திருக்கும். குழந்தைகளோ மற்றவர்களோ அழைத்தால் வெளியே வந்து விளையாடி மகிழ்விக்கும். டைனிங் மேசையில் ஏறி அவர்களோடு சாப்பிட்டு விட்டுத் திரும்பப் போய் விடும். சில நாட்களில் அதனால் சாப்பிடக் கூட வர முடியாது. உடல்படுத்தும். அப்பொழுதெல்லாம், கேசியின் பிள்ளைகளோ, அல்லது கேசியோ தாங்களே



"பகைமைக்கு எதிர்ப்பதம் சொல்லு?

"எருமை!"

— சி. பன்னீர்செல்வன், செங்கல்பட்டு

தட்டில் உணவைக் கொண்டு வந்து, அதை வாயைத் திறக்கச் சொல்லித் திணித்து விட்டுப் போவார்கள்.

அன்றும் அப்படித்தான். சார்லீன் சாப்பிட டைனிங் மேசைக்கு வரவில்லை. அதற்காகத் தட்டு நிறைய முள் எடுத்த பச்சை மீன்களை வைத்திருந்தார்கள். கேசி தட்டை எடுத்துக் கொண்டு குளத்திற்கு வந்து விசில் அடித்து அழைத்தார். சார்லீன் கரைக்கு வந்து வாயைத் திறந்தது. கேசி, ஒவ்வொரு மீனாக எடுத்து அதன் வாய்க்குள் கையை விட்டுத் தொண்டையில் திணித்தார். இது வழக்கமான நிகழ்ச்சியே என்றாலும் அன்று ஒரு விபரீதம் நடந்து விட்டது. மீன் கொடுத்த கேசியின் வலது கையை சார்லீன் கடித்து விட்டது! கேசி அங்கேயே மயங்கினார்! அவரை மருத்துவமனையில் சேர்த்தனர். கையை எடுக்கும்படி ஆயிற்று!

சார்லீனுக்கும் கேசிக்கும் இடையே இருந்த அதிசயமான பாசப் பிணைப்பைக் கண்டு பொறாமைத் தீயால் வெந்து கொண்டிருந்த அக்கம் பக்கத்தவருக்கு இது பால் பாயசம் குடித்த மாதிரி இருந்தது. 'சார்லீன்தான் ஆட்கொல்லியே என்பதைத் தன்னிடம் அன்பைப் பொழிந்து வளர்த்த கேசியின் கையைக் கடித்ததன் மூலம் நிரூபித்து விட்டது. கையைக் கடித்து விட்ட அது, இனி வாய்ப்புக் கிடைத்தால் மனிதரையே விழுங்கத் தொடங்கும். அதனால் அதைச் சுட்டு விட வேண்டும்,' என்று மாநகராட்சிக்கு விண்ணப்பித்தனர்.

தந்தைக்கு நினைவு திரும்பியதும், அவரிடமே கேட்கிறோம். அவர் சம்மதித்தால் சுட்டு விடலாம். அது வரை முதலைப் பண்ணையில் சார்லீன் இருக்கட்டும் என்று மாநகராட்சியுடன் வாதாடி அனுமதி பெற்றான் கேசியின் மகன்.

மூன்று வாரங்கள் முடிந்த பிறகு ஒருவழியாகக் கேசி கண்விழித்தார். முதலில் கேட்ட கேள்வி: "சார்லீன் எங்கிருக்கிறது? கொண்டு வாருங்கள்."


அவரது மகன் நிலையை விளக்கினான்.

"சார்லீன் கையைக் கடித்தது என் முட்டாள்தனத்தால். அதற்கு வைத்திருந்த பச்சை மீன்களில் ஒன்றில் சரியாக முள் எடுக்கவில்லை. அதை அதன் தொண்டைக்குள் வைத்த பிறகுதான் கவனித்தேன். அதை வெளியே எடுக்க முயன்றேன். அதற்கு முன்னாலேயே அது சார்லீனின் தொண்டையில் இறுகச் சிக்கிக் கொண்டு விட்டது. நான் இழுத்ததும் அது வலி தாங்காமல் வாயை மூடி விட்டது. வாயை மூடுவதால் என் கையை நான் இழக்கும்படி நேரும் என்பது மட்டும் அதற்குத் தெரிந்திருந்தால், என் சார்லீன், முள் குத்தும் வலியைக் கூடப் பொறுத்துக் கொண்டு வாயைத் திறந்து கொண்டே இருந்திருக்கும். என்னுடைய கவனக்குறைவால் ஏற்பட்ட விபரீதத்திற்கு அதைக் குறை கூறாதீர்கள். உடனே அதைக் கொண்டு வாருங்கள். என்னையும் சார்லினையும் பிரித்து விடாதீர்கள்" என்று அழுதார் கேசி.

முதலைப் பண்ணையிலிருந்து தகவல் வந்தது. வந்த நாளிலிருந்து சார்லீன் இரை கொள்ளாமல் கரையிலேயே கிடக்கிறதாம்! அதைக் காரில் போட்டுக் கொண்டு வந்தார்கள். கேசியின் படுக்கையில் அது ஏறி அவர் உடலோடு உரசித் தன் அன்பை வெளியிட்டது!

உண்மையான பாசத்துடன் பழகினால் ஆட்கொல்லி வகை விலங்கையும் கூட அன்பினால் அடிமை கொள்ளலாம் என்பதைக் கேசி நிரூபித்துக் காட்டினார். சிட்னி மாநகராட்சி அந்த அன்புக்குத் தலை வணங்கியது!

எல்லாம் தெரிந்த டாக்டர்!



மூன்னொரு காலத்தில் ஏழைக் குடியானவன் ஒருவன் வாழ்ந்து வந்தான். ஒரு சின்ன நிலம், இரண்டு சக்கர கட்டை வண்டி, இரும்புக் கோடரி ஒன்று இவைதான் அந்தக் குடியானவனின் பெரிய சொத்து.

அவனுடைய பெயர் மீனப்பன். மீனப்பன் அவனுடைய நிலத்திலிருக்கும் வேண்டாத மரத்தையெல்லாம் கோடரியால் வெட்டி, விறகாக்கிக் கட்டை வண்டியில் ஏற்றி இழுத்துக் கொண்டு போய் விற்பான். விற்ற பணத்தைக் கொண்டு ஏதோ ஓரளவு குடும்பம் நடத்தி வந்தான்.

ஒரு நாள் அவன் விறகை ஏற்றிக் கொண்டு ஒரு டாக்டரின் வீட்டை அடைந்தான். டாக்டரும் அவன் கொண்டு வந்த விறகினை வாங்கிக் கொண்டு, பணம் எடுத்து வர உள்ளே போனார். அந்த இடைவேளையில் அவருடைய சாப்பாட்டு மேஜையை மீனப்பன் பார்க்க நேர்ந்தது.

சாப்பாடு என்றால் மீனப்பன் அகராதியில் ஏதோ கொஞ்சம் வடித்த சாதம், குழம்புதான் கண்டிருக்கிறான். ஆனால் டாக்டர் சாப்பாட்டு மேஜையில் அடுக்கி வைத்திருந்த சூப்பும் சாலடும் பொரியலும் குழம்பு வகைகளும் கோழி வருவலும் நண்டு பொரியலும் மீன் வறுவலும் அவனை வாய் பிளக்க, உமிழ்நீர் சுரக்க வைத்தது. அதிலிருந்து வந்த வாசனை அவன் மூளையைக் கிறங்க அடித்தது.


அவன் மனசுக்குள், 'சே, இருந்தால் இந்த டாக்டரைப் போல நன்றாகச் சாப்பிட்டுக் கொண்டு சுக ஜீவனம் நடத்த வேண்டும். நம்முடைய பிழைப்பும் இருக்கிறதே! ஒன்றுமில்லாத ஒரு சாப்பாடு. நாமும் ஏன் டாக்டராக மாறக் கூடாது! அப்புறம் இவரைப் போல் சுகவாழ்வு வாழலாம். இந்த டாக்டர் நல்லவராகத் தெரிகிறார், நாம் இவரையே கேட்டு ஒரு டாக்டராக ஆகலாம்,'' என்று நினைத்தான்.

மீனப்பன் கையில் டாக்டர் பணத்தைக் கொடுத்து விட்டு, ''என்னப்பா, என்ன யோசனை? பணம் சரியாக இருக்கிறதா பார்த்துக் கொள்,'' என்றார்.

''ஐயா, பணம் எல்லாம் சரியாகத்தானிருக்கும். எனக்கு ஒரு ஆசை. அதை உங்களிடம் கேட்டால் தப்பாக நினைத்துக் கொள்ள மாட்டீர்களே?''

மூலம் : கிரிம் சகோதரர்கள்

தமிழில் : எஸ். சித்ரா



"அவன் எப்போ காய்கறிக் கடைக்குப் போனாலும் 'கத்திரி'க்காயும், 'ஊசி' மிளகாயும், 'நூல்'கோலையும் மட்டும் வாங்கறானே! ஏண்டா?"

"அவன் 'டெய்லரோட' மகனாம், அதான்!"

— மு. திருநாவுக்கரசு, மொரப்பூர்.

தலையைச் சொறிந்து கொண்டே பீடிகை போட்டான்.

டாக்டர், "எதுவாயிருந்தாலும் தயங்காமல் கேள். என்னால் முடிந்த உதவியைச் செய்கிறேன்," என்றார்.

"டாக்டர்! எனக்கு உங்களைப் போலவே ஒரு டாக்டராக ஆக வேண்டுமென்று ஆசை. அது எப்படி என்றுதான்..." என்று மீனப்பன் இளித்தவாறு கேட்டான்.

"அதென்ன பிரமாதம்! நீயும் டாக்டராக ஆகலாம். என்னைப் போல் வாழலாம். அதற்கு முதல் வேலையாக உன்னுடைய மாட்டு வண்டியையும் நிலத்தையும் விற்று, அந்தப் பணத்தைக் கொண்டு நல்ல துணிமணிகளை வாங்கிக் கொள். பிறகு கொஞ்சம் மருந்து, மாத்திரைகள், இது போல மருத்துவ சம்பந்தமான சாமான்களையெல்லாம் மொத்தமாக வாங்கிக் கொள். அப்புறம் ஏ. பி. சி. படம் போட்ட புத்தகம். அதில் சேவல் படம் இருக்க வேண்டும் — அதை வாங்கிக் கொள். கடைசியாக, ஒரு பெரிய பெயர்ப் பலகை எழுதி வாங்கிக் கொள். அதில், 'எல்லாம் தெரிந்த டாக்டர்' என்று இருக்க வேண்டும். அதை உன் வீட்டு வாசலில் மாட்டி வைத்துக் கொண்டால் போதும். அப்புறம் நீதான் டாக்டர். எல்லாம் தெரிந்த டாக்டர். போய் வா. வெற்றி பெற வாழ்த்துக்கள்," என்று வாழ்த்தியனுப்பினார்.

மீனப்பன் டாக்டர் சொன்ன கருத்துக்களையெல்லாம் சிரமேற்கொண்டு சரிவரச் செய்து முடித்தான். பளிச்சென்று உடை உடுத்து, வீட்டில் மருந்து புட்டிகளை அடுக்கி, கண்ணாடியை மாட்டிக் கொண்டு பெரிய மேசை, நாற்காலி போட்டுத் தோரணையாக உட்கார்ந்து கொண்டான்.

தன்னைக் கண்ணாடியில் பார்த்துக் கொண்ட போது தனக்கே அடையாளம் தெரியாதவண்ணம் மாறியிருந்தான். அசல் டாக்டர் தோற்றாற் போன்ற தோற்ற மிடுக்கு அவனை அசர வைத்தது. பெருமை பொங்க மூக்குக் கண்ணாடியைத் துடைத்து மாட்டிக் கொண்டு உட்கார்ந்தான் மீனப்பன்.

'டொக் டொக்' கதவு தட்டும் ஓசை கேட்டு நிமிர்ந்தவன், "யாரது? உள்ளே வாருங்கள்," கம்பீரமாகச் சொன்னான்.

உள்ளே வந்தவர் நல்ல செல்வந்தராகத் தெரிந்தார். கும்மென்று செண்ட் மணம் முன்னே அடிக்க, பளபள ஆடையில் கனவான் போன்றிருந்தவர், "எல்லாம் தெரிந்த டாக்டர் என்பது நீங்கள்தானா? நான் இந்த ஊரில் ஒரு பெரிய புள்ளி. பெயர் ராஜசேகரன்," என்றார்.

வந்தவர் பெரிய ஆள் என்பதையறிந்து கொண்ட மீனப்பன், "வாருங்கள் வாருங்கள்," என்று எழுந்து நின்று வரவேற்றான். "நான் உங்களுக்கு எந்த விதத்தில் உதவி செய்யலாம்?" என்று கேட்டான்.

உடனே ராஜசேகரன், "என் வீட்டில் பணம், நகைகள் எல்லாம் யாரோ திருடி விட்டார்கள். உங்களால் கண்டுபிடித்துத் தர முடியுமா? என்னோடு கூட என் வீட்டிற்கு வந்தால் நன்றாயிருக்கும்," என்றார்.

"அவசியம் வருகிறேன். கூடவே என் மனைவி ராஜாத்தியையும் அழைத்து வர அனுமதி தருவீர்களா?" என்று கேட்டான் அவன்.

"நிச்சயம், யாரை வேண்டுமானா



னும் அழைத்து வாருங்கள். எனக்கு, களவு போன என்னுடைய பொருட்களை மீட்டுத் தர வேண்டும். அவ்வளவுதான்,'' என்றார்.

''உங்கள் பொருட்களை மொத்தமாக மீட்டுத் தருவது என்னுடைய பொறுப்பு. கவலையை விடுங்கள். இதோ உங்களோடு வருகிறோம்,'' என்று சொல்லி, மனைவி ராஜாத்தியையும் அழைத்துக் கொண்டு அவர் வண்டியில் ஏறிக் கொள்ள, எல்லோரும் செல்வந்தர் மாளிகையை அடைந்தார்கள்.

அவர்கள் போய்ச் சேர்ந்த நேரம் இரவுச் சாப்பாட்டு நேரம். ஆகையால் செல்வந்தரும் இருவரையும் தன்னோடு உணவு உண்ண அழைத்தார்.

அனைவரும் சாப்பாட்டு மேஜையில் குழுமியிருந்தார்கள். முதல் முதலில் ஆவி பறக்கும் சூப்பை எடுத்துக் கொண்டு வேலையாள் ஒருவன் வந்தான்.



அவனைப் பார்த்ததும் மீனப்பன் தன் மனைவியிடம் இதுதான் நாம் சாப்பிடப் போகும் விருந்துக்கு முதல் படி என்னும் அர்த்தத்தில், ''ராஜாத்தி, இதுதான் முதல் ஆள். நான் சொல்லவில்லை?'' என்று கிசுகிசுப்பான குரலில் சொன்னான்.

அதைக் கேட்ட முதல் வேலையாள் வியர்த்து விறுவிறுத்துப் போனான். அவன் கை காலெல்லாம் உதறலெடுத்தது. ஏனென்றால் செல்வந்தர் வீட்டில் களவு போன பணம், நகையெல்லாம் வேலையாட்கள் ஒன்று சேர்ந்து திருடியிருந்தார்கள். வந்திருக்கும் விருந்தாளி, அதைத்தான் கண்டு பிடித்து விட்டான் என்று நினைத்து விட்டான். ''முதல் ஆள் இவன்தான் என்று என்னைக் காண்பித்துச் சொன்னான்,'' என்று அந்த வேலையாள் மற்ற ஆட்களிடம் போய்ச் சொன்னான்.

செய்தியைக் கேட்ட மற்றவர்களுக்கும் பயம் தொற்றிக் கொண்டது. என்ன செய்வது என்று புரியாமல் குழம்பி நின்றார்கள்.

இரண்டாவது வேலையாள் போன போது வழக்கம் போல் மீனப்பன், ''இதோ இரண்டாவது ஆள்,'' என்று சொன்னான்.

இப்படியாக மூன்றாவது, நான்காவது என்று வந்த ஆட்களையெல்லாம் அடையாளம் காட்டிப் பேசுகிறான் மீனப்பன் என்று எடுத்துக் கொண்ட வேலையாட்களெல்லாம் ஒன்று கூடிப் பேசி, இனிமேலும் நாம் ரகசியத்தைப் பாதுகாக்க முடியாது என்று ஒரு மனதாகத் தீர்மானித்து, மீனப்பனை அணுகி அவனுடைய புத்திசாலித்தனத்தைச் சோதிக்க நினைத்து, ஒரு பாத்திரத்தில் மீன் வறுவலை வைத்து மூடிக் கொண்டு அருகில் போனான் ஓர் ஆள்.

அவன் அடிக்குரலில், ''டாக்டர், நீங்கள் பெரிய புத்திசாலி என்று தெரிந்து கொண்டோம். இதோ இந்தப் பாத்திரத்தில் என்ன இருக்கிறது என்று உங்களால் சொல்ல முடியுமா?'' என்று கேட்டான்.

குழம்பிப் போன மீனப்பன் தனக்குள்ளாகவே பேசும் நோக்கத்தில், ''மீனா... மீனப்பா..'' என்று அழைத்துக் கொண்டான் வாய் விட்டு.

அவன் சரியாகக் கண்டுபிடித்து விட்டான் என்று நினைத்து, ''அட, ஆமாம். மீன்தான்!'' என்று வியந்து சொல்லி விட்டு அந்த இடத்தை விட்டு அகன்றான் அந்த ஆள்.

எல்லாத் திருட்டு வேலைக்காரர்களும் ஒன்றாகச் சேர்ந்து, ''இனிமேல் நாம் தப்பிக்க முடியாது. வந்திருக்கும்



டாக்டர் எல்லாவற்றையும் கண்டுபிடித்து விட்டார். நாம் நேராகப் போய்த் திருட்டை ஒப்புக் கொள்வது தான் நல்லது, வாருங்கள்,'' என்று பேசிக் கொண்டு எல்லோரும் ஒன்றாகப் போனார்கள்.

''டாக்டர், நாங்கள் எல்லோரும் சேர்ந்துதான் முதலாளியின் பணம் நகையெல்லாம் திருடினோம். நீங்கள் அந்த விஷயத்தை வெளியே சொல்லி விடாதீர்கள். நகைகள் எல்லாம் இருக்கும் இடத்தைக் காண்பித்து விடுகிறோம். எங்களைக் காப்பாற்றுங்கள்,'' என்று சரணடைந்தார்கள்.

மீனப்பனும், பாவம் என்று அவர்களை மன்னித்து விட்ட மாதிரியும் விஷயத்தைத் தானே கண்டுபிடித்தது போலவும் செல்வந்தரிடம் பாவனை செய்ய நினைத்து அவனுடைய ஏ.பி.சி புத்தகத்தை எடுத்து வைத்துக் கொண்டு பக்கம் பக்கமாகத் திருப்பினான்.

முதல் முறையாக அப்பொழுது தான் அந்தப் புத்தகத்தை அவன் பார்க்கிறான். ஆகையால் அதில் அவனுக்கு வித்தை கற்றுத் தந்த டாக்டர் சொன்ன சேவல் படம் இருக்கிறதா என்று ஆவலோடு புரட்டுப் புரட்டு என்று புத்தகத்தைப் புரட்டிக் கொண்டிருந்தான்.

இந்த நேரத்தில் திருட்டு வேலைக்காரர்கள் அனுப்பியிருந்த கூட்டாளி ஒருவன் மீனப்பன் ஒழுங்காக நடந்து கொள்கிறானா என்று கண்காணிக்க அந்த அறையில் ஒரு மூலையில் ஒளிந்து கொண்டிருந்தான்.

புத்தகத்தைப் புரட்டிக் கொண்டிருந்த மீனப்பனுக்கு எரிச்சல் வந்தது. எங்கு போயிருக்கும் சேவல் படம் என்று நினைத்து, ''எங்கே போயிடுவே என்னை விட்டு? உன்னைக் கண்டுபிடிக்க முடியாதுன்னு நினைச்சுக்கிட்டு ஒளிஞ்சுக்கிட்டு இருக்கியா? வா வெளியே ராஸ்கல்,'' என்று கத்தினான் சேவலை மனத்தில் கொண்டு.

முட்டாள் வேலைக்காரன் தன்னைத்தான் கண்டுபிடித்து விட்டான் என்று நினைத்து, ''அய்யோ சாமி! நீங்கதான் பெரிய ஆள். எல்லாம் தெரிந்த டாக்டர் வாழ்க!'' என்று கத்திக் கொண்டே அவன் முன் மண்டியிட்டு உட்கார்ந்தான்.

மீனப்பன் புத்தகத்தில் சேவல் படத்தைப் பார்த்ததும் அவனை ஒரு பொருட்டாகவே மதிக்காமல், ''கிடைத்து விட்டது சேவல்,'' என்று மகிழ்ச்சியாகச் சொல்லிக் கொண்டிருந்தான்.

''ஆமாம். அந்தச் சேவல் கூண்டில் தான் நகைகளையெல்லாம் ஒளித்து வைத்திருக்கிறோம்,'' என்று மேலும் அலறினான் அவன்.


வெற்றிக் களிப்போடு செல்வந்தரிடம் சென்றான் மீனப்பன்.

''செல்வந்தர் அவர்களே, திருட்டுப் போன உங்கள் பொருட்களெல்லாம் எங்கிருக்கிறது என்று தெரியும். நான் காண்பிக்கிறேன் வாருங்கள்,'' என்று அழைத்துக் கொண்டு போய், எல்லாவற்றையும் வேலைக்காரர்கள் மறைத்து வைத்திருக்கும் இடத்தைக் காண்பித்தான்.

செல்வந்தருக்கு சந்தோஷம் தாங்கவில்லை. மீனப்பனுக்குப் பொன்னும் பொருளும் அள்ளிக் கொடுத்து வேண்டிய வசதிகளையும் செய்து கொடுத்தார்.

மீனப்பனும் அவன் மனைவியும் பல காலம் சந்தோஷமாக வாழ்ந்தார்கள்.

தந்தைக்கு உபதேசம்



"என்ன ரம்யா இன்னிக்கு நீ பள்ளிக்கு லீவு போட்டுட்டே? உடம்பு சரியில்லையா?'' என்று விசாரித்தபடியே வந்தாள் ரம்யாவின் தோழி ராதா.

''எங்க மாமா டில்லியிலேயிருந்து வந்தார். அவ்ரோட இருக்கணும்னு லீவு போட்டுட்டேன்,'' என்றாள் ரம்யா.

''அன்னிக்கு உங்க மாமா லண்டன்லே இருக்கார்ன்னு சொன்னியே! இன்னிக்கு டில்லின்னு சொல்றியே?'' என்று புரியாமல் ராதா கேட்க, ''அது வேறெ மாமா. இது வேறெ மாமா,'' என்று ரம்யா சொன்னதில் ராதாவுக்கு நம்பிக்கை வரவில்லை.

சிறிது நேரம் ஏதேதோ பேசிவிட்டு அவள் வீடு கிளம்பினாள். அவள் சென்றவுடன் இன்னொரு தோழி ரதி வந்தாள். ''என்னடி ரம்யா லீவு போட்டுட்டே? உடம்பு சரியில்லையா? நீ இல்லாமே எனக்கு ரொம்பவும் போராயிருந்தது,'' என்றாள் அவள்.

''போடி ரதி. நான் என்ன பண்ணுவேன்? என் மாமா டில்லியிலேர்ந்து வந்தார் காலையிலே. ஆனா அவர் பத்து மணிக்கெல்லாம் கிளம்பி விட்டார். திடீர்னு என்னோட அத்தைப் பொண்ணு அமெரிக்காவிலேர்ந்து தனியா வந்திருந்தா. அவ என்னை விடப் பெரியவதான். ஆனாலும் அவளோடு கூட இருக்க வேண்டியதாப் போச்சு. இன்னிக்குப் பூரா

வைதேகி தேசிகன்

வும் அவளோட ஒரே அலைச்சல். கை காலெல்லாம் ஓய்ஞ்சு போச்சு. நான் என்னடி பண்ணுவேன்?'' — நிறுத்தாமல் பேசினாள் ரம்யா.

''அத்தைக்குப் போன வருஷம் தான் கல்யாணம்னு சொன்னே? இப்போ அத்தை பொண்ணு..'' முடிக்கத் தெரியாமல் ரதி திணற, ''அது என்னோட சின்ன அத்தை. இப்போ அவங்க லண்டன்லேயிருக்காங்க. இப்போ வந்திருக்கறது என்னோட பெரிய அத்தைப் பொண்ணு'' என்றாள் ரம்யா விட்டுக் கொடுக்காமல்.

ரதியும் சிறிது நேரம் ஏதேதோ அரட்டையடித்து விட்டுக் கிளம்பினாள்.

உள்ளே இருந்து ரம்யாவின் தாய் கமலா, ''என்னடி ரம்யா இந்த மாதிரிப் பொய்யாச் சொல்றே? ஏன் லீவு போட்டேன்னு உண்மையைச் சொல்லக் கூடாதா?'' என்றபடியே வெளியே வந்தாள்.

''போதும். நீ சொல்றதை யாராவது கேட்டுடப் போறாங்க!''

பெரியவர்கள் போலப் பேசிய பெண்ணைப் பார்த்ததும் தாயின் வாய் அடைத்து விட்டது. உண்மையில் ரம்யா பள்ளி செல்லாததன் காரணம் அவள் வீட்டுப் பாடங்களை



எழுதி முடிக்காததுதான். தங்கு தடையில்லாமல் பொய் பேச எங்குதான் படித்தாளோ இந்தப் பெண் என்று தோன்றியது கமலாவுக்கு.

ஒரு விடுமுறை நாள் மாலை. ரம்யாவின் தோழிகள் அனைவரும் அவள் வீட்டில் கூடியிருந்தனர். ரம்யா தன் விளையாட்டுச் சாமான்களையும், ஆடை அணிகலன்களையும் அவர்களிடம் காட்டி மகிழ்ந்து கொண்டிருந்தாள். "ஏண்டி ரெமி இந்த 'மிடி' ரொம்ப அழகா இருக்குடி. எங்கே வாங்கினே?" என்று ஒருத்தி கேட்க, "இது என்னோட அத்தைப் பொண்ணு அமெரிக்காவிலிருந்து வாங்கிட்டு வந்து பிரசெண்ட் பண்ணினதுடி," என்று அவளே தொடர்ந்தாள்.

"இதோ பாரு, குலைச்சிகிட்டே வாலாட்டற நாய் என்னோட சித்தப்பா லண்டனில் வாங்கி அனுப்பினது. இதோ பார்த்தியா இந்தப் புது மாடல் கை கடிகாரத்தை! இதை எங்க மாமா சிங்கப்பூர் போன போது வாங்கிட்டு வந்து கொடுத்தார்," என்று அடுக்கிக் கொண்டே போனாள்.

அவளிடமிருந்த எல்லாப் பொருட்களுமே ஏதாவது ஓர் உறவினர் ஏதாவது ஒரு வெளிநாட்டிலிருந்து வங்கி அனுப்பியதாகவேயிருந்தது.

ஆம், அவள் அப்படித்தான் சொன்னாள். வந்திருந்த குழந்தைகள் அனைவரும் ரம்யாவைப் பார்த்து மனத்திற்குள் பொறாமை கொண்டனர். அவளைப் போலவே தங்களுக்கும் பரிசுப் பொருட்கள் வாங்கி வந்து தர யாருமில்லையே என்று ஏங்கியபடி குழந்தைகள் விடைபெற்றனர்.

10 வயதில்



சுமார் அறுபது வயது மதிக்கத்தக்க பெரியவர் ஒருவருடன் பேசிக் கொண்டிருந்தாள் ஸ்ரீவள்ளி. உற்றுக் கேட்டேன்; புரியவில்லை. காரணம் அவர்கள் பேசிக் கொண்டிருந்தது இந்தியில்!

பெரியவர் போன பிறகு ஸ்ரீவள்ளியிடம் கேட்டேன்: "யார் அவர்?"

"என் கிளாஸ்–மேட்," என்றாள் அவள்! ஐந்தாம் வகுப்பு மாணவி!

"என்னது?" ஆச்சரியத்துடன் கேட்டேன்.

"ஆமாம் அங்கிள், அவர் என் கூடப் படிக்கிறார் – இந்தி வகுப்பிலே; என்று விளக்கம் சொன்னாள் அவள்.

இந்தப் பத்து வயதுப் பெண்ணுக்கு இந்தி பயில்வதில்தான் எவ்வளவு ஆர்வம்!

பள்ளிக்கூடத்தில் நாள் தினசரிப் பாடங்களைப் படித்த பிறகு, மாலையில் இந்தி பிரசார சபாவினர் ஆதரவுடன் நடத்தப்படும் இந்தி வகுப்புக்கும் செல்கிறாள் ஸ்ரீவள்ளி.

"இவ, மச்சரையே பீட் அடிக்கறா!" என்று குறிப்பிட்டார் அவளுடைய தாயார்.

எப்படியாம்?

இவள் போன வருடம் வரை படித்துக் கொண்டிருந்த பாரதி வித்யாலயாவில் இவளுக்கு வகுப்பு ஆசிரியையாக இருந்தவர், இவருடன் இந்தி வகுப்பில் படிக்கிறார். பிப்ரவரி, ஆகஸ்ட் என்று வருடத்திற்கு இரண்டு பரீட்சைகளாக எழுதிப் பாஸ் செய்து விடுகிறாள் ஸ்ரீவள்ளி. இந்த வகையில், தன்னுடன் துவக்கத்தில் படித்த பெரும்பாலான மாணவ மாணவிகளை விட முந்திச் சென்று விடுகிறாள் இவள்.

இந்தி படிக்கறதினால என்ன லாபம்?

"என்ன லாபமா? இன்னொரு மொழி தெரிஞ்சுக்கறது பெரிய சமாசாரம் இல்லையா? அதுதான் எவ்வளவு உதவியா இருக்கு? டி.வி.யிலே மகாபாரதம் மாதிரியான இந்தித் தொடர்களை உடனே

இவையனைத்தையும் கவனித்துக் கொண்டிருந்த ரம்யாவின் பெற்றோர் உள்ளிருந்து வெளியே வந்து அவள் பக்கத்தில் உட்கார்ந்தனர். "ஏம்மா ரெமி? இது உனக்கே நல்லாயிருக்கா? நீ சொன்னதுலே ஏதாவது நிஜம் உண்டா? ஏம்மா இப்படிப் புளுகறே? நமக்கு உறவினர்கள் யாராவது வெளிநாடுகளிலே இருக்காங்களா?"

கமலா கேட்ட போது ரம்யா 'கடகட'வெனச் சிரித்தாள். "ஏம்மா வெள்ளைப் பொய்யின்னு நீ கேள்விப்பட்டதில்லையா? நான் இப்படிப் பேசுறதாலே யாருக்காவது ஏதாவது நஷ்டம் உண்டா? இதுக்குப் போயி பெரிசா கவலைப்படறியே?" அலட்சியமாகச் சொன்னாள் ரம்யா தந்தையைப் பார்த்தபடி.

ஒரு நிமிடம் மௌனம் நிலவியது. "அப்பா, இந்த டிரெஸ் என்ன விலைக்கு வாங்கினீங்க?" — அவளே தந்தையிடம் கேட்க அவர், "இருநூறு ரூபாய்," என்றார்.

"ஆனால் யாராவது என்ன விலைன்னு கேட்டா நீங்க என்ன சொல்றீங்க? முந்நூறுன்னு. இல்லையா? அதே மாதிரி பொம்மை விலை அம்மாவுக்கு வாங்கற துணி மணிகள் விலை. ஏன் நாம இருக்கற இந்த வீட்டோட விலை எல்லாத்தையுமே நீங்க கூட்டித்தான் சொல்வீங்க இல்லையா?" — ரம்யா கேட்ட போது அவரால் பேச முடியவில்லை. "அம்மா தங்குதடையில்லாம பொய்ப் பேச எங்கே கத்துக்கிட்டேன்னு கேட்டியே, நம்ம அப்பா பேசறதைப் பார்த்துத்தான். ஒரு சமயம் இது பத்திக் கேட்ட போது அவர் என்ன சொன்னார்? நினைவிருக்கா? வெள்ளைப் பொய் பத்தி விளக்கம் கொடுக்கலே? இந்த மாதிரி நாம பொய் சொல்றதுனாலே யாருக்கு என்ன நஷ்டம்? நம்ம கௌரவத்தைக் கொஞ்சம் கூட்டிக்கிறோம் அவ்வளவுதானேன்னு சொன்னாரில்லையா?" ரம்யா பேசப் பேச தந்தையின் முகம் கறுத்துச் சிறுத்தது.

"அப்பாவின் நண்பர்களெல்லாம்

இந்தி டியூஷன் எடுக்கிறாள்!

புரிஞ்சுக்க முடியுது. அந்த மொழி தெரியாதவங்களுக்கு விளக்கிச் சொல்ல முடியுது ஏன், எங்க அம்மா, அப்பாவுக்கே கூட என்ன டயலாக் பேசறாங்கன்னு நான்தான் தமிழ்லே சொல்லுவேன்," என்று பதிலளித்தாள் ஸ்ரீவள்ளி.

"இந்தி தெரிஞ்ச இவளோட கிளாஸ் மேட்சரும் இவளும் இந்தியிலேயேதான் பேசிக்கறாங்க," பெருமையுடன் சொன்னார் அவளுடைய அப்பா.

விடுமுறை நாட்களில் அவள் வெளியூர் எங்கும் போகவே விரும்புவதில்லையாம்.

அது பற்றிக் கேட்ட போது, "வெளியூர் போகறதுங்கறது பொழுது போக்கறதுக்காக; புதுப்புது இடங்களைப் பார்க்கறதுங்கறது. புதுப்புது விஷயங்களைத் தெரிஞ்சுக்கறதுக்காக. நான் இந்தியும் நாட்டியமும் கத்துக்கும் போது, எனக்குப் பொழுதும் போகுது; புது விஷயங்களையும் தெரிஞ்சுக்கறேன்," என்று உறுதியாகச் சொல்கிறாள். இந்தி வகுப்புகள் தவிர நாட்டியப் பயிற்சியும் பெறுகிறாள் இவள்.

பேசிக்கொண்டிருந்தவள் திடுதிப்பென்று எழுந்து கொண்டு, "அதோ, என் ஃப்ரெண்டு வரா அங்கின். அவளுக்கு நான் இந்தி டியூஷன் எடுக்கணும்," என்று கூறிய போது நான் அதிசயித்தேன்.

ப்ராத்மிக் பயிலும் இளநிலை மாணவர்கள் சிலருக்கு ஸ்ரீவள்ளி இந்தி பாடம் சொல்லிக் கொடுத்து, டெஸ்ட் வைத்து, அவர்கள் நல்ல முறையில் தேர்ச்சி பெற உதவுகிறாளாம்!

கல்விக்குக் கரை இல்லை என்பார்கள். வயது கூட ஒரு வரம்பு இல்லை. எந்தச் சிறு வயதிலும் எந்த ஆக்கபூர்வமான விஷயத்தையும் தெரிந்து கொள்ளலாம். அதற்கு அடிப்படையாக ஆர்வமும், பெற்றோரின் ஊக்கமுமே தேவை என்பதற்கு ஸ்ரீவள்ளி உதாரணமாகத் திகழ்கிறாள்!


அட்டை வண்ணப்படம்:
ராஜா பொன்சிங்
பேட்டி: **பிரபுசங்கர்**

என்ன சொல்றாங்க தெரியுமா? நாகராஜன் பேசறதுலே பாதிதான் நிஜமிருக்கும்கறாங்க! அதைக் கேட்டப்புறம்தான் நானும் அவரை மாதிரியே பேச ஆரம்பிச்சேன். நான் இப்படிப் பேசினா உங்களுக்குக் கஷ்டமாய் இருக்கற மாதிரி, நீங்க பேசும் போது எனக்கில்லையா?'' அவளே தொடர்ந்து பேசினாள்.

பதில் பேசத் தெரியவில்லை பெற்றவருக்கு. 'குழந்தைகளின் பழக்க வழக்கங்கள் அமைய நாம்தானே காரணம்? நாம் முதலில் மாறினால்தான் அவர்களையும் மாற்ற முடியும்.'', என்று அவர் உணர்ந்தார். ''எனக்கு. நல்லாப் புரிய வச்சிட்டே கண்ணு. இனி இந்த மாதிரிப் பொய் பேசவே மாட்டேன்,'' என்றார் அவள் கைகளைப் பற்றியபடி குரல் தழுதழுக்க.

''நானும் இனிமே நிஜமே பேசுவேன் அப்பா,'' எனச் சிரித்தாள் ரம்யா.

மகளைப் பெருமையுடன் பார்த்தாள் தாய். ●



ஷேக்ஸ்பியரின்

வெனிஸ் நகர வணிகன்



அமைப்பு: இந்திரா அனந்த கிருஷ்ணன்

சித்திரம்: லலிதா





வெனிஸ் நகரில் அன்டோனியோ பெரிய வணிகன். பசானியோ அவனது அருமை நண்பன். ஒருநாள்......
பசானியோ! பார்த்தே ரொம்ப நாளாச்சே! நலம்தானே?
ஏதோ நலம்தான்! உன் உதவி தேவை அன்டோனியோ
1
தயங்காம சொல் நண்பா. என்னால் ஆன உதவியைச் செய்கி றேன்!
பெல்மொன்ட் டிலே போர்ஷி யான்னு ஒரு பெண். ரொம்ப அழகு. புத்திசாலி.
2
நல்ல செய்திதான்! நீ அவளை விரும்பு கிறாயா?
ஆம். ஆனால் அவள் தன் விருப்பப்படி கணவனைத் தேடிக்க முடியாது. அவள் தந்தை அப்படி ஒரு உயில் எழுதியிருக்கிறார்!
3
உயில்ல அப்படி என்னதான் இருக்கு?
அவர்களிடம் தங்கம், வெள்ளி, தகரத்தாலான மூன்று பெட்டி கள் உள்ளன. ஏதோ ஒன்றில் போர்ஷியாவின் படம் இருக் கிறது. அதைச் சரியா எடுப்பவ னையே போர்ஷியா மணப்பான்!
4



தப்பா எடுத்தவன் வாழ்நாள் முழுவதும் திருமணம் செய்து கொள்ளக் கூடாது!
விசித்திரமான உயில்! ஆனால் நீ சரியாத்தான் எடுப்பே. ஜெம்பு பெல் மொன்ட்டுக்கு!
5
போக எனக்குப் பணம் தேவை. உதவுவாயா?
அடடா! என் எல்லாச் சொத்தும் பண்டமா கப்பலில் விற்ப னைக்குப் போயி ருக்கே!
6
கொஞ்சம் இரு. வட்டிக்குக் கடன் தரும் யூதர் ஷைலக் கிடம் நீ மூவாயிரம் டுகேட்* கேட்கலாமே?
ஷைலக்கிடமா? பேராசைக்கார னாச்சே! சுயநலவாதியான அவன் கிறிஸ்துவர்களை வெறுப்பவனாச்சே? வட்டியும் அதிகம்.
7
என் நன்றியை எப்படித் தெரிவிப் பதுன்னு தெரி யலே அன்டோ னியோ
பரவாயில்லே. என் கப்பல்கள் திரும்பியதும் உடனே பணத் தைக் கொடுத்திடலாம்.
8
பசானியோ நேராக ஷைலக்கிடம் போனான்.
மூன்று மாதக் கடனா மூவாயிரம் டுகேட்டுகள் தேவை. அன்டோனியோ உத்திரவாதம் தருகிறார் அப்படித்தானே?
அதுவே தான்!
9

* வெனிஸ் நாட்டு நாணயம்.



அன்டோனியோவை வெறுக்கிறேன்!
வட்டி இன்றிக் கடன் கொடுத்து என் வியாபாரத்தைக் கெடுக்கிறான்.
தயக்கம் ஏன ஷைலக்? இதோ அன்டோனியோவே வந்துவிட்டானே?
10
அன்டோனியோ, பணத்தை மூணு மாசத்துல கொடுத்துடுவியா?
பழி வாங்க நேரம் வந்து விட்டது! ஹ! ஹ!
கண்டிப்பா!
11
வட்டியில்லாம பணம் தரேன். ஆனால் நீ ஒரு பத்திரம் எழுதித் தர வேண்டும்.
தரேன், ஷைலக்.
12
அவசரப்படாதே அன்டோனியோ. ஷைலக் ஏதோ வஞ்சகத் திட்டம் போடறான்.
கவலைப்படாதே பசானியோ!
பணத்தை மூணு மாசத்துல திருப்பித் தர லேன்னா உன் உடலின் எந்தப் பாகத்தில் இருந்தும் ஒரு பவுண்டு சதையை நான் வெட்டி எடுத்துப்பேன்.
தாராளமா!
14
எனக்காக நீ இந்த மாதிரியான பத்திரத்தை எழுதுவதை அனுமதிக்கமாட்டேன். அதைவிடப் பணமில்லாம சமாளிச்சுப்பேன்.
பசானியோ! இரண்டு மாசத்துல என் கப்பல்கள் பணத்தோட வரும். ஏன் கவலைப்படறே?
15


கவலையை விடு பசானியோ!
மூணு மடங்காகக் கூடத் திருப்பித் தந்திடலாம்!
ஷைலக்கை நம்பலே!
16
மூவரும் வக்கீலிடம் சென்றனர்.
பத்திரம் எழுதியிருக்கேன். நீங்க இருவரும் கையெழுத்திடுவதுதான் பாக்கி!
17
ஷைலக்
18
இதோ பணம். சரியா மூணு மாசமானதும் மறுபடி சந்திப்போம்.
மிக்க நன்றி ஷைலக்!
நல்லது!
19
வக்கீல் வீட்டுக்கு வெளியே...
இன்று என்னுடன் விருந்து சாப்பிட வாருங்கள் ஷைலக்?
நானும் கொண்டாடணுமே!
நான் வரேன்!
20
விரைவில்....
நன்றி கூறத் தெரியாமல் திணறுகிறேன்!
பெல்மொன்டுக்கு சீக்கிரம் கிளம்பு. என் வாழ்த்துக்கள்
21



பசானியோ, நானும் பெல்மொண்ட் வரவா?
தாராளமா. பிடித்த நண்பனுடன் போக எனக்கும் ஆசைதான் கிரேஷியானோ.
22
விரைவிலேயே பசானியோவின் கப்பல் பெல்மொண்ட்டுக்குக் கிளம்பியது.
23
அன்று இரவு...
ஜெசிகா, கதவை மூடிக் கொண்டு உள்ளேயே இரு. அன்டோனியோ வீட்டில் எனக்கு இரவு விருந்து...!
சரி அப்பா!
அதிசயமா இருக்கே! விருந்துச் சாப்பாடு! அதுவும் அன்டோனியோ வீட்டில்
சிறிது நேரம் கழித்து...
யாரது...?
ஜெசிகா...
உடனே கிளம்பு, ஓடிடலாம்! இம்மாதிரி வாய்ப்புக் கிடைக்காது!
இதோ! ஒரு நிமிஷத்தில் தயாராயிடறேன் லோரென்சோ!
25
தந்தையின் செல்வத்தில் முடிந்த அளவு மூட்டை கட்டிக் கொண்டாள் ஜெசிகா.
27



அடுத்த நிமிடம்,...
28
நீ ஜெசிகான்னு யார் சொல்வாங்க?
அக்கம் பக்கத்தவங்க யாரோ ரெண்டு பேர் போனதா அப்பா விடம் சொல்வாங்க!
29
ஷைலக் வீடு திரும்பியதும்...
ஜெசிகா... ஜெசிகா...! கதவைத் திற...!
என்னது? பதிலே இல்லையே?
30
ஜெசிகா கதவைத் திறக்காததால், தாமே கதவை உடைத்துத் திறந்தார் ஷைலக்.
என் மகள் என் செல்வத்துடன் ஓடி விட்டாள்!
31
விலைமதிப்பில்லா வைரம், மாணிக்கம், முத்து எல்லாம் போச்சு!
32




என் செல்வம்! என் மகள்...!
மகளைவிட, செல்வம் போனதையே பெரிதாக நினைக்கிறார்!
33
செல்வம்! என் மகள்! பசானியோவோட கப்பல்ல போயிட்டாளோ?
இல்லையே! பசானியோவோட கப்பல்ல போகலையே!
34
அப்படீன்னா, ஒருவேளை அந்தக் கிறிஸ்துவன் லோரென்சோவோட படகுல போயிட்டாளோ? ஐயோ! என் மகள், என் செல்வம் இரண்டும் போச்சே!
35
அடுத்த நாள் காலையில்...
ஹலோ துபல்! என் செல்வம், என் மகள், எங்கேயாவது பார்த்தாயா?
இல்லை!
36


என்ன துரதிர்ஷ்டம்! மகள் போன தோட என் எல்லாச் செல்வமும் கூடவே போய்டுத்தே!
உனக்கு மட்டுமா? அன் டோனியோவுக்குக் கூட துரதிர்ஷ்டம்தான்!
37
என்னவாச்சு அன்டோனியோவுக்கு?
அவருடைய கப்பல்கள் சேதமாகி விட்டதாகப் பேச்சு!
38
ரொம்ப மகிழ்ச்சி! தொலைந் தான் அன்டோனியோ! அவன் இருதயப் பகுதியிலிருந்து ஒரு பவுண்டு சதை எடுக்கப் போகிறேன்!
அன்டோனியோவை இப்படி வெறுக்கிறானே!
39
பெல்மொன்ட்டில் போர்ஷியாவை மணக்கப் பலர் போட்டியிடுகிறார்கள். இதோ மொராக்கோ இளவரசர்...
சரியான பெட்டியைத் தேர்ந்தெடுங்கள், இளவரசே!
பார்க்கக் கோமாளி போல் இருக்கிறார். சிரிப்புத் தான் வருகிறது!
40


தகரப்பெட்டி துளியும் அழகா இல்லையே!
41
இந்த வெள்ளிப் பெட்டி யும் நல்லாவே இல்லே!
42
மொராக்கோ இளவரசர் தங்கப் பெட்டியிடம் வந்தார்...
பலரும் விரும்புவது கிடைக் கும்னு போட்டிருக்கே பலரும் விரும்புவது போர்ஷியாவைத் தான்!
43
இளவரசர் ஆவலாகப் பெட்டி யைத் திறந்தார்!
ஆ...!
மின்னுவதெல்லாம் பொன்னல்ல!
மொராக்கோ இளவரசர் ஏமாற்றத்துடன் திரும்பினார்.
44
அடுத்து வந்தவர் அரோகன் இளவரசர்......
தங்கப்பெட்டியா! பலரும் விரும்பிய இது நமக்கு வேண்டாம்!
45
அடுத்து தகரப்பெட்டியை எடுத்தார் இளவரசர்
தகரப்பெட்டி சாதாரண மக் களுக்கான பெட்டி. இதன் அருகில் செல்வதே கேவலம்!
46


அரோகன் இளவரசர் அடுத்ததாக வெள்ளிப் பெட்டியை நெருங்கினார்.
இதைத் தேர்ந்தெடுப்பவருக்குத் தகுதியானது கிடைக்குமாமே. போர்ஷியாவை அடையும் தகுதி எனக்கிருக்கு.
47
ஆனால், இளவரசர் பெட்டியைத் திறந்தபோது...
என்னது! கோமாளியின் தலை! எனக்குத் தகுதியானது இது தானா?
48
ஒரு முட்டாள்தனம் பண்ணி வந்தேன். இப்போ இன்னொரு முட்டாள்தனமும் பண்ணிட்டுப் போறேன்!
முற்றிலும் ஏமாற்றமடைந்து அரோகன் இளவரசர் திரும்பினார்.
49
இவர் தோற்றது மகிழ்ச்சியே! தன்னைத் தானே உயர்வாய் நினைப்பவரை நான் வெறுக்கிறேன்.
50
சிறிது நேரமான பின்...
வருபவர் பசானியோ!
அவர் கூட வருவது யாராயிருக்கும்?
ஆமாம், பசானியோவேதான்! முன்பே பார்த்திருக்கேன். அன்பும் பண்பும் நிறைந்தவர்!
51


விரைவில்...
நல்வரவு பசானியோ! எனக்காக, சரியான பெட்டியைத் தேர்ந்தெடுங்கள்!
போர்ஷியா! வெற்றி பெறுவேன் என்று நம்புகிறேன்... உடனே எடுக்கிறேன்! இனியும் தவிக்க முடியாது!
52
பசானியோ பெட்டிகளை நெருங்கி
தங்கம்! இதன் வெளித் தோற்றம், பகட்டை நம்ப முடியவில்லை!
53
வெள்ளி, அழகு; ஆனால் ஒளி மங்கிவிடக் கூடியதே!
54
தகரம்! இதன் எளிமை எனக்குப் பிடித்திருக்கிறது!
55


பசானியோ தகரப் பெட்டியைத் திறந்தான்...
தகரப் பெட்டியில் போர்ஷியாவின் படம் இருந்தது! அதில் எழுதியிருந்ததைப் படித்தான்......
வெளித்தோற்றத்தில் மயங்காத நல்லவரே... இத்திரண்ட செல்வம் இனி உன்னுடையது! இதைக் கொண்டே நிறைவாக இருக்கலாம். அழகி போர்ஷியா இனி உன்னுடையவள்...
56
போர்ஷியா! இனி நீ என்னுடையவள்!
57
எல்லாச் செல்வங்களும் நான் உட்பட இனி உங்களுடையவை! இந்த மோதிரத்துடன் இவற்றை அளிக்கிறேன்.
58



இன்னொரு மகிழ்ச்சி யான செய்தி எங்களை வாழ்த்துங்க!
நெரிசா என்னை மணக்க இணங்கி விட்டாள்!
59
மறக்க முடியாத நல்ல நாள்! மகிழ்ச்சியான செய்திகள்!
60
அப்போது...
அட! ஜெசிகாவும் லோரென்சோவுமா!
ஆம்! எங்களுக்குத் திருமணம் நடைபெறப் போகிறது!
61
பிரபு பசானியோ அவர்களே! அன்டோனியோவிடமிருந்து கடிதம் வந்திருக்கு!
அன்டோனியோவிடமிருந்தா! என்ன எழுதியிருக்கக் கூடும்!
62
சந்தோஷ வேளையில் இப்படி ஒரு கடிதமா?
கவலை தரும் செய்தியா?
63


கணவன் மனைவிக்கிடையே ரகசியம் இருக்கலாகாது. சொல்லுங்கள்!
அன்டோனியோவின் கப்பல்கள் மூழ்கி விட்டதாம். ஷைலக்கின் கடனை அவனால் தீர்க்க முடியாது!
64
நண்பனுக்கு உதவ வேண்டியது உங்க கடமை. தேவையான பணம் எடுத்துக்கிட்டு போய் கடனைத் தீர்த்துடுங்க!
போர்ஷியா! நீ எவ்வளவு தன்னலமற்றவள்!
ஷைலக்கின் கடனைத் தீர்க்கப் பணத்தோடு பசானியோ கிளம்பினான். அதன் பின் .....!
பார்த்துக்கறோம்!
லோரென்சோ, ஜெசிகா, வீட்டுப் பொறுப்பு உங்களுடையது. நெரிசாவும் நானும் பிரார்த்தனை செய்யக் கிளம்பறோம்!
இந்த ஏற்பாடெல்லாம் என்ன! புரியலையே!
போற வழியில் சொல்றேன்! சீக்கிரம் கிளம்பு!
67
இக்கடிதத்தை படுவாவில் உள்ள வக்கீல் பெல்லேரியாவிடம் சேர்ப்பித்துவிடு.
பெல்மொன்டை விட்டுக் கிளம்பினர்.
நம்மை நம் கணவர் காணு முன் நாம் அவர்களைப் பார்க்கப் போகிறோம்!
அது எப்படி முடியும்?









(அடுத்த இதழில் முடியும்)



Colour photo : Yoga



96 pages for just Rs. 3/-

DON'T MISS THE SEPTEMBER ISSUE OF

Gokulam

* **The Merchant of Venice** — *the first part of a picture story in colour.*
* **Nala Damayanthi** — *a play to read and enact.*
* **The Changing Landscape** — a geography feature.
* **Treasure Hunt** — *an exciting game.*

Plus — *stories, poems, puzzles, quiz, Things to Make and Do, and all the regular features.....*

BUY YOURSELF A COPY TODAY!

ஒரு மரத்துப் பறவைகள்

10

மாடிப் படிக்கட்டுகளில் அப்படியே நின்று விட்டார்கள் பவித்ராவும் சந்தோஷ¬ம். ஹாலில் சோஃபாவில் அமர்ந்திருந்த முத்துமணியும் உதயாவும் திடுக்கிட்டு எழுந்து ஒருவர் முகத்தையொருவர் பார்த்துக் கொண்டு நின்றார்கள். அவர்கள் பங்களாவில் நாய் எதையும் அவர்கள் வளர்க்கவில்லை.

பவித்ராவும் சந்தோஷ¬ம் ஏதேதோ எண்ணிக் குழம்பிக் கொண்டே வெளியே வந்தார்கள்.

அங்கே, ஏழெட்டுப் பெரியவர்களும் மூன்று நான்கு சிறியவர்களும் நின்றிருந்தார்கள். உள்ளேயிருந்து வந்தவர்களைக் கண்டதும் அவர்கள் மௌனமாகக் கைகளைக் கூப்பி வணக்கம் தெரிவித்தார்கள். அப்போதுதான் உதயாவுக்குப் போன நிம்மதி திரும்பி வந்தது.

எதிரே நின்றிருந்தவர்களைக் கவனித்துப் பார்த்ததுமே பவித்ராவுக்கு விஷயம் புரிந்து விட்டது. ''ஏய் ரம்யா! எஸ்தர்! வடிவு!'' என்று அங்கு நின்றிருந்த தன் சிநேகிதிகளை உற்சாகத்தோடு கூவியழைத்துக் கொண்டே இறங்கி ஓடி அவர்களை அணைத்துக் கொண்டாள் பவித்ரா.

''பவித்ரா! நாங்கள் பள்ளியிலே நடந்ததை வீட்டிலே போய்ச் சொன்னோம். இவர்களெல்லாம் உன்னைப் பார்த்துப் பாராட்டணுமாம்! எங்களைக் கூட்டிக்கிட்டுப் போங்கோன்னாங்க. அதுதான் கும்பலா வந்திட்டோம்,'' என்று சிரித்தாள் எஸ்தர்.

''அப்படியா? சந்தோஷம்!'' என்று அவர்களுக்குக் கரம் கூப்பி வணக்கம் தெரிவித்தாள் பவித்ரா.

''என் பொண்ணு ரம்யா வந்து சொன்ன போது எனக்கு ஆச்சரியமாக இருந்தது. ஒரு பெண் பிள்ளை இவ்வளவு புத்திசாலித்தனமா, தைரியமா நடந்திருக்கா. அப்படீன்னா அவளை நேரிலே பார்த்துப் பாராட்டணும். அந்த எண்ணத்திலேதான் உடனே புறப்பட்டு வந்தோம், என்றார் ரம்யாவின். தந்தை.

''பவித்ராவை மட்டும் இல்லே; பவித்ராவின் பெற்றோரைப் பார்த்து மகிழ்ச்சியையும் நன்றியையும் தெரிவித்துப் பாராட்டி விட்டுப் போகணும்னுதான் நான் வந்தேன்,'' என்றாள் வடிவழகியுடன் வந்திருந்த அவளுடைய தாயார்.

மற்றவர்களும் பவித்ராவையும் அவன் பெற்றோரையும் பாராட்டி விட்டுப் போகவே வந்ததாகச் சொன்னார்கள். ஏதும் பேச முடியாமல் மகிழ்ச்சியால் திக்குமுக்காடிக் கொண்டு நின்றிருந்தார்கள் உதயாவும் முத்துமணியும்.

''என்னைப் போய்ப் பாராட்டுகிற அளவுக்கு நான் ஒண்ணும் பெரிய காரியம் செய்திட்டதாகத் தெரியவில்லை. உள்ளே வாங்க,'' என்று

பூவை அமுதன்



எல்லோரையும் உள்ளே அழைத்தாள் பவித்ரா.

"இதைப் பாருங்க, திடீர்னு பார்த்ததிலே எங்களுக்கு உங்களை உள்ளே அழைக்கக் கூடத் தோணலே பாருங்க," என்று ஒரு மாதிரியாகச் சிரித்துக் கொண்டே அவர்களை உள்ளே கூட்டிச் சென்றார் முத்துமணி.

பவித்ராவும் சந்தோஷும் உள்ளே அவர்கள் அமர்வதற்கு வசதி செய்து தந்தார்கள். சிறிது நேரத்தில் அம்மா அவர்கள் எல்லோருக்கும் குளிர்ந்த ஜூஸ் கொண்டு வந்து கொடுத்து உபசரித்தாள்.

ஒரு பத்து நிமிட நேரம் இருந்து விட்டு அவர்கள் புறப்பட்டார்கள். புறப்படும் போது, ஒருவர் சொன்னார்;

"பவித்ரா! நல்ல காரியம் செய்தாய் அம்மா! நீங்கள் எல்லாம் வீட்டிலேயே கூடத் தனி ட்யூஷன் வைத்துக் கற்றுக் கொள்ள முடியும். ஆனால் இந்த வசதி எல்லோருக்கும் இருக்குமா? வசதியுள்ள பெண்ணான உனக்கு யாருடைய படிப்பும் கெடக் கூடாது என்ற நல்லெண்ணம் இருக்கே. உண்மையிலே இது உயர்ந்த குணம் அம்மா!"

"என் பெண்ணும் உன் கூடப் படிக்கிறாள். உன் கூடப் பழகறாள் என்ற பெருமையே எனக்குப் போதும்மா," என்று ஒரேயடியாகப் புகழ்ந்தாள் ஓர் அம்மையார்.

பவித்ராவுக்கு என்ன சொல்வது என்றே புரியவில்லை. அவளுக்கு மகிழ்ச்சியாகவும் இருந்தது. உடம்பே கூசுவது போலவும் இருந்தது. அவளுடைய பெற்றோர் கண்களிலே நீர் நிறைந்திருந்தது.

"பவித்ரா ஒன்றும் பெரிசா செய்திடலே. அவளுக்கு அப்படி ஒரு எண்ணமும் தைரியமும் வந்ததே, அதுதான் பெரிசு. அவளோடு ஒத்துழைத்த எல்லாப் பள்ளி மாணவர்களையும் கூடப் பாராட்டணும்," என்றான் சந்தோஷ்.

"இவன் என் அண்ணன். இவன் சொல்றதுதான் சரிங்க," என்று நாகுழறக் கூறினாள் பவித்ரா.


"ஏய், உனக்கு ஓர் அண்ணன் இருப்பதாக ஒரு நாள் கூட எங்ககிட்டே நீ சொல்லவே இல்லையே!" என்று அவள் காதருகே வந்து முனகினாள் எஸ்தர்..

பவித்ரா சிரித்துக் கொண்டே, "அது அதற்கு நேரம் காலம் வர வேண்டும் போலிருக்கு," என்று பெரிய மனுஷி தோரணையில் கூறிய போது அவள் சிநேகிதிகள் சிரித்து விட்டார்கள்.

"ஏய்... நீ ரொம்ப உச்சிக்குப் போயிருக்கே. பத்திரம் பத்திரம்!" என்று ரம்யா அவள் தோளை அழுத்திக் கிள்ளி விட்டுப் போனாள்.

அவர்கள் எல்லாம் போய் விட்ட பிறகு, "உஸ், அப்பாடா!" என்று பெருமூச்சு விட்டபடி அமர்ந்தாள் உதயா.

"பேரும் புகழும் அடையறதுக்கு



'நீயும் என்னென்னவோ பண்ணிக்கிட்டிருக்கே. என் பெண்ணைப் பாரு... இந்தச் சின்ன வயசிலே எத்தனை பேர் பாராட்டும்படி நடந்துக்கிட்டிருக்கா!'' என்று பூரிப்போடு கூறினார் முத்துமணி.

''சும்மாயிருங்க. குழந்தைக்கு நம்ம கண்ணே பட்டுடும்,'' என்று உதயாவும் சிரித்தாள்.

''நான் அந்தக் கும்பலைப் பார்த்ததும்... உண்மையிலேயே பயந்திட்டேன். அந்த விழா நின்னு போயிட்டதனாலே நிரஞ்சன் ஆளுங்கதான் ஏதோ சண்டை போட வந்திட்டாங்களோன்னு அப்படியே நடுங்கிட்டேன்.''

''நானும் அப்படித்தாங்க! என் உடம்பே ஆடிப் போயிட்டது.''

''அது சரி, பயப்படறதுக்காவது ரெண்டு பேரும் ஒரே மாதிரி நினைக்கறோமே!'' என்று முத்துமணி சொன்னதும், பவித்ரா சப்தமின்றிச் சிரித்துக் கொண்டே சந்தோஷின் பின்னே மாடிக்குச் சென்றாள்.

மாடியில் பவித்ராவின் அறைக்குள் நுழைந்ததுமே கேட்டான் சந்தோஷ், ''என்ன பவித்ரா, உனக்கு நான் ஓர் அண்ணன் இருப்பதாகவே உன் சிநேகிதியிடம் சொல்லலலே போலிருக்கே!''

பவித்ரா அதற்கு ஒன்றும் பதில் சொல்லாமலேயே இருந்தாள். சந்தோஷ் அவள் முகத்தையே பார்த்துக் கொண்டிருந்தான்.

''ஏன், சொல்லணும்னு தோணலியா, விரும்பலையா?'' என்று அவன் கேட்டதும், பவித்ராவுக்குக் கண்களில் நீர் முட்டிக் கொண்டு நின்றது.

''என்ன சந்தோஷ், நான் உன்னை அண்ணான்னு அழைக்கிறதில்லையே தவிர, அந்தப் பாசம் எனக்கு அறவே இல்லைன்னே எண்ணிக்கிட்டியா?'' என்று கேட்டாள் பவித்ரா.

அப்போது அவள் கண்களிலிருந்து உதிர்ந்த கண்ணீர் முத்துக்களைத் தன் கைகளில் ஏந்திக் கொண்டான் சந்தோஷ். ''சும்மா விளையாட்டுக்குத்தான் கேட்டேன். இதுக்காக நீ வருத்தப்படுவேன்னு தெரிஞ்சிருந்தால் இப்படிக் கேட்டிருக்கவே மாட்டேன்,'' என்று வருந்தினான்.

''அது சரி. நான் உனக்கு ஒரு பரிசு வாங்கி வந்திருக்கேன். என்னவாயிருக்கும் சொல்லேன். நீதான் என்னை விடப் புத்திசாலியாச்சே!'' என்றான் சந்தோஷ்.

''ஆமாம்... பேச்சை மாற்றி எனக்குச் சிரிப்பு மூட்டப் பார்க்கிறே. நான் ஒன்றும் உன்னை விடப் புத்திசாலியில்லே. எனக்கு ஒன்றும் உன் மேலே கோபம் இல்லை; அதனாலே என்னைச் சமாதானப்படுத்தணும்னு நீ வழியாதே. ஆமாம், நீ எனக்கு என்ன வாங்கி வந்திருப்பே...?'' என்று யோசித்தாள் பவித்ரா.

''கொண்டு வந்தே கொடுத்திடறேனே?'' என்று அந்த அறையை விட்டுத் தன் அறைக்கு விரைந்தான் சந்தோஷ்.

என்னவாயிருக்கும் என்று குழம்பிக் கொண்டிருந்தவள், ஏதோ நினைவு வந்தவள் போல் அவன் வருவதற்குள் தன் மேஜை டிராயரைத் திறந்து சுருட்டி வைத்திருந்த ஒரு பெரிய வெள்ளைத் தாளை எடுத்துத் தன் கையில் வைத்துக் கொண்டாள்.

சந்தோஷ் சில நொடிகளில் திரும்பவும் அந்த அறைக்குள் வந்தான். தன் கரத்தை அவள் முன் நீட்டினான். நீட்டிய கரத்தின் நுனியிலே ஒரு புதிய புத்தகம் தெரிந்தது. அதை அவள்

ஆவலுடன் பெற்றுக் கொண்டாள்.

''வீரமகள் ஜோன்!'' என்று அதன் தலைப்பைப் படித்தாள். ''தேங்க் யூ சந்தோஷ்.'' என்று சிரித்தாள்.

''அது என்ன, உன் கையிலே பேப்பரைச் சுருட்டி வைத்திருக்கிறாய்?'' என்று கேட்டான் அவன்.

''இது உனக்கு நான் தரும் பரிசு.



அமெரிக்க தலைவலி

பரிசாகத் தர வேண்டும் என்ற நினைப்பலே இதை நான் வரையல்லே....''

''என்ன, நீ வரைஞ்சியா? காட்டு காட்டு!'' அவன் பரபரத்தான்.

''ஆமாம்... உன்னை! ஆனால் நீதான் பார்த்துச் சொல்லணும், அது நீ தானான்னு.''

''நல்லா வந்திருக்கா?''

''அது எப்படி வரும்? நீ நல்லாயிருந்தால்தானே? அதான் சொன்னேனே, சட்டியில் உள்ளதுதானே அகப்பைக்கு வரும்...''

''ஓஹோ! அதுதான் ஆப்பையா? அது சரி, நான் உன் அண்ணன் இல்லே... அது எப்படி நல்லாயிருப்பேன்? ஒரே பீசிலே கிழிச்ச முன் துண்டு நான், பின் துண்டு நீ!'' என்று சிரித்தான் சந்தோஷ்.

அவளும்கலகலவென்றுசிரித்தாள். அப்போதும் அவள் கண்களில் நீர் வழிந்தது.

''என்ன இது, வருத்தத்திலும் கண்ணீர் விடறே, சந்தோஷத்திலும் கண்ணீர் விடறே?'' என்றான் சந்தோஷ்.

''ஆமாம்! நான் வேண்டுமென்றேதான் என் சிநேகிதிகளிடம் உன்னைப் பற்றிச் சொல்லலை. நீ என் அப்பாவுக்கு முதல் மனைவி மகன் என்று சொன்னால் நான் இரண்டாவது மனைவியின் மகள் என்று தெரியும். அப்புறம்... என் அம்மா உனக்கு மாற்றாந்தாய் என்பதும் புரியும். மாற்றாந்தாயாக இருக்கவேதான் பக்கத்திலே ஹைஸ்கூலுங்க இருந்தும் பட்டணத்திலே ஹாஸ்டல்லே தங்கிப் படிச்சிக்கிட்டு, இப்போ காலேஜிலேயும் படிப்பைத் தொடர்கிறான்னு தெரிந்து போகும். நம்ம வீட்டிலே இருக்கிற சிக்கலை நானே வெளிச்சம் போட்டுக் காட்டணுமா? அதனாலேதான் சொல்லல்லே.''

''இதில் என்ன சிக்கல் இருக்கு, பவித்ரா?''

''இருக்கோ, இல்லையோ? மற்றவங்க அப்படித்தான் நினைப்பாங்க. அது மட்டும் இல்லே. ஏதும் சிக்கல் இல்லை என்றும் சொல்லி விட முடியாதே!'' என்றாள் பவித்ரா.

திகைத்துப் போனான் சந்தோஷ்.

''உன்னை வச்சி இந்த வீட்டிலே ஏதும் தகராறு வந்திடக் கூடாதே என்கிற பயத்திலேதான் அப்பா முன் ஜாக்கிரதையாய் உன்னைப் பிரித்து அனுப்பியிருக்கார். இது தெரியாதுங் கறியா எனக்கு? என் அம்மா எப்படி இதுக்குச் சம்மதிக்கலாம்? சொந்தப் பிள்ளையாயிருந்தால் இப்படி உன்னைத் தனியா ஹாஸ்டல்லே விட்டுப் படிக்க வைக்கச் சம்மதிச்சிருப்பாளோ? அவளுக்கும் ஒரு வகையிலே நிம்மதி... அதனாலேதான் நீ எங்களையெல்லாம் விட்டுத் தனியா இருக்க வேண்டி ஆயிட்டது!'' என்று சோகம் இழையோடச் சொன்னாள் பவித்ரா.

''சேச்சே! அம்மாவை நீ இப்படியெல்லாம் நினைக்கக் கூடாது. எனக்கு ஆரம்பத்திலே வீட்டை விட்டு வெளியே இருக்க வருத்தமாயிருந்தது. இப்போ, அதெல்லாம் இல்லை. சென்னையிலே நிறைய லைப்ரரிகள் இருக்கு. நிறையப் படிக்கிறேன். விடுதியிலே கட்டுத் திட்டங்கள் அதிகம். கண்டிப்பா இருக்காங்க. அதனாலே கண்டபடி வெளியே திரிய முடியாது. நல்லா படிக்கிறேன். வீட்டிலே இருந்தால் அப்பா செல்லமோ, அம்மா சொல்லமோ இருக்கலாம். அங்கே அதற்கெல்லாம் இடம் இல்லை. நல்ல நண்பர்கள். படித்ததை விவாதிக்கிறோம். தெரியாததைக் கேட்டுத் தெரிந்து கொள்கிறோம். ஆமாம், கற்றுக் கொள்ளவும் முடிகிறது; கற்றுக் கொடுக்கவும் முடிகிறது.''

அவன் முடிக்கவில்லை. பவித்ரா குறுக்கிட்டாள். ''சந்தோஷ்! நீ என்னை விட நாலு வருஷம் பெரியவன். அதனாலே நீ சாமர்த்தியமாச் சமாளிக்கிறதை என்னாலே புரிந்து கொள்ள முடியாதுன்னு நினைக்

உலகில் தலைவலி அதிகமுள்ள மக்கள் அமெரிக்கர்களே! தலைவலி மாத்திரைகள் தயாரிக்கும் கம்பெனிகள் மட்டும் 400 க்கும் அதிகமாக உள்ளன. தலைவலி மாத்திரைக்காக அமெரிக்கா செலவிடும் தொகை 50 கோடி டாலருக்கும் அதிகமாம். (1 டாலர் ரூ — 16).

— ஆர். ராம்குமார், கும்பகோணம்.

காதே. என் அம்மாவைப் பற்றி எனக்கு நல்லாத் தெரியும். நான் உனக்குத் தங்கச்சியாப் பிறந்திருக் கணும்,'' என்று கண்கலங்கினாள் பவித்ரா.

''இப்ப மட்டும் என்னம்மா, நீ என் தங்கச்சிதானே?''

''இல்லே... உன் கூடப் பிறந்தவளாக. உன்னைப் பெற்ற தாய்க்கு நானும் பிறந்திருக்கணும்,'' என்று கண்ணீரைத் துடைக்கக் கையை உயர்த்தினாள்.

அதற்குள் சந்தோஷ் அன்போடு அவளது கண்ணீரைத் துடைத்தான். அப்போது அவள் கண்களில் திரண்ட கண்ணீரை அவனால் அடக்கிக் கொள்ள முடியவில்லை. ''பவித்ரா, நீ இப்படியெல்லாம் அம்மாவைப் பற்றித் தப்பாகவே நினைக்கக் கூடாது. அம்மா என்னிடம் அளவு கடந்த அன்பு காட்றாங்க, தெரியுமா?''

''தெரியும் தெரியும். வருஷத்திலே சில தினங்களுக்குத்தானே நீ எங்கள் கூட இருக்கிறே? அதனாலே...''

அவன் பதில் ஏதும் சொல்லவில்லை.

''சரி சரி... மறந்தே போயிட்டேன் பாரு! அந்தப் படத்தைக் காட்டு,'' என்று கையை நீட்டினான் சந்தோஷ்.

''ஏய், இது என் படம்தான்... பரவாயில்லை,'' என்றான்.

''நிஜமாவா?''

''நல்லாயிருக்குன்னா சொன்னேன்? பரவாயில்லைன்னுதானே சொன்னேன்? நம்ப முடியலையா? எப்படி வரைஞ்சே?''

''என் கையாலேதான்!''

''அது சரி, நான் கறுப்புப் பென்சிலாலே வரைஞ்சேன்னு சொல்லுவேன்னு எதிர்பார்த்தேன். உஸ்! எப்படி வரைஞ்சே?''

''அதான் சொன்னேனே...''

''ஒரே மூச்சிலே வரைஞ்சி முடிச்சியா?''

''இல்லேப்பா... எத்தனையோ மூச்சு ஆச்சு!''

''அப்படீன்னா?''

''அப்படின்னா மூணு நாலு நாளு ஆச்சுன்னு சொன்னேன். அதுவும் தொடர்ந்தாற்போல இல்லே. அப்பப்போ கொஞ்சம் கொஞ்சம்...''

''நான் அதைக் கேட்கலே. என் ஃபோட்டோவைப் பார்த்து வரைஞ்சியான்னு கேட்டேன்.''

''உன் சின்ன வயசுப் படம்தானே இருக்கு? அதனாலே...''

''உங்... சொல்லு.''

''அப்பா ஃபோட்டோவைப் பார்த்து வரைஞ்சேன். உன் உருவம்தான் என் மனசிலேயிருக்கு. அசப்பிலே நீ அப்பா மாதிரியேயிருக்கியே?''

''ஆண் பிள்ளைங்க அம்மா மாதிரியிருந்தால்தான் அதிர்ஷ்டமாம்!''

''அப்போ... எனக்கு அதிர்ஷ்டம் இருக்குங்கிறியா? நான் அப்பா மாதிரியிருக்கேனே!'' என்று சிரித்தாள் பவித்ரா.

இருவரும் சிரித்துக் கொண்டிருந்த போது, கீழேயிருந்து குரல் கேட்டது.

''சிரிச்சது போதும். கீழே வாங்க!'' அம்மாதான் குரல் கொடுத்தாள். அடுத்து அப்பாவின் குரல்..!

''சந்தோஷ்! பவித்ரா! ரெண்டு பேரும் சீக்கிரம் ரெடி ஆயிடணும். நேரமாகுது!'' என்று உரக்க அழைத்தார் அப்பா.

''எங்கே போகணும்?'' என்று சந்தோஷைப் பார்த்தாள் பவித்ரா.

''ஊருக்குப் புறப்படறோம். உனக்குத் தெரியாதா?'' என்றான் சந்தோஷ்.

''என்ன விஷயம்? எந்த ஊருக்கு?'' அவள் கேட்டுக் கொண்டிருக்கும் போதே சந்தோஷ் தன் அறைக்குச் சென்று விட்டான்.


எந்த ஊருக்குப் போகணும்? ஏன் போகணும்? திடீரென்று என்ன பயணம்? வெகுவாகக் குழம்பிக் கொண்டே குளிக்கப் போனாள் பவித்ரா.

(தொடரும்)


சில விதி விலங்குகள்!
நரி
இன்னிக்கு நீ நரி முகத்தில் முழிச்சியா?
ஆமாம்! அதிர்ஷ்டம் அடிச்சிருக்கா?
இல்லை. கொட்டாவி விடும் போதெல்லாம் நரி மாதிரி ஊளையிட்டு நீயே, அதனால்!
கரடி
இவன் ஏன் இப்படிக் கரடி மாதிரி கத்தறான்?
குதிரை
நீ புதுசா குதிரை வாங்கியிருக்கியே, யாரிடமிருந்து வாங்கினே?
என்னோட கொள்ளுத்தாத்தா கொடுத்தார்.
புலி
உங்க பையன் கணக்கிலே புலியா இருக்கான்!
பரீட்சையில் நூத்துக்கு நூறு மார்க் எடுக்கறானா?
இல்லை, கணக்குப் போடும் போது புலி மாதிரி உறுமுறான்!
எருமை
என் பையனை எருமை மாடுன்னு திட்டினது தப்பாப் போச்சு!
ஏன்?
அவன் கோபிச்சுக்கிட்டுப் போய்த் தெரு விளக்குக் கம்பத்தில் உரசிக்கிட்டு நிக்கிறான்!
குரங்கு
வேலை கிடைச்ச சந்தோஷத்துல ஒரு இடத்தில் நிக்காம இங்கேயும் அங்கேயும் குரங்கு மாதிரி தாவிட்டு இருக்கானே, எங்கே வேலை கிடைச்சிருக்கு?
வாழைப்பழக் கடையில்!
தொகுப்பு: கடலூர் கனியப்பன்
செ

பூனை இனிப்பைச் சுவைக்குமா?

ரேவதி



வீரன் ஒரு பட்டிநாய். லில்லி ஒரு பூனை. இரண்டும் வசித்தது மேட்டுத் தெருவில். வீரன் மளிகைக் கடைக்காரர் மன்னார்சாமி வீட்டு நாய். லில்லி சலவைக்காரப் பொன்னுசாமியின் வீட்டுப் பூனை. இரண்டுக்கும் எதிரெதிர் வீடுதான்.

வீரனுக்கு லில்லியின் மேல் தீராத வெறுப்பு. அதற்குக் காரணமும் இருந்தது.

லில்லி எங்கிருந்தோ ஒரு நாள் பெரிய மீன் துண்டு ஒன்றைக் கௌவிக் கொண்டு வந்து விட்டது. தனக்கும் பங்கு கேட்டு வீரன் அதை விரட்டிக் கொண்டு வந்தது. லில்லி வீரனுக்குப் போக்குக் காட்டி விட்டு காம்பவுண்டுச் சுவரில் ஏறிக் கொண்டு அதற்கு அழகு காட்டியபடி தானே தின்று தீர்த்தது!

அன்றிலிருந்து வீரனுக்கு லில்லியின் மேல் ஒரு பகைக் கண். அகப்பட்டுக் கொண்டால் கொன்று தீர்த்து விடுவது என்று வாய்ப்பை எதிர் பார்த்துக் கொண்டிருந்தது. அன்று அந்த வாய்ப்புக் கிடைத்தது.

மேட்டுத் தெருவில் ஒரு மைதானம் இருந்தது. அங்கேதான் தெருப் பிள்ளைகள் எல்லாம் விளையாடுவார்கள். அன்று விறகுக் கடை கோபால் வீட்டில் எலிப் பொறியில் ஒரு கொழுத்த எலி சிக்கிக் கொள்ள அதை எமனூருக்கு அனுப்பி வைக்கத் தெருப் பிள்ளைகளெல்லாம் ஒன்று கூடினார்கள். வேணுகோபாலனின் பையன் நந்து எலிப் பொறியை மைதானத்திற்கு எடுத்து வர, அவனது நண்பர்களெல்லாம் கற்களோடு சூழ்ந்து வந்தனர். நந்து கூண்டைத் திறந்து விடத் தயாரானான். வெளியே வரும் எலியைக் கல் வீசியே சாகடிக்க நண்பர் படை காத்துக் கிடந்தது தயாராக! இவர்களிடமிருந்து ஒருவேளை எலி தப்பி விட்டால் பிடித்துக் கொள்ளத் தயாராக லில்லியும் சற்று எட்டத்திலேயே அவர்களுக்குப் பின்னால் வந்தது.

நந்து கூண்டைத் திறந்து விட்டான். எலி வெளியே பாய்ந்தது. காத்திருந்த நண்பர்கள் கற்களை வீசியெறிந்தனர். அவ்வளவு கல்லெறிக்கும் எப்படியோ தப்பித்துக் கொண்டு அந்தப் பொல்லாத எலி ஓட்டமாக ஓடியது. பையன்கள் துரத்தினர். மைதானத்திற்கு வெளியே வந்ததும்தான் லில்லியைப் பார்த்தது எலி. உடனே திரும்பி மைதானத்திற்குள்ளேயே ஓடியது. லில்லியும் துரத்தியது.

எலியைத் துரத்திக் கொண்டு லில்லி மைதானத்திற்குள் வந்து விட்டதை வீரன் கவனித்து விட்டது. மைதானத்தில் மரமோ, நடுவே சுவரோ எதுவும் கிடையாது. அதனால் லில்லியை எளிதில் பிடித்துக் குதறி விடலாம் என்ற நம்பிக்கையில் வீரன் பாய்ந்து வந்தது.

எலியைத் தப்ப விடாமல் லில்லி பாய்ந்து செல்கிறதே என்று மகிழ்ச்சியாக இருந்த நந்துவின் நண்பர்கள் லில்லியைத் துரத்திக் கொண்டு வீரன் செல்வதைக் கண்டதும் ஆத்திரமடைந்தனர். அவர்களில் ஒருவன் கல்லை வீசியெறிந்தான். வீரனின் பிடியில் சிக்கிக் கொள்ளாமல் லில்லியைக் காப்பாற்றியது அந்தக் கல் தான். எலியும் தப்பியது; லில்லியும் வீரனிடமிருந்து தப்பியது! ஒரு கல்லடி வாங்கிக் கொண்டு வீரனும் தப்பியது!

அடுத்த நாள், லில்லி பொன்னுச்சாமி வீட்டுச் சுற்றுச் சுவரில் கற்களைப் பாதி மூடியபடி வெய்யிலில் சுகமாகக் குளிர் காய்ந்து கொண்டிருந்தது. எதிரே நந்து நண்பர்களோடு கோலி விளையாடிக் கொண்டிருந்தான். தெரு ஓரமாக வீரன் வந்து கொண்டிருந்தது. அது

நாலைந்து வீடுகளுக்கு முன்னால் வரும்போதே நந்து அதைப் பார்த்து விட்டான். லில்லியிடமிருந்து எலி தப்பியதற்குக் காரணம் வீரன்தான் என்று வீரனின் மேல் அவனுக்கு ஒரே கோபம்.

"எலி தப்பி ஓடக் காரணமாக இருந்த மன்னார்சாமி வீட்டு நாய் வருதுடா. கோலியாலேயே ஆளுக்கொரு அடி தண்டனையாகத் தரலாம்," என்றான் நந்து நண்பர்களிடம். எல்லோரும் வீரன் அருகே வருவதை எதிர்பார்த்துக் காத்திருந்தார்கள்.

அவர்கள் பேசியதைக் கேட்டுக் கொண்டிருந்த லில்லிக்கு ஒரு கணம் மகிழ்ச்சியாக இருந்தாலும் அவ்வளவு பிள்ளைகளின் கோலியடிக்கும் வீரன் இலக்காகப் போகிறதே என்ற எண்ணம் வீரனின் மேலே இரக்கத்தையே ஏற்படுத்தியது. கண்ணிமைக்கும் நேரத்தில் நாலு வீட்டுக் காம்பவுண்டுச் சுவரின் வழியாகவே ஓடிச் சென்று, "அண்ணே," என்று குரல் கொடுத்தது.

வீரன் நிமிர்ந்து பார்த்து வெறுப்பை உமிழ்ந்தது.

லில்லி கொடுத்த எச்சரிக்கையால் வீரன் உயிர் தப்பியது.

பழைய விரோதத்தைப் பாராட்டாமல் லில்லி தன்னைக் காப்பாற்றிய செயல் வீரனிடம் இருந்த பகையுணர்வு விடைபெறக் காரணமாக இருந்தது. இருவரும் நெருங்கின நண்பர்களாகி விட்டனர்.

அன்று மாலை வழக்கப்படி மேட்டுத் தெரு குப்பை மேட்டுக்கு அருகே இருந்தபடி வீரனும், லில்லியும் பேசிக் கொண்டிருந்தன.

"லில்லி, நாளைக்கு உன் வயிற்றைக் காலியாகவே வைத்துக் கொள். நாளைக்கு எங்க ஐயாவுக்குப் பிறந்த நாளாம். ரொம்பத் தடபுடலாகக் கொண்டாடறாங்க. சென்னையில் படிக்கும் மீனாப் பொண்ணு கூட வந்திருக்கு. வடை, பாயசம், பலகாரத்தோட நல்ல விருந்துச் சாப்பாடு கிடைக்கும். உனக்கும் தரேன்," என்றது வீரன்.

"சாப்பாடெல்லாம் சைவமா, இல்லே அசைவமா?" என்று கேட்டது லில்லி.

"சுத்த சைவம்தான்!" என்றது வீரன்.

"சைவ சாப்பாடெல்லாம் ஒரு விருந்தா?" என்று ஏளனமாகக் கேட்டது லில்லி.

"என்ன லில்லி இப்படிச் சொல்லிட்டே? அசைவமா இருந்தால் கூட வடை, பால் பாயசம், ஜாங்கிரி எல்லாம் உண்டே! இதுக்கு முன்னால அசைவ சாப்பாடெல்லாம் எந்த மூலை?" என்று கேட்டது வீரன்.

அடுத்த நாள் மன்னார்சாமி வீட்டுப் பின்கட்டு அமர்க்களப்பட்டுக் கொண்டிருந்தது. கீற்றுக் கொட்டகை போட்டு, சமையல் செய்து கொண்டிருந்தார்கள். சமையல் வாசனை மூக்கைத் துளைத்தது!

எல்லோரும் சாப்பிட்டான பிறகு உச்சிவேளைக்கு மேல், ஒரு வாழையிலையைத் தாழ்வாரத்தில் போட்டுத் தானே எல்லாவற்றையும் பரிமாறிய மீனா, 'வா வீரா' என்று அன்போடு அழைத்தாள்.

வீரன் வாலை ஆட்டிக் கொண்டு அருகே வந்து பார்த்தது. மசால் வடை, ஜாங்கிரி எல்லாம் இருக்கிறதா என்று ஒருமுறைக்கு இருமுறை பார்த்துக் கொண்டது வீரன். தொன்னையில் பால் பாயசமும் வைக்கப்பட்டிருந்தது.

மீனா உள்ளே சென்றதும், "லில்லி, வா வா," என்று அழைத்தது வீரன்.

அதன் அழைப்புக்காகவே வேப்ப மர நிழலில் காத்துக் கிடந்த லில்லி ஓடி வந்தது ஆவலோடு.

'கொக் கொக்' என்று ஏதோ சத்தம் கேட்டது. இரண்டும் திரும்பிப்




பார்த்தன. கீற்றுக் கொட்டகை உச்சியில் நின்றபடி ஒரு சேவல் இவர்களையே ஏக்கத்தோடு பார்த்துக் கொண்டிருந்தது. வீரன் பயங்கரமாக உறுமியது.

"வீரண்ணே, உறுமி பயப்படுத்தி அதை விரட்டாதீங்க. அதுவும் நம்மைப் போல் ஒரு ஜீவன்தான். உங்களுக்கு இந்த மாதிரி விருந்துச் சாப்பாடெல்லாம் சர்வ சாதாரணம்.. ஆனால், எங்களுக்கு அப்படியில்லே. பாவம் சேவலையும் சேர்த்துப்போம் அண்ணே," என்று கெஞ்சியது லில்லி.

வீரன் சம்மதிக்கவே லில்லி அழைத்தது. சேவல் ஆவலோடு கீழே இறங்கி, அவர்களோடு சேர்ந்து கொண்டது.

"இதுதான் மசால் வடை," என்று வடையை விண்டு லில்லிக்கும் சேவலுக்கும் கொடுத்தது வீரன்.

"ரொம்ப நல்லாயிருக்கு வீரண்ணே. நான் இந்த மாதிரி வடை



யெல்லாம் இதுவரை சாப்பிட்டதே இல்லை," என்று உண்மையாகவே புகழ்ந்தது லில்லி.

"ஆமாண்ணே. நான்கூட இப்படிப் பட்ட பலகாரமெல்லாம் இதுவரை சாப்பிட்டதே இல்லை! அடடா, எவ்வளவு ருசியாக இருக்கு!



"என்னம்மா, எனக்கு இவ்வளவு குறைவா அல்வா கொடுக்கிறாயே?"

"இது உனக்கில்லை, உன் தங்கைக்கு."

"இவ்வளவும் அவளுக்கேவா?"

— சி. பன்னீர்செல்வன், செங்கல்பட்டு.

வாசனை வேற இப்படி மூக்கைத் துளைக்குதே!' என்று வியந்து கொண்டது சேவல்.

'இந்தச் சாதாரண மசால் வடைக்கே இப்படிப் புகழறீங்களே, ஜாங்கிரியையும் பால் பாயசத்தையும் சாப்பிட்டால் என்னமாய்ப் புகழுவீங்களோ தெரியலையே!' என்று கூறிக் கொண்டே பெருமையோடு ஜாங்கிரியை விண்டு வைத்தது வீரன்.

லில்லி ஜாங்கிரியைக் கடித்துப் பார்த்து முகத்தைச் சுருக்கியது.

சேவலும் ஜாங்கிரியைக் கொத்திப் பார்த்து விட்டு முகத்தைச் சுருக்கியது.

'என்னண்ணே, இந்தப் பலகாரத்தையா என்னமோ அப்படிப் புகழ்ந்தீங்க?' என்று ஏமாற்றத்தோடு கேட்டது லில்லி.

'ஆமாண்ணே!'

'வெறும் மண்ணு மாதிரி இருக்கு. இதையா என்னவோ அப்படிப் புகழறீங்க?' என்று தன் வியப்பை வெளியிட்டது சேவல்.

'என்ன, இரண்டு பேரும் இப்படிச் சொல்லிட்டீங்க?' என்று ஏமாற்றத்தோடு கேட்ட வீரன், தானும் ஜாங்கிரியைச் சுவைத்துப் பார்த்தது. அதன் முகத்தில் வியப்புத் தோன்றியது.

'ஜாங்கிரி எவ்வளவு அருமையா இருக்கு! இதைப் போய் இரண்டு பேரும் நல்லாவே இல்லைன்னு சொல்றீங்களே!' என்று தன் வியப்பை வெளியிட்ட வீரன், 'சரி, ஜாங்கிரியை விட்டுத் தள்ளுங்க. இந்தத் தொன்னையிலே பால் பாயசம் இருக்கு. அதையாவது குடிச்சுப் பார்த்து எப்படியிருக்குன்னு சொல்லுங்க.' என்று தொன்னையை அவர்கள் முன்னால் நகர்த்தியது.

இரண்டும் பால் பாயசத்தைச் சுவைத்துப் பார்த்தன.

'பால் பாயசம் செய்து விட்டால் போதும். எல்லோரும் தொன்னை தொன்னையாக வாங்கி வாங்கிக் குடிப்பாங்க. எனக்குக் கூடப் பால் பாயசமென்றால் ரொம்பப் பிடிக்கும். சுவைத்துப் பார்த்துச் சொல்லுங்க,' என்று பால் பாயசத்தின் பெருமைகளை விளக்கியது வீரன்.

"என்னமோ அண்ணே! அந்தப் புளிய மரத்து வீட்டுல வேலைக்காரி பாலைக் கீழே கொட்டிய போது என்னை நக்கிக் குடிக்க அனுமதித்தாங்களே, அதை விட ஒண்ணும் அதிக ருசியா இந்தப் பாயசமோ, இல்லே ஜாங்கிரியோ சுவைக்கலே!' என்று தன் முடிவைக் கூறியது லில்லி.


"லில்லி, அது சர்க்கரை போடாத பச்சைப் பால். இதுல சீனி, முந்திரி, நெய் எல்லாம் கலந்திருக்கு. அது மாதிரியே இந்த ஜாங்கிரி சீனிப் பாகுலேயே பொரித்துச் செய்யப்பட்டது. இதுல ஒவ்வொரு துண்டும் அவ்வளவு இனிப்பா இருக்கும். இதைப் போய் நல்லா இல்லேன்னு சொல்றியே,' என்று வியந்து கொண்டது வீரன்.

"அண்ணே, லில்லி சொல்ற மாதிரித்தான் எனக்கும் இருக்கு. மசால் வடை ரொம்ப நல்லா இருந்தது. அதுக்கு முன்னால இதெல்லாம் ஒண்ணுமே இல்லை. வெறும் மண்ணு மாதிரித்தான் இருக்கு.' என்று லில்லி கூறியதை ஆமோதித்தது சேவல்.

வீரன் இனிப்புச் சுவைக்காத தன் நண்பர்கள் இருவரையும் வியப்போடு பார்த்தது.

அறிவியல் உண்மை:

இனிப்புச் சுவையை உணரும் தன்மை பூனைக்கும் கோழிக்கும் கிடையாது.



காலைக் காட்டி குருநாதராய் மாணிக்க வாசகரை ஆட்கொண்டவர் சிவபெருமான்



பாலைக் கொடுத்து ஞானசம்பந்தரை ஆட்கொண்டார்.
சூலை நோய் கொடுத்து நாவுக்கரசரை ஆட்கொண்டார்.
ஓலை கொடுத்துச் சுந்தரரை ஆட்கொண்டார்.

வாரியார் சொற்பொழிவிலிருந்து
கே.ஜி. ராஜன், சீர்காழி.



உலகிலேயே இதுவரை அரசாண்ட மன்னர்களில் மிக அதிக நாட்கள் அரசோச்சியது யார் தெரியுமா? எகிப்தை ஆண்ட மன்னர்களின் வம்சத்தைச் சேர்ந்த இரண்டாவது பெபி மன்னர்தான்! நூறாண்டுகள் வாழ்ந்த இவர் தனது ஆறாவது வயதில் அரியணை ஏறி 94 ஆண்டுகள் அரசாண்டார்.

தென் அமெரிக்காவில் உள்ள பெரு என்னும் நாட்டின் தலைநகரமான லிமா என்னும் நகரத்தில் அடிக்கடி பூகம்பம் ஏற்படுவதால் அவர்கள் பச்சைச் செங்கற்களைக் கொண்டு வீடு கட்டுகிறார்கள். அப்படியானால் மழை பெய்யும் போது அவர்களுடைய வீடுகள் பச்சை மண்ணாக ஆகிவிடும் அல்லவா? ஆனால் அவர்களு



டைய அதிர்ஷ்டம் ஆண்டு முழுவதும் மழை பெய்வதே இல்லை. நகரத்தின் அருகில் ஓடும் ரிமாக் என்னும் நதி அவர்களுக்கு வேண்டிய தண்ணீரைக் கொடுக்கிறது.

இலக்மன், கல்லிடைக்குறிச்சி.

மழை பொய்த்து விட்டால் ரோம் நாட்டு மதகுருக்கள் ஒரு சக்தி வாய்ந்த தெய்வ விக்கிரகத்தை நடுத்தெருவில் உருட்டு



வார்களாம்.

பிரான்சில் செயின்ட் பீட்டர் விக்கிரகத்தை நதிக்கரையில் பிரதிஷ்டை செய்து பூஜை செய்வார்கள்.

ஈராக் நாட்டில் கன்னிப் பெண்கள் வீடு வீடாகப் போய் நாட்டியம் ஆடுவார்கள்.

ஒரு தவளையைப் பல்லக்கில் வைத்து ஊர்வலமாக வருவது ஒரிசாவிலுள்ள சபரர்கள் என்னும் மலை ஜாதியர் வழக்கம்.

தமிழ் நாட்டில் கொடும் பாவி கட்டிக் கொளுத்துவார்கள்.

ஆர். மகாதேவன், திருநெல்வேலி.

மெருதட்டும் பேனா

இப்போது பார்வையற்றோருக்காக ஸ்பெஷலாக ஒரு பேனாவை இரு பிரெஞ்சுக்காரர்கள் கண்டு பிடித்துள்ளனர். இப்பேனா 'ப்ரெய்லி' எழுத்துக்களைப் போல் தடவிப் பார்த்து அறிந்து கொள்ளக் கூடிய, சற்று மேடான எழுத்துகளை எழுதவல்லது. சமீபத்தில் ஜெனிவாவில் நடந்த கண்காட்சியில் இதற்கு முதற்பரிசு கிடைத்துள்ளது.

ஜோதி, மதுரை — 1.

அமெரிக்காவில் வாஷிங்டன் நகரிலுள்ள தேசிய குற்றவியல் நீதித்துறை நிறுவனம் இப்போது ஒரு புதிய சட்டையை உருவாக்கி, அதனை விளம்பரப்படுத்தி வருகிறது. அந்தச் சட்டை மூன்று பொத்தான்களைக் கொண்ட ஒரு மின்நீலக் கோட்டாகும். செயற்கை இழைகளால் உருவாக்கப்பெற்ற இந்தச் சட்டைக்கு 'கெவ்லார்' என்று பெயர். இந்தச் சட்டையின் சிறப்பு, எந்தவொரு கைத்துப்பாக்கியைக் கொண்டு சுட்டாலும், இந்தச் சட்டை அதிலிருந்து பாய்ந்து வரும் குண்டை உடம்புக்குள் புக விடாமல் தடுத்து விடுமாம்.



இவ்வளவுக்கும் இந்தச் சட்டையின் எடை சாதாரணச் சட்டையை விட ஒன்றரை மடங்குதானாம். அமெரிக்காவில் குற்றச் செயல்கள் மிகவும் அதிகரித்து வரும் நிலைமையில், இந்தப் புதிய சட்டையை அமெரிக்காவில் பலரும் அணிவது இப்போது ஒரு நாகரிகமாகிவிட்டது. இப்போது கெவ்லார் கார் சட்டைகளையும் உட்சட்டைகளையும் காலுறைகளையும் மற்றும் பிற உடைகளையும் தயாரிக்கவும் திட்டமிடப்பட்டு வருகிறதாம். குண்டுகள் துளைக்க முடியாத இந்த உடைகளை முழுவதற்கும் சேர்த்து விலை 2600 ரூபாய் ஆகிறதாம்.

எஸ். அரவிந்தன், ஆற்காடு.

ஊரையே விழுங்கிவிடுவார்கள்

ஈரானை ஆண்டு வந்த நௌஷேர்வான் என்ற பாதுஷா வேட்டையாடக் காட்டுக்குச் சென்றார். அவருடன் சென்ற சமையற்காரன் காட்டிற்கு வந்த பின், "அரசே, சமையலுக்கு உப்பு இல்லையே?" என்றான்.

"பக்கத்து ஊருக்குச் சென்று விலை கொடுத்து உப்பை வாங்கி வா. இல்லாவிட்டால் ஊர் முழுவதும் பாழாகிவிடும்." என்றார்.

சமையற்காரனுக்கு அரசரின் இந்தப் பதில் ஒரே குழப்பத்தைத் தந்தது. "அரசே ஒரு பிடி உப்பை விலை கொடுக்காமல் வாங்கினால் ஊர் பூராவும் எப்படிப் பாழாகும்?" என்று கேட்டான்.

"ஒரு அரசன் தன் குடி மக்களிடம் ஒரு பிடி உப்பை இனமாகப் பெற்றுக் கொண்டால், மறுநாள் அவன் கீழ் உள்ள அதிகாரிகள் ஊரையே விழுங்கி விடுவார்களே!" என்றார் பாதுஷா.

சி. பி., செங்கல்பட்டு.
ஆதாரம்: பொது அறிவுச் செய்திகள் என்ற நூல்.

இங்கிலாந்திலிருந்த இந்தியப் புரட்சி வீரர்களான சாவர்க்காரும், மற்றும் வ.வே.சு ஐயரும் தீபாவளிப் பண்டிகையைச் சிறப்

இங்கிலாந்தில் ஓர் இந்தியர்



பாகக் கொண்டாட எண்ணி, அப்போது (1908 இல்) அங்கே பாரிஸ்டராக இருந்த ஓர் இந்தியத் தலைவரைத் தலைமை வகிக்கக் கேட்டுக் கொண்டனர்.

அதற்கு அவர், "அங்கே இந்திய உணவு வகை. அதுவும் மரக்கறி மட்டுமே சமைக்க வேண்டும். அதுவும் இந்தியர்கள், அந்தச் சமையலைச் செய்ய வேண்டும்," என்று நிபந்தனை விதித்தார். அவர்களும் ஒப்புக் கொண்டனர்.

அன்று பகல் பொழுதிலேயே சமையல் தொடங்கிவிட்டது. இருவரும் கூட்ட வேலையைக் கவனிக்கச் சென்றுவிட, டாக்டர் ராஜன் மற்றும் ஆறு பேர்கள் சமையல் பகுதியில் இருந்தனர்.

அப்போது எளிய தோற்றமும், மெலிந்த உடலும் கொண்ட ஒருவர் வந்தார். தானும் சமையல் வேலையில் பங்கு கொள்ள வேண்டும் என்று கேட்டுக் கொண்டார். அதன் பேரில் டாக்டர் ராஜன் அவரைத் தண்ணீர் எடுக்க, விறகு எடுக்க இன்னும் பல முரட்டு வேலைகளெல்லாம் செய்யச் சொன்னார். அவரும் சலிக்காமல் அலுக்காமல் அவற்றைச் செய்தார். மாலை ஆறு மணி அளவில் வ.வே.சு. ஐயர் அந்த மனிதரைப் பார்த்தார். தூக்கி வாரிப் போட்டது அவருக்கு.

அவர் யார் தெரியுமா?

மகாத்மா காந்திதான்.

சி. பன்னீர் செல்வன், செங்கற்பட்டு.

ஸ்டைலுக்குத் தண்டனை!

அண்ணா அவர்களுக்குப் பொடி போடும் பழக்கம் இருந்தது. பேசும் போது சற்று மூக்கடைப்புடன் அவர் பேச்சு இருக்கும். இதையே பலர் ஸ்டைலாகப் பின் பற்றிப் பேசியதைக் கேட்டிருக்கிறோம்,

இதேபோல, வரலாற்றிலும் ஒரு சம்பவம்: மாவீரன் அலெக்சாந்தருக்குச் சற்றுக் கோணல் கழுத்து (Wry neck). அவன் நடக்கும் போது ஒரு பக்கமாகக் கழுத்தைச் சாய்த்துக் கொண்டு நடப்பான். உலகையே ஆளத் துடித்த மாவீரனின் குறைபாடே, அரசவையில் உள்ளவர்களுக்கு ஸ்டைலாகப் பட்டது! அவையில் உள்ளவர்களில் பலர் கழுத்தைச் சாய்த்து ஸ்டைலாக நடக்கத் தொடங்கினர்! அலெக்சாந்தரின் துணிச்சலையும் வீரத்தையும் 'காப்பி' அடிக்காமல் அவன் குறைப்பாட்டைக் காப்பியடித்ததைக் கண்ட அலெக்சாந்தருக்குக் கோபம் வந்தது! கழுத்தைச் சாய்த்து நடந்து வந்த ஒரு பிரபுவின் கன்னத்தில் ஓங்கி அறைந்தான் அலெக்சாந்தர். கழுத்து நேராகத் திரும்பிவிட்டது! அவனுக்கு மட்டும் அல்ல, அந்த அவையில் கழுத்தைச் சாய்த்து நடந்த அத்தனை பேர்களுக்கும் இந்த அதிர்ச்சி வைத்தியம் கழுத்தை நேராக்கிவிட்டது!

ராஜும் மணிவேலன், அரூர்.



1 முதல் 10 ஊர்கள்

ஒன்று முதல் பத்துவரை உள்ள ஊரைப் பற்றி கேள்விப் பட்டிருக்கிறீர்களா? நெல்லை மாவட்டத்துள் இந்த ஊர்கள் உள்ளன.

ஒண்ணாக்குடி, இரட்டைக்குளம், மூன்றடைப்பு, நான்குநேரி, ஐந்து வீடு, ஆறுமுகநேரி, எழுவர்முக்கி, எட்டையாபுரம், ஒன்பதாம்கட்டளை, பத்தமடை.


எஸ். விஜயா, கைலாசபுரம்.

மேதா விலாசம்


○ 12 வயதிற்குள் பல இசைக் கருவிகளை வாசித்து 13 வது வயதில் சொந்தமாக இசை நோட் எழுதியவர் மேனாட்டு இசை மேதையான பீத்தோவன்.

○ ஒரு கையால் எழுதிக் கொண்டே மறு கையால் சித்திரம் வரையும் திறமை பெற்றவர் மேதை 'லியனார்டோ டாவின்சி.

எஸ். விஜயாசீனிவாசன், திருச்சி — 14.


III
எந்த ஸ்கூலுக்குப் போனாலும் ஸீட் இல்லை ஸீட் இல்லைன்னு சொல்றாங்க! ஸ்கூல் புக்காலே நானே ஒரு ஸீட் போட்டுக் கிட்டேன்!
அப்பா! புக் மணி 260
ஸ்பெஷல் பீஸ் நோட்டுக் 420
எனக்கு டொனேஷன் 500


ஆடுவோமே, பள்ளிக்கு..


மதிப்பிற்குரிய மிஸ் அவர்களுக்கு, எல்.கே.ஜி மாணவன் எழுதிக் கொள்வது
இன்று புஸ்தகங்களைத் தூக்கிவர ஆள் கிடைக்காததால் இன்று லீவ் தருமாறு பணிவுடன் வேண்டுகிறேன்!
கிட்டு L.K.G
பள்ளிச்செலவு 100. டோட்டல்கு 100 மார்க்காவது வாங்கினா; ரூபாய்க்கு ஒரு மார்க் வீதம் வட்டிக்காவது கட்டுபடியாகும்!
வட்டிக்கடை




ஏ பார் ஆப்பிள் பீ பார் பிஸ்கட் சீ பார் சாக்லெட் டீ பார் டிரிங்ஸ் ஈ-பார் எயக் எப் பார் புரூட்ஸ்
சரியான சாப்பாட்டு ராமன் போலிருக்கு
என்னோட புக்ஸீக்கும் கொஞ்சம் அட்டை போட்டுக் கொடுடா!
போடா, என் புக்ஸ்க்கு அட்டை போடறதுக் குள்ளேயே அரையாண்டு தேர்வு வந்துடும்!
ஓடுவோமே!
தஞ்சை மாலரா
டேய், இன்னிக்கி ஒரு நாள் சினிமாவுக்குக் கட் அடிச்சுட்டு ஸ்கூலுக்குப் போகலாம்டா!
ஆடுவோமே
மே
பள்ளிக்கு ஓடுவோமே
மே

கேளுங்கள்!



* எஸ். சிவகுமார், சிதம்பரம்.

கே: கோடையில் கடிகாரங்கள் மெதுவாகப் போவதேன்?



ப: நீ சொல்லும் குறைபாடு பெரும்பாலும் பெண்டுலம் வைத்த சுவர்க் கடிகாரங்களுக்குத்தான் பொருந்தும். அதற்கு விஞ்ஞான ரீதியான காரணம் உண்டு. உஷ்ணத்தால் உலோகம் விரிவடையும் என்பது நீ உணர்ந்ததுதானே? கோடை வெப்பம் பெண்டுலத்தை நீட்டி விடுகிறது. விளைவாக, நீண்ட பெண்டுலம் ஆடும் வேகம் குறைகிறது. எனவே கடிகார முள்ளும் மெதுவாக நகர்கிறது. இதே போல்தான் குளிர் காலத்தில் பெண்டுல உலோகத் தண்டின் நீளம் குறையும். அப்போது பெண்டுலம் ஆடும் வேகம் அதிகமாகும். அப்போது கடிகாரம் வேகமாய் ஓடுவதாய்ப் புகார் செய்வாய். விஷயம் தெரிந்தவர்கள் பெண்டுலத்துக்கு அடியில் உள்ள திருகாணியில் கை வைத்து, ஏற்றியோ இறக்கியோ அட்ஜஸ்ட் செய்து சரியான நேரம் காட்டும்படி திருத்திக் கொள்வார்கள்.

* ரெ. தமிழ்முத்து, வடக்கம்மாபட்டினம்.

கே: நான் குண்டாய் இருக்கிறேன். ஒல்லியாகப் போக ஒரு யோசனை சொல்லுங்கள்.

ப: குண்டாய் இருப்பதற்கு இரண்டு காரணங்கள் உண்டு. ஒன்று நாளக் கோளாறு. இதற்குத் தேர்ந்த டாக்டரைத்தான் பார்க்க வேண்டும். இரண்டு: அபரிமித ஊட்டச் சத்து, அசையாத சோம்பல். இந்தக் குண்டு குறைய யோசனை சொல்லவா? கேள்: 'லங்கணம் பரம ஔஷதம்' என்று சொல்வார்கள். அதாவது 'வயிற்றைக் காயப் போடுவது சிறந்த மருந்து.' பயந்து விடாதே. அதற்காக உன்னை முழுக்க முழுக்கப் பட்டினி கிடக்கச் சொல்லவில்லை. நொறுக்குத் தீனியைத் தவிர்த்து, அளவோடு சாப்பிடு என்றுதான் அறிவுறுத்துகிறேன். அதிலும் கொழுப்புச் சத்துள்ள உணவைச் சேர்த்துக் கொள்ளாதே. காலைச் சிற்றுண்டி, பகல் உணவு, இரவு உணவு. உன் உடலை ஆரோக்கியமாய் வைத்துக் கொள்ள இந்த மூன்று வேளை போதுமே! சாக்லெட், தித்திப்பு, ஐஸ்க்ரீம் போன்றவை அப்படியே உடம்பை உப்ப வைக்கும். ஒதுக்கி விடு. எல்லாவற்றைக் காட்டிலும் மிகவும் முக்கியம் எக்ஸர்சைஸ். அதாவது உடற்பயிற்சி. உடற் பயிற்சி என்றால் குனிந்து வளைந்து நிமிர்ந்து தண்டால், பஸ்கி இப்படி வேர்க்க விறுவிறுக்க வலியெடுக்கச் செய்ய வேண்டும் என்பதில்லை. ஒரு நாளைக்குக் குறைந்தது அரை மணி நேரமாவது ஓடலாம். முடியாவிட்டால் வேகமாய் நடக்கலாம். நான் கண்ணாரக் கண்ட உண்மையைச் சொல்கிறேனே! பொதுக்கு பொதுக்கென்று ஊளைச் சதை போட்டிருந்த ஒரு +2 மாணவன் இந்த முறையில் ஓயாமல் ஓடி, ஓடி ஆறு மாதத்துக்குள் சிக்கென்று ஆகி விட்டான். அந்த ஊளைச் சதை எப்படியோ வடிந்து விட்டது. ஆக, உணவுக் கட்டுப்பாடு, உடற்பயிற்சி இவை போதும் உன் உடம்பிலுள்ள அதிகப்படி சதையைச் செதுக்கித் தள்ளி, உன்னை 'ஸ்லிம்'மாக்குவதற்கு!



* ச. சையது முஸ்தபா, திருச்சி — 17.

கே: பாவேந்தர் பாரதிதாசன் பாடல்களில் தங்களைக் கவர்ந்த பாடல் எது?


ப: எழுத்துலகில் முதன் முதலில் அச்சேறியது எனது கவிதைதான். அதற்குத் தூண்டுகோலாய் இருந்தது பாரதிதாசன் கவிதைகள்தான். அவற்றில் நான் அடிக்கடி சொல்லி மகிழும் பாடல்கள் இரண்டு. கருத்தால் கவர்ந்தது ஒன்று: கண்ணால் கவர்ந்தது மற்றொன்று.

சொல்லப்பூடும்



'தன் பெண்டு தன் பிள்ளை வீடு சுற்றம்
சம்பாத்யம் இவையுண்டு; தானுண்
டென்போன்
சின்னதொரு கடுகு போல் உள்ளம்
கொண்டோன்
தெருவார்க்கும் பயனற்ற சிறிய வீணன்...'

— இப்படி ஆரம்பிக்கும் ஒரு பாடலில் கடுகுக்கு நேர் மூத்த துவரையுள்ளம்; அப்புறம் தொன்னையுள்ளம் பற்றியெல்லாம் சொல்லி விட்டுக் கடைசியாகத் தாயுள்ளத்



தைப் பற்றிச் சொல்லுவார். அந்தப் பாடல் வரியை நான் அடிக்கடி சொல்லி நெகிழ்ந்து போவேன்.

'தூய உள்ளம் அன்புள்ளம் பெரிய உள்ளம்
தொல்லுலக மக்களெல்லாம் ஒன்றே
என்னும்
தாயுள்ளம் தனிலன்றோ இன்பம்?
ஆங்கே
சண்டையில்லை, தன்னலம்தான்
தீர்ந்ததாலே!'

என் கருத்தைக் கவர்ந்த பாரதிதாசன் பாடல் இதுதான்.

அது சரி, கண்ணைக் கவர்ந்த பாடல் பற்றிச் சொல்ல வேண்டாமா? பாடல் எப்படிக் கண்ணைக் கவரும்? கவர்ந்ததே!

அந்தக் காலத்தில் 'சக்தி' என்று ஓர் இலக்கியத் தரமான பத்திரிகை வந்து கொண்டிருந்தது. அதன் நடுப் பக்கத்திலே அழகழகாய்ப் புகைப்படங்கள் வெளி வரும். அந்தப் புகைப்படங்கள் எவை, அவற்றுக்கு விளக்கம் சொல்லி என் கண்ணைக் கவர்ந்த பாரதிதாசன் கவிதை வரிகள் எவை? சொல்கிறேன்.

நன்கு மலர்ந்திருக்கும் ஒரு தாமரைப் பூவின் படம் இடது பக்கம்; வலது பக்கத்தில் ஒரு வட்டத் தட்டிலே வைத்திருக்கும் தானியங்களைச் சுற்றி நெருங்கிக் கூடிக் கொத்தித் தின்னும் வெண் புறாக்கள். இந்த இரண்டு படங்களையும் மனதில் கற்பனை செய்து கொண்டு அவற்றுக்கு விளக்காமல் அடியில் தரப்பட்டிருந்த பாவேந்தரின் கவிதை வரிகளைப் பாருங்கள்:

இடது புறம்: இட்டதோர் தாமரைப் பூ
இதழ்விரித் திருத்தலைப் போல்
வலது புறம்: வட்டமாய்ப் புறாக்கள் கூடி
இரையுண்ணும்...

இந்த உவமை அத்தனை பொருத்தமாய் இருக்கிறது என்றால், அந்தக் காட்சியைப் புகைப்படமாய்க் காட்டியிருந்தது அற்புதம்! உவமை இருக்கட்டும்; அதைத் தொடர்ந்து அவர் உணர்த்தும் கருத்து?

பாடலை முழுசாய்ப் பாருங்கள்:

இட்டதோர் தாமரைப்பூ
இதழ்விரித் திருத்தலைப் போல்
வட்டமாய்ப் புறாக்கள் கூடி
இரையுண்ணும் அவற்றின் வாழ்வில்
வெட்டில்லை, குத்துமில்லை
வேறுவே றிருந்தருந்தும்
கட்டில்லை, கீழ்மேல் என்னும்
கண்மூடிப் பழக்கமில்லை!

பாடல் எப்படி? பாரதிதாசன் நூற்றாண்டு விழா நடந்து கொண்டிருக்கிறது. அதைக் கொண்டாடும் வகையில் நானும் ஏதோ ஒரு சிறு துரும்பைக் கிள்ளிப் போட்டாயிற்று.

அ. ஜெயராமன், மன்னார்குடி.

? கே: மீன்கள் சிறிய குளம், குட்டை போன்ற இடங்களில் வாழ்கின்றன. குளத்தில் நீர் வற்றியபின் மீன்கள் இருப்பதில்லை. ஆனால் சிறிது காலம் கழித்து நீர் வந்தவுடன் மீன்கள் அதில் உள்ளன. அது எப்படி?

ப: அதுதான் இறைவன் கருணை. மீன்கள் முட்டையிட்டுக் குஞ்சு பொரிக்கும் இனம் என்று உனக்குத் தெரிந்திருக்கும். நீர் இல்லாத நேரத்தில் மீன் முட்டைகள் வளர்ச்சியடைந்து, குஞ்சுகள் விருத்தியாகாமல் அப்படி அப்படியே முட்டையாகவே தங்கி விடுகின்றன. என்னதான் நீர் வற்றிப் போனாலும் முட்டையில் உள்ள உயிர்ச் சத்து அழிந்து போகாமல், தனக்கும் ஒரு காலம் வரும் என்று அமைதியாகக் காத்துக் கொண்டிருக்கிறது. மழை பெய்து, அந்த நீரில் முட்டை ஊறிய உடனே மளமளவென்று வளர்ச்சி பெற்று, மீனாகி வெளித் துள்ளி நீந்துகின்றன. சில சந்தர்ப்பங்களில் வெள்ளப் பெருக்கின் போது அடுத்த ஊர் ஆறு குளம் குட்டையிலிருந்த மீன்கள் வழிந்து வெளிவந்து நம்ம ஊர் குளம் குட்டைகளில் நீச்சலடிப்பதும் உண்டு.

சின்ன அண்ணன்

அதோ, என் அம்மா!



கண்ணாடியில் முகத்தை, அப்படியும் இப்படியுமாகத் திருப்பி அழகு பார்த்துக் கொண்டான் ராஜா. புகழ் பெற்ற சலூன் ஒன்றில், ஐந்து ரூபாய் கொடுத்து வெட்டிக் கொண்ட 'கட்டிங்' அது.

'சே! ஏழையாகவே பிறக்கக் கூடாது,' என்று சலித்தவாறு, உடை மாற்றிக் கொண்டான். அந்தக் குடிசைச் சூழலுக்குப் பொருந்தாத உயர்ந்த ரக உடைகள்!

ராஜாவின் அம்மா, டாக்டர் ஒருவருடைய வீட்டில், வேலை பார்க்கிறாள். ஒருமுறை, டாக்டர் வீட்டம்மாவிடம், "எனக்குச் சேலை துணின்னு ஒண்ணும் வேணாம். எங்க ராஜாவுக்குத்தான், நல்ல சட்டை, டிராயர்னால் ஆசை. நம்ம தம்பியோடது, எதுவும் பழசு கொடுத்தீங்கன்னா புண்ணியமாயிருக்கும்." என்று அம்மா தயவாகக் கேட்டுக் கொண்டதிலிருந்து ராஜா பாடு யோகம்தான்.

அந்த மாதிரி உடைகளை, அவன் எந்தக் காலத்திலும், சொந்தமாகத் தைத்துப் போட்டுக் கொள்ள முடியாது. ஒருவேளை, அந்தப் பகட்டான உடைகள்தான் ராஜாவின் மனத்தையும் மிகவும் பகட்டாக மாற்றி விட்டனவோ!

ராஜாவின் நடையுடை பாவனைகளும், பேச்சும், செயலும் ஒரு சாதாரணக் கூலிவேலைக்காரியின் மகனுடையதாக இல்லை. உண்மையைக் கூறினால் கூட யாரும் நம்ப மாட்டார்கள். காலையிலும் மாலையிலும் டாக்டர் வீட்டில் வேலை செய்து, பகலில் கட்டிட வேலைச் சித்தாளாகி மாடாக உழைக்கும், தயாம்மாவின் மகன் என்று தன்னைச் சொல்லிக் கொள்ள ராஜாவுக்குப் பிடிக்காது. துபாயிலிருந்து அப்பா அனுப்பும் பணத்தில் அம்மாவும் தானும் சுகவாழ்வு வாழ்ந்து கொண்டிருப்பதாகச் சொல்வதில்தான் அவனுக்குத் தனிப் பெருமை.

அவனுக்கு ஐந்து வயது நடக்கும் போது, அவன் அப்பா கொத்தனார் வேலை செய்யத் துபாய் சென்று தனது உறவை அறுத்துக் கொண்டது என்னவோ உண்மைதான். அதற்குப் பிறகு ராஜாவை வளர்த்து ஆளாக்க வேண்டுமென்ற வெறியில் தயாம்மா மனத்தைத் தேற்றிக் கொண்டு இப்போது உழைத்து, ஓடாய்த் தேய்வதும் கூட உண்மைதான். ஆனால், இந்த

உண்மைகள் வெளியானால், தான் பழகும் பெரிய இடத்து நண்பர்களைத் துறக்க வேண்டுமோ எனப் பயந்து, 'துபாயிலிருக்கும் அப்பாவைப் பற்றி,'' ராஜா ஏகமாகக் கதையளப்பான்.

வகுப்பறையில் திருத்திய தேர்வுத்தாள்களை வினியோகித்துக் கொண்டிருந்தார் ஆசிரியர். ராஜாவின் முறை வந்தபோது அருகில்



அழைத்தவர், ''ராஜா, இந்த முறையும் முதல் மதிப்பெண் உனக்குத்தான். அதிலும், கட்டுரையில் சுளையாகப் பதினைந்து மார்க்கைத் தட்டிவிட்டாய்! ஆரம்பம், முடிவு எல்லாம் வெகு அருமை. எதிர் கால இலட்சியம் என்ற தலைப்பில், ஸிவில் என்ஜினியராக வேண்டுமென்ற உன் ஆசையை வெகு அழகாக விளக்கியிருக்கிறாய்,'' என்று பாராட்டியபோது அவன் காலரைத் தூக்கிவிட்டுக் கொண்டான்.

இடைவேளையின் போது மற்ற மாணவர்கள், மிட்டாய்க்காரனையும் ஐஸ்கிரீம் வண்டியையும் சுற்றிக் கொண்டிருந்த நேரத்தில் ராஜாவின் நண்பர் குழு மரத்தடியில் கூடியது. பிரபுதான் பேச்சை ஆரம்பித்தான். ''நாளைக்குச் சனிக்கிழமை. காலையில் மட்டும் ஸ்பெஷல் கிளாஸ். மத்தியானம் லீவு. நாமெல்லாம் கார்னிவோரா ஓட்டலுக்குப் போகிறோம்.'' என்றான் தீர்மானமாக. கார்னிவோரா நகரின் பிரபலமான படாடோபமான அசைவ ஹோட்டல். எல்லோரும் வியப்புடன் பார்க்க, பிரபு தொடர்ந்தான். ''யாரும் மத்தியானச் சாப்பாடு கொண்டுவர வேண்டாம். ஹோட்டலில் போய்ச் சாப்பிடலாம். எங்க மாமா கூட நான் போயிருக்கேன்! ஒரு சிக்கன் ரோஸ்ட். ஆளுக்குப் பத்து ரூபா போதும். இதைக் கூடவா கொண்டு வர முடியாது?''

எல்லோரும் ஒருவரை ஒருவர் பார்த்துக் கொண்டனர். ''ஓ. கே. போலாண்டா!''

ஒரே குரலில் ஒத்துக் கொண்ட பொழுது, ராஜா மட்டும் தனித்திருந்து விழித்தான். ''எங்கம்மா கொடுக்க மாட்டாங்கடா.'' சோகத்துடன் பதிலுறுத்தான்.

''போடா, நாமெல்லாம் ஒரே குரூப் உன்னை மட்டும் விட்டுட்டு, நாங்க போக முடியுமா?''

'வகுப்பிலும் வயதிலும் ஒரே குரூப் தான். ஆனால் வாழ்விலும் வசதியிலும் வேறு வேறு குரூப்,' என்பதைச் சொல்லமாட்டாமல் தவித்தான் ராஜா. ஆனாலும் அவர்களைத் தவிர்க்க மனமில்லை.

அம்மாவிடம் நோட்ஸ் வாங்க வேண்டும் என்று பொய் சொல்லி அவளுடைய ஒருநாள் கூலி பத்து ரூபாயை வாங்கிக் கொண்டு அந்தப் பணக்கார நண்பர்களுடன் ராஜா சேர்ந்து கொண்டான்.

பீடாவை வாங்கி மென்ற

தனலக்ஷ்மி கருப்பைய

வாறு கைப்பிடிச்சுவரை யொட்டி வந்து நின்றான் ராஜா.

பக்கத்துக் காலியிடத்தில் கட்டிட வேலை நடந்து கொண்டிருந்தது. தற்செயலாக அந்தப் பக்கம் பார்வையை ஓட்டிய ராஜா திடுக்கிட்டான். ஓடி ஓடி வேலை செய்து கொண்டிருந்த சித்தாள்கள் கூட்டத்தில் அவன் அம்மாவும் ஒருத்தி!

சட்டென்று தூணுக்குப் பின்னால் ஒதுங்கிக்கொண்டான். நல்லவேளை, அவன் நண்பர்களுக்கு அம்மாவைத் தெரியாது. பிரபு, பில்லுக்குப் பணம் கொடுத்து விட்டு வ்ந்து விட்டால் ஓடி விடலாம்.

கீழே வேகமாகக் கலவைச் சட்டியைக் கொண்டு போன அம்மா, ஒரு வினாடி நேரத்தில் கால்கள் தடுமாறி அருகிலிருந்த சாரத்து வலையை கைஆதரவுக்கு எட்டிப் பிடிக்க, தலையிலிருந்த சிமெண்ட் கலவை தரையில் `தொம்மென்று விழுந்தது.

கொத்தனார் பெருங்கோபத்துடன் எழுந்து, அம்மாவின் தோள்பட்டையில் கையை வைத்துத் தள்ளினார். கெட்ட வசவொன்றை உதிர்த்து, ''மூதேவி, வேலை செய்யச் சக்தி இல்லாமே வந்து ஏன் என் உயிரை எடுக்கறே? சிமெண்ட் உங்கப்பன் வீட்டிலேயா இருக்கு இப்படித் தரையில் போட்டு அள்ளறதுக்கு? ஏ...... முத்தம்மா, நீ இங்க வந்து நில்லு. இவ அங்கபோயி ஜல்லி அள்ளிக் கொட்டட்டும். ஆத்த மாட்டாத சனியங்க!" கடுங்கோபத்துடன் கத்தியவாறு, கட்டிடத்தின் சொந்தக்காரரை ஓரக் கண்ணால் பார்த்தவாறே, வேலையைக் கவனிக்கச் சென்றார்.

அவமானத்தாலும், கூச்சத்தாலும் ஒடுங்கிய அம்மா, மௌனமாகக் கலவையை வழித்துப் போட்டுக் கொண்டு, கண்களைத் துடைத்தவாறே நகர்ந்தாள். கேலியாகச்சிரிக்கும் சித்தாள்கள் கூட்டத்திடையே அந்தக் கொளுத்தும் வெயிலில் அம்மா வெறும் பாதங்களோடு, அனல் பறக்கும் ஜல்லிகளை இரும்புச் சட்டியில் அள்ளிப் போட்டுச் சுமந்து கொண்டிருந்தாள்.

சரியான அன்ன ஆகாரமின்றி, சோர்வை வெளிக் காட்டாமல் ஓர் இலட்சிய வெறியோடு வேலை செய்து கொண்டிருந்த தன் அன்னையின் மெலிந்த உடலைப் பார்த்த ராஜாவுக்குக்கண்களில்நீர் முட்டியது. அவன் கண்கள் திறந்தன. அவனைப் பத்து மாதம் உடலில் சுமந்தவள், இன்றும் உள்ளத்தில் சுமப்பவள். கல்லையும் மண்ணையும் சுமப்பதோடு, அவமானங்களையும் சுமந்து கொண்டு கடும் வெயிலில் அரும்பாடுபட்டு அவள் ஈட்டிய கூலிப் பணத்தை —இதோ, ஆடம்பரமான ஹோட்டலில் வந்து அள்ளியிறைக்கும் அருமை மகன் இவன்! அப்பா இல்லாத குறை அவனுக்குத் தெரியக் கூடாது என்று தன்னை வருத்தி உழைத்து, அவனைக் காப்பாற்றும் இந்த அப்பழுக்கற்ற தாய்க்கு முன் பணக்கார நட்புக்காக வெளி வேஷமிடும் பகட்டு நடிகன் அவன்! பத்து வருடப் பள்ளிப் படிப்பு இவனுக்கு அளித்தது அறிவையோ, ஒழுக்கத்தையோ அல்ல. தன் வறுமை கண்டு நாணி மூடி மறைக்கும் பொய்மையை இந்த அஸ்திவாரத்தில் எழும்பும் அவன் எதிர் காலம் எப்படியிருக்கும்? ராஜாவுக்குச் சற்று முன் சாப்பிட்ட உணவு குமட்டிக் கொண்டு வந்தது. இனித்த பீடா கசந்தது. பிரபு வந்து தோளைத் தட்டினான். ஏண்டா ஆளுக்கு ஒரு ரூபா மிச்சம் இருக்கு. காமனா ஒரு முந்திரி பொட்டலம் வாங்கவா?

''வேண்டாண்டா. அதோ எங்கம்மா அங்கே வேலை செய்யுறாங்க. அவுங்களுக்கு ஒரு டீயும், பன்னும் வாங்கிக் கொடுத்துட்டு வர்றேன். நீங்க போங்க.'' இப்போது, அவன் பார்வையில், நண்பர்கள் தன்னைக் கேவலமாக நினைப்பார்களோ என்ற தவிப்பில்லை. உயரமான கட்டிடத்தை உருவாக்கும் தொழிலாளிகளில் ஒருத்தி என் அம்மா; அவள் உழைப்பில் நானும் ஒருநாள் உயர்வடைவேன் என்ற பெருமிதம் தெரிந்தது.



தம்பிரானுக்குத் தலைவணங்கினார் யார்?

தில்லைச் சிதம்பரத்திலே தம்பிரான் என்னும் பெயருடைய சவரத் தொழிலாளி ஒருவர் இருந்தார். அவர் தில்லை நடராசப் பெருமானிடம் எல்லை இல்லாத பக்தி உடையவர்.

ஆயினும் தில்லைப் பெருமானின் திருவருள் தரிசனம் வேண்டும் என்று வேண்டிக் கொள்ள மாட்டார்.

அதற்குப் பதிலாக, 'தில்லைப் பெருமானே! கவிச்சக்கரவர்த்தியான கம்பர் பெருமானை ஒரு முறையாவது நேரிலே கண்டு பேசும்படியான பெரும் பேறு கிடைக்கும்படி திருவருள் புரிய வேண்டும் என்று வேண்டிக் கொள்வார்!

ஒரு சமயம் கவிச் சக்கரவர்த்தி கம்பர் தில்லைக் கோயிலுக்குச் சென்று தரிசித்து விட்டுச் சென்றார் தம்பிரான் இருந்த வீட்டு வழியாக.

அப்பொழுது அந்தச் சவரக் கலைஞர் இருந்த கூடத்தைப் பார்த்தார் கம்பர். பார்த்ததும் அவரிடம் சவரம் செய்து கொள்ள வேண்டுமென்று விரும்பினார்.

முடிவெட்டும் பொழுது இருவருக்கும் நடந்த உரையாடல்களினால் தமக்கு முடி திருத்துபவர். தம்மிடத்தில் மிகுந்த பக்தியும் ஈடுபாடும் கொண்ட அறிவாளி என்பதைக் கம்பர் புரிந்து கொண்டார். ஆனால் அதைச் சவரக் கலைஞரிடம் தெரிவிக்கவில்லை.

தம்பிரானுக்கும் அவர் கம்பர் என்று தெரியாது. ஆனால் அவர் ஒரு புலமை மிக்க புலவராகத்தான் இருக்க வேண்டும் என்று கருதினார்.

"ஐயா! கவிச் சக்கரவர்த்தி கம்பர் பெருமானைப் பற்றித் தங்களுக்குத் தெரிந்திருக்குமே?"

"ஆமாம்! அவரிடத்திலே உமக்கு ஈடுபாடு உண்டா?"

"ஈடுபாடு என்றால் சாதாரண ஈடுபாடு இல்லை. அவர் பாடல்களிலே என் நெஞ்சைப் பறிகொடுத்தவன். சுருக்கமாகச் சொல்ல வேண்டுமானால் நான் அவருக்கு அடிமையான கம்பதாசன். அந்தப் புலவர் பெருமானை என் வாழ்நாளில் ஒரே ஒரு முறையாவது கண்டு பேச வேண்டும். அவரின் திருவாயால் அருமையான ஒரு தமிழ்ப் பாடலைக் கேட்டு மகிழ வேண்டும். அதற்கு எப்படியாவது துணை புரிய வேண்டும் என்று தில்லைப் பெருமானைத் தினமும் வேண்டித் தொழுகிறேன். அந்தப் பாக்கியம் என்றுதான் கிட்டுமோ? எவர் மூலம் கிட்டுமோ? எப்படிக் கிட்டுமோ தெரியவில்லையே! ஐயா! தாங்கள் கம்பர் பெருமானைப் பற்றி அறிந்ததைச் சொன்னால், அதைக் கேட்டு மிகவும் அக மகிழ்வேன்."

தம்பிரானின் நெஞ்சைப் புரிந்து கொண்டார் கம்பர். அதனால் முடி திருத்தும் கலைஞரை நோக்கி, "நீவிர் கம்பரைப் பற்றி யாது கேள்விப்பட்டிருக்கிறீர்?" என்றார் ஏதும் அறியாதவர் போல.

"அவரைப் பற்றி எத்தனையோ வியத்தகு செய்திகளைக் கேள்விப்

தமிழ்முடி

பட்டிருக்கிறேன். ஆனால்...'' மேலே கூறாமல் நிறுத்தினார்.

''ஏன் நிறுத்தி விட்டீர்?''

''ஐயா, அவர் பொன்னுக்கும் பொருளுக்கும் தாம் ஒருவரைப் புகழ்ந்து பாடுவார். அதுவும் கொடுப்பதாகச் சொல்லும் முழுத்தொகையையும் கொடுத்தால்தான் முழுப் பாடலைப் பாடுவார். அப்படி இல்லாமல் அல்லது இயலாமல் பாதிதான் கொடுக்க நேர்ந்தது என்றால் பாதிப் பாட்டுத்தான் பாடுவார். மீதிப் பாட்டைப் பாட மாட்டார் என்ற ஒரு செய்தி கேள்விப்பட்டேன். அதுதான் என் மனத்தை மிகவும் வாட்டி வதைக்கிறது!''

''ஏன்?''

''அவர் மாபெரும் சக்கரவர்த்தி. கலைமகளின் பேரருளைப் பெற்றவர். புவிச் சக்கரவர்த்தியான சோழ மன்னனையும் அவன் தருவதாகச் சொன்ன அவைக்களப் புலவர் தலைமைப் பதவியையுமே வெறுத்து வெளிவந்தவர். அத்தகையவர் இத்தகைய செயலைச் செய்திருப்பார் என்று கனவிலும் என்னால் கருத முடியவில்லை. அவருக்கு வேண்டாதவர் அல்லது அவர் புகழில் பொறாமை கொண்டவர் யாராவது தாம் இத்தகைய வேண்டாத பொய்ச் செய்திகளைப் பரப்பி விட்டிருக்க வேண்டும் என்பதில் சற்றும் ஐயமில்லை,'' என்றார் தம்பிரான்.

அதற்குள் கம்பருக்குத் தலை முடி திருத்தும் சவரமும் முடிந்தது.

தம்பிரானின் அருமையான தலை முடி திருத்தும் சவரக் கலையின் நளினத்திலே கம்பர் தம்மையே மறந்து மயங்கி விட்டார். அவரையும் அறியாமலே அவர் திருவாயினின்றும், தம்பிரானின் சவரக் கலையின் பெருமையைப் பற்றிய அருமையான ஒரு தமிழ்ப் பாடல் அவதரித்தது.

'தம்பிரான் என்ற சவரக் கலைஞரிடத்திலே வந்து சவரம் செய்து கொள்ளாதவர் — செய்து கொள்ள விரும்பாதவர் யாருமே இருக்க முடியாது. அவரிடத்திலே சவரம் செய்து கொள்ள வருபவர் யாராக இருந்தாலும், பேரரசராக இருந்தாலும் சரி, தம்பிரானுக்குக் கைகூப்பி, தலை வணங்கித்தான் ஆகவேண்டும். ஏன்? எப்படி? முடி வெட்டும் பொழுது தலையைக் குனிந்து தாழ்வதும், இரு கைகளையும் ஒருசேர மேலே தூக்கிக் கொள்வதும் வழக்கம். அதனால் தம்பிரானிடத்திலே சவரம் செய்து கொள்ளாதவர்களோ, தலை வணங்காதவர்களோ யாருமே இல்லை,' என்ற அழகிய கருத்தமைந்த பாடல் அது.

அதைக் கேட்டதுமே, இத்தகைய தித்திக்கும் முத்தமிழ் இன்பத்தை மொத்தமாகத் தரும் பாடலைப் பாடும் ஆற்றலும், ஏற்றமும் உடையவர் கம்பர் ஒருவரேதாம் என அறிந்து, ஆனந்தக் கண்ணீர் பெருகக் கவிச்சக்கரவர்த்தியின் திருவடியிலே வீழ்ந்தார்!

வீழ்ந்தவரை வாரியெடுத்து அன்புப் பெருக்கால் அணைத்துக் கொண்டு, மகிழ்ந்தார் கம்பர்.

அவர்தம் சிரஞ்சீவிப் பாடல் —

ஆரார் தலைவணங்கார்?
ஆரார்தாங் கையெடார்?
ஆரார்தாம் சத்திரத்தில் ஆராதார்? — சீராரும்
தென்புலியூர் மேவும், சிவனருள்சேர்
அம்பட்டத் தம்பிரான் வாசலிலே தான்?



மணி என்ன?

தமிழ்ப் பெரியார் திரு. வி. க., கண் பார்வை மங்கி, படுக்கையில் இருந்த போது, மணி பார்க்க விரும்பினார். அருகில் இருந்த ஒருவரிடம், ''காமாட்சி, கால அளவினைக் கடிதில் நோக்குக' என்று கூறினார். மணி பார்த்தவர், ''அஞ்சு முகனோடு ஆறு முகனும் அவன் குஞ்சுமணியினோடு குகனும்,'' என்றார்.

மணி என்ன என்று உங்களுக்குப் புரிகிறதா?

அஞ்சுமுகன் — 5. ஆறுமுகன் — 6. குஞ்சுமணி — ½. குகன் — ¼. அதாவது 11¾.

— ஆர். மகாதேவன்,
திருநெல்வேலி — 6.

யாருக்கு விடுதலை?

திருமுருக கிருபானந்த வாரியார்



ஒரு சமயம் விக்ரம சோழன் மாறுவேடம் பூண்டு நகர் சோதனை செய்து வந்தான். வரும் வழியில் சிறைச் சாலைக்குச் சென்றான். அங்கே கைதிகள் வாடிய முகத்துடனும் நீடிய துன்பத்துடனும் கிடந்தார்கள்.

வேந்தன் ஒரு கைதியைப் பார்த்து, ''அப்பா! நீ ஏன் சிறைக்கூடம் வந்தாய்?'' என்று வினவினார்.

கைதி, ''ஐயா! எங்கள் ஊரில் நீதிபதிக்குப் பல வீடுகள் உண்டு. நான் ஒரு வீட்டில் குடியிருந்தேன். அவர் காலி பண்ணச் சொன்னார். வேறு வீடு கிடைக்காமையால் நான் காலி செய்யாதிருந்தேன். என் மீது வழக்குத் தொடுத்தார் நீதிபதி. என்னை விரோதிப்பாரானால் நியாயம் எப்படிக் கிடைக்கும்? அவர் வீட்டில் களவாடினேன் என்று ஜோடித்துக் குற்றமற்ற எனக்கு ஓராண்டு தண்டனை விதித்தார். என் தலைவிதி இங்கு வந்து கஷ்டப்படுகிறேன்,'' என்றான்.

மற்றொரு கைதியைப் பார்த்து, ''நீ வந்த காரணம் யாது?'' என்றார்.

''ஐயா! எனது தலையெழுத்தைக் கேட்கின்றீரா? என் வீட்டுககு அடுத்த வீட்டில் போலீஸ் சப் இன்ஸ்பெக்டர் குடியிருக்கிறார். அவர் மனைவி என் மனைவியிடம் ஒரு நாள் சர்க்கரை கேட்டாள். என் மனைவியும் சிறிது



தந்தாள். மறு நாளும் அதே வழக்கமாகக் கேட்டாள். என் மனைவி கோபமாக இல்லை என்றாள். இதனால் அவளுக்குக் கோபம் வந்து, தன் கணவனிடம் ஏதோ கலகம் மூட்டி விட்டாள். மனைவியின் சொல்லை வேதவாக்காக எண்ணும் அந்த மடசாம்பிராணி வேறு யாரோ செய்த கொலையை நான் செய்ததாக வழக்குக் கற்பித்து என்னை ஆறு வருடம் தண்டிக்கச் செய்தார். பழி ஒரு புறம் பாவம் ஒருபுறம்; உலகத்தில் நீதி ஏது, நெறி ஏது?'' என்றான்.

''ஐயா, நீர் ஏன் வந்தீர்?''

''அந்தக் கதையைக் கேட்கிறீரா? சொல்லுகிறேன். எங்கள் ஊரில் ஒரு வக்கீல் உண்டு. அவருக்கு ஒருநாள் வண்டி ஓட்டினேன். வாடகை விஷயத்தில் தகராறு வந்தது. அவர் ஒரு பொல்லாத ஆள். என்னை அவர் ஓங்கி அடித்து விட்டு, என் மீது பொய் வழக்குத் தொடுத்து, பொய் சாட்சி வைத்து, நான் அவருடைய மணி பர்சை எடுத்து விட்டேன் என்று காரணம் காட்டிச் சிறைத் தண்டனை வாங்கித் தந்து விட்டார். உலகிலே ஒழுங்கும் உயர்வும் இல்லை.''

— இப்படியே ஒவ்வொரு கைதியும் தான் ஒரு குற்றமும் புரியவில்லை என்றும்,. அநியாயமாகச் சிறை செய்யப்பட்டதாகவும் கூறி வந்தார்கள்.

இறுதியில் வேந்தன் ஒருவனைக் கண்டு, ''ஏனப்பா, நீ இங்கு வந்த காரணம் யாது?'' என்றார்.

''ஐயா, நான் ஏழை. ஏழு குழந்தைகள் எனக்கு. பெற்றோரும் இருக்கின்றனர். பெரிய குடும்பம். உழைத்தாலும் உரிய கூலி கிடைப்பதில்லை., பிள்ளைகள் பசித் துன்பத்தால் தவிப்பதைப் பார்க்க முடியவில்லை. களவைக் கனவிலும் எண்ணக் கூடாது தான். வறுமை என் மதியை மறைத்தது. ஒரு செல்வந்தர் வீட்டில் திருடினேன். திருட்டுத் தொழில் தீமையானது என்று தெரிந்தே திருடினேன்.. பிடிபட்டேன். நீதிபதி என்னை விசாரித்து நியாயப்படி என்னைத் தண்டித்தார். என்னைச் சிறைச்சாலையில் புகுத்தியது நீதிபதியன்று. என்னுடைய திருட்டுக் குணமேயாகும். செய்த குற்றத்தை நினைத்து நாளும் கண்ணீர் வடித்துக் கொண்டிருக்கிறேன்,'' என்றான்.

வேந்தன் அது கேட்டு வெகுண்டான். சிறையதிகாரியை அழைத்தான். ''ஓய் அதிகாரியே! இங்கே வாரும். இங்குள்ள அத்தனை பேரும் ஒரு சிறிதும் குற்றம் புரியாதவர்கள். இதோ இருக்கிறவன் திருடன். சுத்த மோசக்காரன். நல்லவர்கள் இருக்கின்ற இடத்தில் ஒரு பொல்லாதவன் இருக்கக் கூடாது. பசுக்களுக்கு இடையில் பன்றியிருக்கக் கூடாது. ஆதலால், இவனை இப்போதே விடுதலை செய்து வெளியே அனுப்பும்,'' என்றான்.

மன்னனுடைய குறிப்பை உணர்ந்த சிறையதிகாரியும், ''ஏடா மூடா! திருட்டுப் பயலே, தூயவர்களுக்கு இடையிலேயுள்ள தீயவனே! ஓடிப் போ,'' என்று கூறி அவனை விடுதலை செய்தார்.


குற்றத்தை ஒப்புக் கொண்டு உண்மையை உரைத்ததனால் அவன் விடுதலை பெற்றான்; உய்வு பெற்றான். மன்னனின் பெருங்கருணைக்குப் பாத்திரமானான்.

அதுபோல் நாமும், உலகமாகிய பெரிய சிறைச்சாலையில், இந்த உடம்பாகிய சிறிய அறையில் கட்டுண்டு கிடக்கிறோம். நாம் புரிந்த தீவினையை நாமே கூறி இறைவனிடம் முறையிட்டால், நமது பாவத்தை இறைவன் மன்னித்து நமக்கு விடுதலையாகிய வீடுபேறு வழங்குவார்.

''அந்தப் பூச்சிக்குக் குளிரவே குளிராது. ஏன் தெரியுமா?''

அதான் கம்பளிப்பூச்சி ஆச்சே!''

— கடலூர் கன்னியப்பன்.





ஆசிரியர் வாழ்கவே!

நமது நாட்டுக் குடி யரசின்
நல்ல முன்னாள் தலை வராம்!
அமைதி யான சர்வப் பள்ளி
அளித்த சிறந்த மேதை யாம்!

அந்த மேதை பிறந்த நாளை
ஆசி ரியர் தினம் என
வந்த னைகள் செய்து நாமும்
வகையு டனே போற்று வோம்!

ஆண்டு தோறும் செப்டெம் பரின்
ஐந்தாம் நாளில் அவர் களின்
மாண்பு களைக் கூறி நாமும்
மதித்துப் போற்றிப் பாடுவோம்!

கற்ற லுக்குக் கார ணமாய்க்
கடமை செய்து குழந் தையின்
அறிவுக் கண்ணைத் திறந்து வைத்து
அகிலம் வாழ உழைப் பவர்!

பேதம் ஏதும் காட்டி டாமல்
பிறருக் காக உழைப் பவர்!
தீது வந்த போதும் நமக்குத்
துணைவ னாக நிற் பவர்!


பாசத் தோடு பழகி நல்ல
பண்பு களை வளர்ப் பவர்!
மோச மான பிள்ளை கூட
மேன்மை அடையச் செய் பவர்!

வருத்தத் தோடு வந்த வரின்
வாட்டம் போக்கிக் களிப் பவர்!
கருத்து டனே அவர்கள் வாழக்
கடமை களைச் செய் பவர்!

குறும்புக் காரப் பிள்ளை களைக்
கண்டிப் புடன் திருத் தியே
எறும்பு போலச் சுறுசு றுப்பாய்
இயங்கச் செய்யும் உத்தமர்!

அறிவுக் கடலாய் இருந்த போதும்
அமைதி யாக வாழ் பவர்!
நெறியில் நின்று நமது வாழ்வை
நெறிப் படுத்தும் நல் லவர்!


உலகுக் கொரு ஆத வன் போல்
ஊருக் கொரு அறி ஞனாய்
விளங்கு கின்ற ஆசி ரியர்
வாழ்க! வாழ்க! வாழ்கவே!




- ஜி.ஜெயராமன்


நண்டுகள்

ஆழி



ஜப்பானில் உள்ள 'சிலந்தி நண்டுதான் உலகிலேயே பெரிய நண்டு. அதன் ஒரு காலின் நீளமே 3½ மீட்டர் இருக்கும்!






'ஹெர்மிட்' என்னும் சந்நியாசி நண்டுக்குச் சொந்தமாக மேல்ஓடு கிடையாது. இறந்து போன வேறொன்றின் ஓட்டுக்குள் புகுந்து கொண்டுதான் உயிர் வாழும். அந்த ஓடு பழுதுபட்டால், வேறு ஓட்டுக்குள் புகுந்து கொள்ளும்!



பிரிட்டிஷ் கடற்கரைகளில் 'மனித முக நண்டு' என்று ஒரு வகை நண்டு இருக்கிறது. அதன் மேல் ஓட்டில் மனிதனின் முகம் மாதிரி உருவம் அமைந்திருக்கிறது!




நிகோபார் தீவில் 'தேங்காய் நண்டுகள்' அதிகம். ஒவ்வொன்றும் சுமார் 20 பவுண்டுகள் எடை இருக்கும். நன்றாகத் தென்னை மரத்தில் ஏறும். அதன் உணவு இளநீரும் தேங்காயும்தான். இடுக்கி போன்ற தன் உறுதியான கால்களால் தேங்காய் மட்டையைக் குடைந்து, தேங்காயைச சாப்பிட்டு விடும்!




'பிடிலர் நண்டு'க்கு முன்பக்கம் இரண்டு கால்கள் உண்டு. அதில் ஒன்று மிகவும் பெரிதாக இருக்கும். அது தற்காப்புக்காக இருக்கிறது. சண்டையில் அந்தப் பெரிய கால் துண்டிக்கப்பட்டுவிட்டால், சில நாட்களில், மறுபக்கம் உள்ள சிறிய கால் பெரிதாக வளர்ந்துவிடும்! இதை 'ஒருகால் நண்டு' என்றும் சொல்லுவார்கள்.



எந்த ஒரு நண்டும் தன் காலை இழந்து விட்டால் அந்தக்கால் மறுபடியும் வளர்ந்து விடும். அதன் கால் பாதியாக உடைந்துவிட்டாலும் மீதிப்பகுதி முழுமையாக வளர்ந்துவிடும்!



நண்டு கடினமான ஓட்டுடன் வளர முடியாது. அதனால் ஆண்டுதோறும் அது தன் ஓட்டைக் கழற்றிவிடும். புது ஓடு உருவாகிக்கொண்டிருக்கும்போது பழைய ஓட்டைக் கழற்றிவிடும். புது ஓடு கடினமாகிறவரையில் அது எங்காவது பதுங்கிக்கொண்டிருக்கும். இல்லாவிட்டால், எதிரிகளால் அழிக்கப்பட்டுவிடும்!



சில நண்டுகள் 'அனிமோன்' என்னும் கடல் பிராணிகளைத் தனக்காக இரையைப் பிடித்துக் கொடுக்க வைத்துக்கொள்ளுகின்றன!


உலகில் எல்லா பிராணிகளும் முன்பக்கமாகவே நடக்கும். ஆனால், நண்டு மட்டுமே பக்கவாட்டில் நடக்கக் கூடியது!



நண்டின் ஓட்டிலிருந்து, அறுவை சிகிச்சையின் போது தையல் போடும் சூச்சர் எனப்படும் நூல் தயாரிக்கிறார்கள். இதனால் தையலைப் பிரிக்க வேண்டியதில்லை; தசையுடன் கரைந்து இணைந்துவிடுகிறது இந்த இழை. இந்த முறையைக் கண்டுபிடித்தவர் அமெரிக்க டாக்டர் பால் ஆஸ்டின்.



பெண் நண்டின் வயிற்றைக் கிழித்துக் கொண்டுதான் குஞ்சுகள் வெளிவரும். உடனே பெண் நண்டு இறந்துவிடும்!



பிருந்தாவனக்

என்? என்? என்?





வண்டு ஒன்று வந்தது
முன்னே முன்னே பறந்தது;
வண்டல் படிந்த குளக்கரையில்
வண்ணப் பூவில் அமர்ந்தது!

குளத்துத் தவளை ஒன்று அங்கே
தத்தித் தத்தி வந்தது;
இளைத்து நின்ற வண்டினைத்தான்
வளைத்துப் பிடித்துத் தின்றது.

புற்றிலிருந்து பாம்பு ஒன்று
சீறிச் சீறி வந்தது;
பற்றிப் பிடித்துத் தவளையைத்தான்
பலகாரமாய்த் தின்றது.

பருந்து ஒன்று அங்கு சுற்றிப்
பறந்து பறந்து வந்தது;
விருந்து என்றே பாம்பதனைத்
தாவிப் பிடித்துத் தின்றது.

வேடனொருவன் அங்கு தேடி
வில்லும் அம்பும் எடுத்ததேன்?
தேடிப் பிடித்துப் பருந்தின் மீது
சீறும் அம்பைத் தொடுத்ததேன்?

— எஸ். ராமச்சந்திரன்,
இராணிப்பேட்டை.

எண்ணு கண்ணு!

நீயும் நானும் ஒண்ணு என்று
நினைத்து வாழ எண்ணு!
தீமை வாயில் மண்ணு போட
திடம் கொள்ளடி கண்ணு!

பொய்யைத் தள்ள எண்ணு — வாழ்வில்
புதுமை தோன்றப் பண்ணு!
பசித்த பின்னே உண்ணு — பாவின்
பழியைப் போக்க எண்ணு!

சிறுமை வாழ்வின் புண்ணு — அதை
சிதைக்கும் வழியை எண்ணு!
பொறுமை தேங்கப் பண்ணு — வாழ்வின்
பெருமை ஓங்கும் கண்ணு!

— மீ. ப. நாராயணன், மதுரை.

செய் தம்பி செய்!



நன்றாய்ப் பேசக் கற்றிடு — தம்பி
நாவின் அரசாய்த் திகழ்ந்திடு.
கண்ணின் மணியாய் விளங்கிடு — தம்பி
காலத்தை வென்று நிலைத்திடு!

எழுதிட நன்றாய்ப் பழகிடு — தம்பி
எழுச்சியை மனத்தில் தேக்கிடு
ஒழுக்கத்தை உயிராய்ப் போற்றிடு — தம்பி
ஒற்றுமை வளம் உழைத்திடு!

திறம்படச் செயலைச் செய்திடு — தம்பி
திறமையை வளர்த்து உயர்ந்திடு.
மறதியை ஒழித்துக் கட்டிடு — தம்பி
மங்காப் புகழைப் பெற்றிடு!

— தங்க. சங்கரபாண்டியன்,
அரக்கோணம்.





கவியரங்கம்


பூனையாரே வாங்க!



பூனையாரே பூனையாரே,
எங்கே வந்தீங்க?
பானைகளை உருட்டிவிட்டு
ஆட்டம் போடவா?

மீசையுள்ள பெரியவரே,
எப்போ வந்தீங்க?
ஆசைகளை மனதில் வைத்தோ
இப்போ வந்தீங்க?





பாலையெல்லாம் குடித்துவிட்டுப்
பறந்து போறீங்க;
வாலை ஆட்டி வாலை ஆட்டி
ஏய்க்க வாரீங்க.

பார்க்கும் போது புலியைப் போல
உடலைக் கொண்டீங்க;
பார்த்துவிட்டால் மானைப்போலத்
தாவிப் போறீங்க.

வீட்டிலுள்ள எலியை யெல்லாம்
விரட்டிக் காட்டுங்க;
பாட்டெழுதி மாலைபோட்டுப்
போற்று கிறோங்க.

— கா. வெ. தியாகசாந்தன், மாத்தூர்.



இறங்கப்பா குரங்கப்பா...

புளிய மரத்தின்மீது பாய்ந்து
பல்லைப் பல்லைக் காட்டுவாய்!
கிளையின் மீதில் அமர்ந்து வாலைக்
கீழே மேலே ஆட்டுவாய்!

சின்னப் பிள்ளைக்கூட்டம் உன்மேல்
கல்லைக் கல்லைப் போடுவார்!
முன்னம் பல்லைக்காட்டி விட்டால்
துள்ளித் துள்ளி ஓடுவர்!

வானை முட்டும் மரத்தில்கூட
வாகாய்த் தாவி ஓடுவாய்!
ஆனமட்டும் தின்று விட்டு
அமர்க் களமாய் ஆடுவாய்!

ஓய்ந்தமர்ந்து இருப்பதில்லை
ஓகோ தாவும் குரங்கப்பா!
பாய்ந்து சேர்ந்து ஆடிடலாம்
பக்கு வமாய் இறங்கப்பா!

— பி. கோவிந்தசாமி, ஊத்தங்கரை.



கேட்கட்டுமா

இல. மணிமூர்த்தி,
கல்விக்கடைக்குறிச்சி.

கேள்வி: நுரையீரல் விரிவதால் காற்று உள்ளே செல்கிறதா, காற்று உள்ளே செல்வதால் நுரையீரல் விரிகிறதா?

பதில்: கோழியிலிருந்து முட்டை வந்ததா, முட்டையிலிருந்து கோழி வந்ததா என்கிற மாதிரி கேட்டிருக்கிறாய், தம்பி நன்று! நாம் சுவாசிக்கும் போது, நுரையீரல் விரிவடைவதும் காற்று நுரையீரலுக்குள் நுழைவதும் ஒரே சமயத்தில்தான் நடக்கின்றன என்றாலும், நுரையீரல் விரிவதாலேயே காற்று உள்ளே செல்கிறது என்பதே சரி! ஏன்? எப்படி? விளக்கிச் சொல்ல வேண்டுமென்றால், சுவாசம் பற்றிய அடிப்படைச் செய்திகளையும் அலசியாக வேண்டும்.

மூளையில்முகுளம்என்று ஒரு பகுதி உண்டு என்பது உனக்குத் தெரிந்திருக்குமே! அதுதான் நாம் சுவாசிப்பதைத் தூண்டவும், கண்காணிக்கவும் செய்கிறது. தாயின் கருப்பையில் சிசுவாக இருக்கிறவரைக்கும் நாம் சுவாசிப்பதில்லை; கருப்பையிலிருந்து குழந்தையாக வெளியேறிய அடுத்த நொடியிலிருந்துதான் நாம் சுவாசிக்க ஆரம்பிக்கிறோம். அன்று தொட்டு உடம்பில் உயிர் உள்ளவரை சுவாசம் தொடர்கிறது. எப்படி? முதலில் கூறியபடி முகுளம் நுரையீரல்களை விரிவடையும்படி கட்டளையிடுகிறது. நுரையீரல் விரிவதற்கு நம் மார்புக் கூடும் அதன் தசைகளும் துணைபுரிகின்றன. நுரையீரல்கள் விரிவடையும் போது அதனுள் இருக்கும் காற்றின் அழுத்தம் குறைகிறது. அப்போது ஆகாயக் காற்றின் அழுத்தம் அதிகமாக உள்ளது. இதனால் பள்ளத்தை நோக்கிப் பாயும் ஆற்று நீரைப் போல அழுத்தம் நிறைந்த ஆகாயக் காற்று அழுத்தம் குறைந்த நுரையீரல்களுக்குள் நுழைகிறது. இதற்கு உள்மூச்சு (Inspiration) என்று பெயர். உள்மூச்சின் போது குறிப்பிட்ட அளவு விரிவடைந்த நுரையீரல்களைச் சுருங்குமாறு முகுளம் கட்டளையிட, நுரையீரல்கள் சுருங்குகின்றன. அப்போது நுரையீரலில் உள்ள காற்றின் அழுத்தம் ஆகாயக் காற்றை விட அதிகரிக்கிறது. எனவே, அழுத்தம் நிறைந்த நுரையீரல் காற்று அழுத்தம் குறைந்த ஆகாயக் காற்றுக்கு வெளியேறுகிறது. இதுதான் வெளிமூச்சு (Expiration). ஆக, நுரையீரல்கள் விரிந்து சுருங்குவதாலேயே காற்று உட்சென்று வெளிவருகிறது என்பதை இப்போது நீ புரிந்து கொண்டிருப்பாயே!


*** என். விஜய், தூத்துக்குடி.**

கேள்வி: நமக்குத் தும்மல் வருவது எதனால்?


பதில்: ஒரு நிமிஷம்! அச்... அச்... அச்ச்! இங்கே என்ன சத்தம் என்றுதானே கேட்கிறாய்? வேறு என்ன, தும்மல் தான். மனுஷன் எதை வேண்டுமானாலும் அடக்கி விடலாம், தும்மலை மட்டும் அடக்க முடியாது; அடக்கவும் கூடாது. சரி தம்பி, விஷயத்துக்கு வருவோம்.

தும்மல் என்பது ஒரு தற்காப்பு அனிச்சைச் செயல். அதாவது வேண்டாத விருந்தாளி வீட்டிற்கு வந்தால் விரட்டியடிக்கிறோம் அல்லவா? அதே மாதிரி நம் உடம்புக்கு உபயோகப்படாத ஏதாவது ஒரு அயல் பொருள் — உதாரணத்திற்கு பஞ்சு, தூசு, ஒட்டடை — மூக்கின் வழியாக உட்செல்லும்போது அதுவிரட்டியக்கப்படுகிறது. அதுதான் தும்மல்! அது எப்படி உண்டாகிறது?

மூக்கினுள்நுழைந்தஅயல் பொருள் மூக்கின் சிலேட்டுமப் படலத்தை உறுத்துகிறது. இந்தச் செய்தி மூளைக்குத் தெரிவிக்கப்படுகிறது. உடனே மூளை அந்த அயல் பொருளை வெளியேற்றும்படி மூக்கிற்குக் கட்டளையிடுகிறது. அவ்வளவுதான் அடுத்த வினாடியே நமக்குத் தும்மல் வந்துவிடுகிறது. தும்



டாக்டர்?



மலின்போது மூக்கு வழியாகவும் வாய் வழியாகவும் திடீரென்று சத்தத்துடன் வெளிமூச்சு வேகமாக வெளியேறுகிறது. அப்போது நமக்கு வேண்டாத அயல் பொருளும், சளியும், சில வகைக் கிருமிகளும் வெளியேற்றப்படுகின்றன.

இதனால் தும்முபவருக்கு லாபம்தான்! அதே சமயம் தும்மலின்போது வெளிப்படும் சளியும் கிருமிகளும் காற்றில் கலந்து அருகில் இருப்பவருடன் ஐக்கியமாகி விடும் அபாயம் நேர்கிறதே! இதைத் தவிர்க்க வேண்டுமல்லவா? முகத்தை மறைத்துக் கொள்ள வேண்டும் என்று பெரியவர்கள் சொல்லியிருக்கிறார்கள். செய்வாயா?

* பா. திருவேங்கடம்,
புருஷொனூர்.

கேள்வி: உணவைச் சூடாக உட்கொண்டால் உடம்பு உடனே வியர்க்கிறதே, ஏன்?

பதில்: தம்பி, நீ சுடச்சுட உணவை உட்கொள்ளும் பழக்கம் வைத்துள்ளாயோ? உன் கேள்வியில் அனுபவம் பேசுகிறதே! பரவாயில்லை. சுடச்சுட உணவை உட்கொள்ளும் போது உணவில் இருக்கும் வெப்பம் உடம்பில் உள்ள மற்ற உறுப்புக்களுக்கும் பரவுகிறது. இதனால் உடலின் வெப்பநிலை அதிகரிக்கிறது. நம் உடம்பின் வெப்பநிலையை ஒரே சீராக வைத்திருக்க வேண்டியது தோலின் கடமை. நீ உட்கொண்ட சூடான உணவால் உடம்பின் வெப்பம் அதிகரித்து விடுவதைப் போல, தோலின் வேலைப்பளுவும் அதிகரித்து விடுகிறது. உடம்பில்கூடிய அதிக வெப்பத்தை வெளியேற்றுவதன் மூலம் உடம்பின் வெப்பநிலையைச் சீராக்க அது முயல்கிறது. அதற்குத் தோலுக்குத் தெரிந்த ஒரே வழி — வியர்வையைச் சுரப்பதுதான்! உணவில் இருந்த வெப்பம் வியர்வையில் வெளியேறுகிற வரைக்கும் உடல் வியர்க்கும். பின்பு வியர்ப்பது நின்றுவிடும்!

* எம்.ஐ. ரைஸ்,
காயல்பட்டினம்.


கேள்வி: என் தூரப் பார்வைக் குறைபாட்டிற்குக் கண்ணாடி அணிந்து ஐந்து வருடமாகியும் கண் குணமாகவில்லையே, ஏன்?

பதில்: பார்வைக் குறைபாட்டிற்குக் கண்ணாடி அணிவதன் மூலம் கண் குணமாகிவிடும் என்பது தவறான கருத்து. அதை முதலில் நீ தெரிந்து கொள்ள வேண்டும். கண்ணில் உள்ள விழிலென்சில் ஏற்படும் கோளாறினால்தான் கிட்டப் பார்வை, தூரப்பார்வை போன்ற பார்வைக் குறைபாடுகள் வருகின்றன. இவற்றைத் தவிர்க்க நாம் கண்ணாடிகளை அணிகிறோம்! அதாவது கண்ணில் விழிலென்ஸ் செய்ய வேண்டிய பணியை நம் கண்ணாடியில் உள்ள லென்ஸ் செய்கிறது. ஒரு ஸ்டெப்னி மாதிரி! அவ்வளவுதானே தவிர, கண்ணாடி அணிந்து கொண்டால் விழிலென்சில் ஏற்பட்ட கோளாறு குணமாகிவிடும் என்று நம்புவதற்கில்லை. உனக்குக் கண்ணாடி அணிவது சிரமமாக இருந்தால், கண் மருத்துவர் ஆலோசனையின் பேரில் விழிதொடு ஆடிகளை (Contact Lens) பொருத்திக் கொள்ளலாம்; பயன் கிடைக்கும்!

* எம்.ஜெ. அருண்,
சென்னை — 10

கேள்வி: மனிதன் எப்படி

டாக்டர் கு. கணேசன்



குறட்டை விடுகிறான்? உடம்பின் எந்தப்பகுதியிலிருந்து குறட்டை வருகிறது?

பதில்: மூக்கும் தொண்டையும் இணைகிற இடத்தில் குறட்டை பிறக்கிறது. அதாவது மூக்கின் வழியாகக் காற்று வெளியேறும் பாதையில் ஏதேனும் தடை ஏற்படும் போது குறட்டை ஏற்படும். நீ புல்லாங்குழலைப் பார்த்திருக்கிறாயா? அதில் வெறுமனே காற்றை ஊதினால் இசை பிறக்காது. அதில் உள்ள துவாரங்களைச் சற்றே அடைத்துக் காற்றைத் தடை செய்தால் தான் இசை பிறக்கும். அம்மாதிரிதான் நம் மூக்கும். மூக்கில் உண்டாகும் அழுக்கு காரணமாகவோ, அல்லது அடினாய்டு சதை வளர்ச்சியின் காரணமாகவோ அல்லது குறுகிய மூக்குத் துவாரத்தின் காரணமாகவோ மூக்கின்வழி செல்லும் காற்று தடை படும் போது ஒரு வித சத்தம் உண்டாகிறது. அதைக் 'குறட்டை' என்கிறோம். குறட்டை விடுபவர்கள் பெரும்பாலும் வாய் வழியே மூச்சு விடுவதால், அவர்களுக்கு அடிக்கடி சளி, இருமல், தொண்டைக் கட்டுப் போன்ற தொந்தரவுகள் தொடரும்! எனவே, குறட்டை விடுவதைத் தவிர்க்க வேண்டும்!

*** டி. நளினி, லால்குடி.**

கேள்வி: விரல்களில் நட்டை உடைப்பதால் நரம்புத் தளர்ச்சி ஏற்படும் என்று கூறுகிறார்களே, இது உண்மையா? நரம்புத் தளர்ச்சி என்பது ஒரு நோயா?


பதில்: நளினித் தங்கையே, விரல்களில் நட்டை உடைப்பதால் நரம்புத் தளர்ச்சி ஏற்படும்என்று யார் சொன்னது? கூப்பிடு அவர்களை! படிக்கிற குழந்தைக்குத் தப்புத் தப்பாகச் சொல்லித் தரும் அவர்களுக்குத் தகுந்த தண்டனை கொடுக்க வேண்டும்!

விரல்களில் நட்டை உடைப்பதால் நரம்புத் தளர்ச்சி வராது; மாறாக அடிக்கடி அவ்வாறு செய்தால் காலப் போக்கில் விரல் மூட்டுக்கள் தேய்ந்து வீக்கமும் வலியும் ஏற்படலாம். எனவே, விரல்களில் நட்டை உடைப்பது உசிதமல்ல!

சரி, உன் கேள்வியில் அடுத்தாற் போல் ஒரு துணைக்கேள்வி தொங்குகிறதே! அதற்கு வருகிறேன். நரம்புத் தளர்ச்சி என்பது ஒரு நோய்தான்; சந்தேகமேயில்லை!

இந்த நரம்புத் தளர்ச்சி நோயைப் பற்றி விளக்கமாகச் சொல்ல வேண்டுமென்றால் இந்த இடம் போதாது. ஆசிரியர் இடமளித்தால் இதைப்பற்றித் தனியாக 'டாக்டர் பக்கத்தில்' எழுதுகிறேன்.

ஆசிரியர்:
தாராளமாய் எழுதுங்கள் டாக்டர்! அடுத்த இதழில் 'டாக்டர் பக்கம்' தான். திருப்திதானே?
— தே.





குழந்தைகளே! காதுகளைப் பாதுகாத்துக் கொள்வது எப்படி?

(ஆழி. வே. ராமசாமி — பக். 48 — ரூ. 4 — இமயப் பதிப்பகம், 8, நீலா தெற்கு வீதி, நாகப்பட்டினம் — 611 001.)

'செல்வத்துள் செல்வம் செவிச் செல்வம்' என்றார் வள்ளுவர். அந்தத் தலையான செல்வம் நமது அஜாக்கிரதையினால் பறி போகவிடலாமா? செவிப் புலனைப் பாது காக்கும் வழிமுறைகளைக் காது, மூக்கு, தொண்டை நிபுணரான ஒரு டாக்டரிடம் கேட்டறிந்து அதை அப்படியே கதை மாதிரித் தந்திருக்கிறார் ஓவியர் ஆழி. இவர் 'டாக்டர் பக்கம்' சேராதவர் என்றாலும் கேட்கிறவர் என்பதால் தனக்கு ஏற்பட்ட சந்தேகங்களை யெல்லாம் தீர விசாரித்து, தானும் தெளிவு பெற்று, படிப்பவர்களுக்கும் சிறந்த விளக்கம் தந்திருக்கிறார். பயனுள்ள நூல்.

தமிழுக்குச் சிறப்புச் செய்தவர்

(தமிழ்முடி — பக். 64 — ரூ. 6 — எச். 10, கே. பொன்னம்பலம் சாலை, பொன்னம்பலம் காலனி, கே. கே. நகர், சென்னை — 600 078.)

'பனங்கிழங்குப் பறவையார்' என்று பிரபல 'நாராய் நாராய் செங்கால் நாராய்...' என்ற சங்க காலப் பாடல் பாதிப்பிலிருந்து, இன்று நூற்றாண்டு விழா கொண்டாடும் பாரதிதாசன் நூலாசிரியரின் பதிப்புக்கு எழுதித் தந்த முன்னுரைக் கவிதை பிறந்த கதை வரை ஒன்பது இலக்கியக் கட்டுரைகளின் தொகுப்பு இந்த நூல். நல்ல தமிழ் படித்தோம் என்ற நினைவையும் நயம் கண்ட சுகத்தையும் தருகிறது இந்த நூல். அனுபவியுங்கள்.

சிறுவர் சிந்தனைக் கதைகள்

(ஹாப்பி ராஜன் — பக். 72 — ரூ. 7 — உமா பதிப்பகம், 58, ஐயப்ப செட்டித் தெரு, மண்ணடி, சென்னை — 600 001.)

72 பக்கத்தில் 31 கதைகள். ஒவ்வொரு கதைக்கும் படம். நல்ல பதிப்புத்தான். கதைகள் பிருந்தாவனக் கதையரங்கத்தில் இடம் பெறும் குட்டிக் குட்டிக் கதைகளைப் போன்று சிறுவர்களுக்கு ஏதேனும் படிப்பினையூட்டும் விதத்தில் இருக்கிறது. எளிமையான நடை.

தெரியாத கதைகள் வித்தியாசமாய் உங்களுக்குப் பிடித்ததாய் இருக்கும். படித்துப் பாருங்கள்.

கவிதைக் கண்கள்

(க. கணேசன் — பக். 136 — ரூ. 15 — இலக்கிய மன்ற வெளியீடு, இலக்கிய இல்லம், பொறையாறு — 609 307, தஞ்சை மாவட்டம்.)

பேரறிஞர்கள் பலர் வழங்கியிருக்கும் பாராட்டுரைப் பக்கங்களை விலக்கிவிட்டுப் பார்த்தால் — பக்கத்துக்கு ஒரு பாடல் போல 125 பாடல்கள் வெவ்வேறு விஷயங்கள் பற்றி வந்திருக்கின்றன. இயற்கை எழில்கள், அறிஞர் வரிசைகள், அரிய கண்டுபிடிப்புக்கள், அறிய வேண்டிய ஒழுக்க நெறிகள் — இப்படி ஒவ்வொரு பிரிவுகளில் ஒதுக்கி வகைப்படுத்தலாம். எழுதியவர் புலவர் ஆதலால் இலக்கணப் பிழையோ சந்தத் தடையோ கிடையாது. எளிமை கருதியோ என்னவோ பெரும்பாலான பாடல்கள் ஒருவித சந்தத்தில் அமைந்திருக்கின்றன. இருந்தாலும் மனசில் பதிகிற மாதிரி அறிவியல் போதனை செய்திருப்பது வரவேற்கத்தக்கது.

பூச்சிகளின் அதிசய உலகம்

(கே. என். ராமசந்திரன் — பக். 96 — ரூ. 7.50 — வானதி பதிப்பகம், 13, தீனதயாளு தெரு, தி. நகர், சென்னை — 600 017.)

சின்னக் குழந்தைக்குப் பயம் காட்டுவதற்கு, 'பூச்சி...' என்று உச்சரிப்பதுதான் இன்றைக்கும் வழக்கமாய் இருக்கிறது. அப்போது ஏற்பட்ட பயம் இந்தப் பூச்சிகள் பற்றிப் படிக்கும் போது இப்போதும் ஏற்படுகிறது. அதைத் தள்ளி வைத்து விட்டுப் படித்தால் எத்தனை புது விஷயங்களைத் தெரிந்து கொள்கிறோம்! உதாரணமாக —

'கடந்த 40 கோடி ஆண்டுகளாக உலகில் உலவி வருகிற — அத்துடன் மனிதனின் பலவித அழிப்பு முயற்சிகளுக்கு இதுவரை மசியாமல் நடமாடி வருகிற கரப்பான் பூச்சிகளை...'

எப்படி? இதுமாதிரி ஈ, தேனீ, கொசு, மூட்டைப் பூச்சி என்று பலவிதமான பூச்சிகள் பற்றி நம்ப முடியாத, பிரமிக்க வைக்கும் தகவல்கள் இந்த நூலில் இடம் பெற்றுள்ளன. படித்து அதிசயிக்கலாம்; பிரமிக்கலாம்.

— பெரிய பையன்.

எரிமலை

பண்டைய நாகரிகத்தின் விடிவிளக்கான இத்தாலியின் பாம்ப்பி நகரம். கி. பி. 79 ஆம் ஆண்டு. அங்கே புகைந்து கொண்டேயிருந்த வெசூவியஸ் எரிமலை திடீரென்று வெடித்து, அனல் குழம்பைக் கக்கத் தொடங்கியது. பல்லாயிரக்கணக்கான மக்கள் வாழ்ந்த பாம்ப்பி, ஹெர்குலேனியம், ஸ்டேப்யீ ஆகிய மூன்று நகரங்கள் சுவடில்லாமல் அழிந்தன!

1883 ஆம் ஆண்டு. இந்தோனேஷியா தீவுக் கூட்டத்தைச் சேர்ந்த க்ரகடோவா தீவு. அதில் உள்ள எரிமலை ஆகஸ்ட் 27 ஆம் தேதி வெடித்து அனல் குழம்பைக் கக்கத் தொடங்கியது. இது வெடித்த சத்தம் பல்லாயிரம் கிலோ மீட்டர் கடந்து ஆஸ்திரேலியாவில் கூடக் கேட்டது! மிகப் பெரிய பாறைகள் 55 கி.மீ. உயரத்திற்குத் தூக்கியடிக்கப்பட்டன! இதன் தூசுப்படலம் பத்து நாட்கள் வரை வானை மறைத்தது! தூசுகள் 5,330 கி.மீ. தொலைவில் பரவி விழுந்தன. 37 ஆயிரம் மக்கள் பலியாயினர்!

இந்த எரிமலை வெடிப்பு, கடலையும் விட்டு வைக்கவில்லை. நீர் மட்டம் அதிர்ந்து உயர்ந்து பல கி.மீ. அளவு உயரத்திற்கு அலைகள் எழுந்தன. பல தீவுகள் காணாமல் போயின. இதன் அதிர்வு அலைகள் உலகைச் சுற்றிலும் உள்ள கடல்கள் எல்லாவற்றிலும் பரவி எதிரொலித்தன. க்ரகடோவா தீவே அடையாளம் கண்டுகொள்ள முடியாதபடி போயிற்று. வானத்தையும் பூமியையும் அடைத்து நின்ற தூசுத் திரை, கற்பனைக்கு எட்டாத ஒளிச் சிதறல்களை ஏற்படுத்தி, உலக நாடுகள் எல்லாவற்றிலும் கால, நேர, பருவ மாற்றங்களை நிலை குலைய வைத்தது.

க்ரகடோவா தீவு, கடலில் மூழ்கினாலும், எரிமலையின் சீற்றம் அடங்கவில்லை. நீருக்கடியில் தொடர்ந்து அது அனல் குழம்பைக் கக்கி வந்ததால், அதன் குழம்பு கக்கு முனை உயர்ந்து உயர்ந்து இறுகி நீருக்கு வெளியே படிந்து புதிய எரிமலையாக உருவானது! இது ஒரே நாளில் நிகழவில்லை. சிறிது சிறிதாக உயர்ந்து 45 ஆண்டுகளுக்குப் பிறகு, அதாவது 1928 ஆம் ஆண்டு நிகழ்ந்தது! இதை 'அனக்ரகடோவா' என்று அழைத்தனர். இதற்கு 'க்ரகடோவின் குழந்தை' என்று பொருள்! இந்தக் குழந்தை இன்னமும் குமுறிக் கொண்டும், உறுமிக் கொண்டும்தான் உள்ளது!

எரிமலை விளைவித்த நாசத்தில் 'க்ரகடோவா'வின் சாதனை இன்று வரை முறியடிக்கப்படவில்லை!

விஞ்ஞானிகளுக்குச்

இப்படி எரிமலைகள் வெடித்து நாசப்படுத்திய செய்திகளைக் கூறிக் கொண்டே போகலாம்!

கடலிலும் கூட எரிமலைகள் உண்டு. இத்தகைய ஓர் எரிமலை அட்லாண்டிக் கடலில் வெடித்துச் சிதறித் தொடர்ந்து அனல் குழம்பைக் கக்கியபடி நீருக்கு மேல் உயர்ந்தது. இதன் அனல் குழம்புப் படிவங்கள் படிந்து இதுவே ஒரு தீவாகியது. இதற்குப் பெயர் சர்ட்சே. நெருப்பு அரக்கன் என்பது இதன் பொருள். இது இன்னமும் புகைந்து கொண்டேதான் உள்ளது!

நீர் நிறைந்த கடலுக்கடியில் எப்படி எரிமலை வெடிக்க முடியும் என்ற சந்தேகம் எழலாம். எரிமலை வெடிக்கும் போது அது வெளியேற்றும் படுபயங்கரமான வெப்பத்தின் விளைவாகக் கடல் நீரே எரிமலையின் வாய் வழியே உட்புக முடியாதபடி செய்து விடுகிறது!


இப்படிச் சர்வ நாசத்தை அளித்து, உயிர்களைப் பலிவாங்கி விடும் எரிமலைகள் விஞ்ஞானிகளுக்கு ஒரு சவாலாகவே உள்ளன. 'வோல்கன்'

என்பது தீக்கடவுளின் பெயர். இதை ஒட்டியே இவைகளை 'வோல்கனா' என்று ஆங்கிலத்தில் அழைக்கிறார்கள்.

பூமியின் உட்பகுதி கடும் வெப்பம் மிகுந்தது. குறிப்பாக அதன் மையப் பகுதி கொதிக்கும் அனல் அல்லது பாறைக் குழம்பாகவே (மேக்மா) இருக்கும். மேலுள்ள பாறைகளின் கீழ்நோக்கிய அழுத்தத்தால் அது அடைபட்டுக் கிடக்கும். ஆனாலும் அது வெடித்துக் கொண்டு மேலே வரத் தவித்துக் கொண்டேதானிருக்கும். மென்மையான மேற்பரப்பு அல்லது வெடிப்பு உள்ள இடங்களில் ஊடுருவித் தரையைப் பிளந்து கொண்டு வெளிக் கிளம்பும். வெளி வரும் அனல் குழம்பு, வாய்க்கு அருகே வழிந்து இறுகி, உயர்ந்து உயர்ந்து, எரிந்து வழியும் மலையாக உயர்ந்து எரிமலையாகிறது. இப்படி உருவான கோட்டப்பாக்சி என்ற எரிமலையின் உயரம் 6000 மீட்டர்! எரிமலைக் குழம்பு வெளிவருவது நின்று விட்டால் அதன் வாய் இறுகி மூடி விடும். மறுபடி எரிமலை குமுறி அனல் குழம்பு பீறிட்டு வரும் போது இந்த மூடியைத் தூக்கியடித்து வெளிக் கிளம்பும்.

உலகில் சுமார் 600 எரிமலைகள் உள்ளன. இவற்றை இனம் பிரிக்க அனல் கக்கும் எரிமலைகள் (ஆக்டிக்) எரிமலைகள் அடங்கிப் போன (எக்ஸ்டிண்ட்) எரிமலைகள், உறங்கும் (டார்மெண்ட்) எரிமலைகள் எனப் பிரிக்கலாம். இவற்றில் பெரும்பாலானவை கடலோரங்கள், ஏரிகள், மென்மையான மேற்பரப்புடைய இடங்களில் அமைந்துள்ளன. பசிபிக் கடலோரம், ஆல்ப் பைன் இமயமலை வெளிகள் இரண்டும் எரிமலைகள் அமைந்த முக்கிய வளைவுகளாகும். இவை தவிர, மற்றக் கடல்களின் தீவுகளிலும், கடல்களிலும் கூட எரிமலைகள் உள்ளன. இமய மலை கூடப் பல கோடி ஆண்டுகளுக்கு முன்பு எரிமலையின் அனல் குழம்பால் உயர்ந்து இறுகியதுதான்! கடல் தீவுகள் கூட இப்படி உருவானவைதான் என்கிறார்கள்.

சில எரிமலைகள் எப்பொழுதுமே நெருப்புக் குழம்பைக் கக்குபவை



அல்ல. அமைதியாகப் பல நூறு ஆண்டுகள் இருந்து திடீரென்று வெடிக்கக்கூடியவையும் உண்டு. தொடர்ந்து புகைந்து வரும் எரிமலைகளை விட, உறங்கிக் கிடந்து, கிளர்ந்து வெடிக்கும் எரிமலைகளே சர்வநாசம் விளைவிப்பவையாக உள்ளன.

நவீன விஞ்ஞான உலகம், எரிமலைகளால் ஏற்படும் நாசத்தைத் தவிர்க்கக் கடுமையாக முயன்று வருகிறது. வானிலையை முன் கூட்டியே அறிவது போல், எரிமலைகள் வெடித்து அனல் கக்கப் போவதைப் புவி இயல் வல்லுனர்கள் அறிய முயன்று ஓரளவு வெற்றியும் பெற்றுள்ளனர்.

எரிமலை ஆராய்ச்சியில் மிகவும் குறிப்பிடத்தக்க ஒன்று, இயற்கையை எதிர்க்க முயலாமல், அதன் விளைவுகளைத் தவிர்க்கவோ, அல்லது மனித குலத்திற்குச் சாதகமாகப் பயன்படுத்திக் கொள்ளவோ முயன்று வருவது.

எரிமலை வெடிக்கும் போது வெளி வருபவை திட, திரவ, வாயு வடிவங்களாக வெளிவருகின்றன. பொதுவாக இவற்றில் நீராவி, கார்பன்டை ஆக்சைடு, கார்பன் மானாக்சைடு, கந்தக டை ஆக்சைடு, ஹைட்ரஜன் சல்பைடு, ஹைட்ரோ குளோரிக் வாயு, அம்மோனியா, நைட்ரஜன் ஆகியவை அடங்கியிருக்கும்.

வட அமெரிக்காவின் மவுண்ட் செயின்ட் ஹெலன்ஸ் என்ற எரிமலை 1980 ஆண்டு வெடித்ததன் விளைவாக அனல் குழம்பும், சாம்பல் தூசும் சுமார் 660 சதுர மீட்டர் அளவுக்கும் பரந்து படிந்தன. இந்த நிலப்பரப்பில் ஆயிரக்கணக்கான மரங்களை நட்டு இதை இப்பொழுது செழுமை மிக்க பெருங்காடாக மாற்றியிருக்கிறார்கள்!

குளிர்ப் பெட்டிகள் தயாரிக்கப் பயன்பட்டு வரும் ஃபிரியான் வாயு, ஒரு செயற்கைக் கலவை வாயு. இதைக் கூட எரிமலைகள் வெளியிடுகின்றன என்பது கண்டுபிடிக்கப் பட்டுள்ளது!

எரிமலைச் சரிவில் கிணறு தோண்டி அதிலிருந்து கிடைக்கும் பல் வகை வாயுக்களைப் பயன்படுத்திக் கொள்ள சோவியத் விஞ்ஞானிகள் முயன்று வருகின்றனர். பீறிட்டு வரும் நில வாயு, நீராவியைக் கொண்டு டர்பன் என்ற மின்னாக்கிகளைச் சுழல வைத்து மின்சாரம் உற்பத்தி செய்ய முயன்று வருகிறார்கள். இது வெற்றி பெற்றால், வெடித்துக் கொண்டு வரத் துடித்துக் கொண்டிருக்கும் எரிமலைக் குழம்பின் அழுத்தத்தைக் குறைத்து, எரிமலைகள் வெடிப்பதைத் தவிர்க்கலாம்; எரிமலைகளைப் பணிய வைத்து, அவற்றின் மகத்தான வெப்ப ஆற்றலை மனித குல மேம்பாட்டுக்குப் பயன்படுத்திக் கொள்ளலாம்.


கோகுலம் சொற்புதிர் போட்டி

* இப்போட்டிக்கான சரியான விடை ஆசிரியரிடம் உள்ளது. * கூப்பனில்லாமல் வருபவை ஏற்பதற்கில்லை. * எல்லாம் சரியான விடைக்குப் பரிசாக ரூ. 50 — ம், ஒரு தவறுக்கு ரூ. 30/— ம், இரு தவறுகளுக்கு ரூ. 20/— ம் பரிசளிக்கப்படும். ஒன்றுக்கு மேற்பட்டோர் சரியான விடை எழுதினால் குலுக்கல் முறையில் முடிவு செய்யப்படும். * பரிசு பெற்றோர் புகைப்படம் கோகுலத்தில் வெளியாகும். * 16 வயதிற்குட்பட்டோர் மட்டுமே இதில் கலந்து கொள்ளலாம்.

குறிப்புகள்:

(அடைப்புக்குறிக்குள் தரப்பட்டுள்ளவை, விடைகள் எவ்வளவு எழுத்துள்ளவை என்பதற்கு ஒரு வழிகாட்டி!)

எனக்குப் பிடித்த நண்பன் யார்? — போட்டி முடிவு அடுத்த இதழில் வெளியாகும். — ஆசிரியர்.



பெயர் ____________ வயது ______

முகவரி ____________

____

பின்கோடு ____________

அனுப்ப வேண்டிய முகவரி } ஆசிரியர், கோகுலம், ரேஸ்கோர்ஸ் ரோடு, சென்னை-32

இடமிருந்து வலம்:

1. ஒலிம்பிக் போட்டியில் தனக்கே எல்லாப் பரிசும் வர வேண்டும் என்று பேராசைப் பட்ட மன்னன் (2)
2. டெல்லியில் உள்ள ஹாக்கி ஸ்டேடியத்தின் பெயர் (3)
3. ....தேவ் என்றால் கிரிக்கெட் ரசிகர்களுக்குத் தெரியாமலா இருக்கும்? (3)
4. பாண்டவர்கள் மகாபாரதத்தில் ஆடிய சூதாட்டத்தின் பெயர் (3)
5. ...... சிங், இந்தியாவின் கிரிக்கெட் ஆட்டக்காரர்களுக்கு இன்னமும் முன்னோடி தான்! (4)
6. இந்திய அரசால் சிறந்த விளையாட்டுக்காரர்களுக்கு வழங்கப்படும் உயர்ந்த விருது... .... அவார்டு (4)
7. கிரிக்கெட்டைத் தேசிய விளையாட்டாகக் கொண்டுள்ள நாடுகளில் ஒன்று (6)
8. வீட்டுக்குள்ளேயே ஆடும் இந்த ஆட்டத்திற்கு 'ஸ்ட்ரைக்கர்' தேவை (3)

மேலிருந்து கீழ்:

9. பம்பாய் வாசியான இந்தக் கிரிக்கெட் ஆட்டக்காரர் உலக சாதனை படைத்தவர் (5)
10. ரஞ்சித் ஸ்டேடியம் அமைந்துள்ள இந்திய நகரம் (5)
11. .... ஓட்டம், ஒலிம்பிக் பந்தயத்தின் துடிப்பான ஒரு பந்தயம் (5)
12. சர்வதேச 'செஸ்' போட்டியில் இப்பொழுது உலகத்தின் கவனத்தைக் கவர்ந்துள்ள இந்திய சாம்பியன் இந்த மாஸ்டர். (4)
13. ஒரே ஒரு முறை யானை போலோ நடைபெற்ற இந்திய நகரம் (4)
14. டேபிள் டென்னிஸின் பழைய பெயர் (4)



* குழந்தைகள் சம்பந்தப்பட்ட எந்த விஷயமானாலும் சரி, சிறுவர், சிறுமியரிடையே பட்டிமன்றம், போட்டி வைத்து ஆய்ந்து தெளிவு படுத்தும் ஒரே குழந்தைகள் பத்திரிகை எனக்குத் தெரிந்தவரை கோகுலம் மட்டுமே!

விருத்தாசலம், ஏ. எம். சர்தார்.

* விளையும் பயிர் முளையிலே தெரியும் என்பது போல அமைந்திருந்த, பெரியோரைப் பார்த்துப் புரிந்து கொண்ட ஐந்து சிறுவர் சிறுமியரின் பேட்டி அற்புதமாய் இருந்தது.

சேலம் — 1. ரவி பாலாஜி.

உலகிலேயே பெரிய மீன் சுறாவைப் படங்களுடன் அமைந்த விந்தைத் தகவல் செய்திகள் அருமை. சுறா மீன்களைப் பற்றிப் புதிய தகவல்களைத் தெரிந்து கொள்ள முடிந்தது.

ஊத்தங்கரை, பி. கோவிந்தசாமி.

* டிரான்சிஸ்டர் படக்கதையைப் படிக்கக் கோகுலத்தை நான் பிடுங்க, என் தங்கை பிடுங்க ஒரே சண்டை. உடனே நான் எனக்காக ஒரு 'கோகுலம்' வாங்கிக் கொண்டேன். கதை முழுவதும் ஒரே சிரிப்பு...சிரிப்பு!

கருமத்தம்பட்டி, ஆர். அருண்பிரகாஷ்.

* ரா. பொன்ராசன் அவர்கள் எழுதிய கவிதை 'நான் யார்?' விடுகதையையும், கவிதையையும் படித்த திருப்தி அளித்தது.

செஞ்சி — 2, தா. ரசூல்.

* 'எல்லாம் வல்ல சூரியன்' என்ற தொகுப்புக் கட்டுரை — தெரியாத பல அரிய அற்புத விஷயங்களை மிகச் சாதாரணமாகப் புரிய வைத்தது.

மொரப்பூர். அ. நவ்சாத்.

* தேசியக் கொடி பிறந்த கதையைக் கட்டுரையாகத்தான் நான் இதுவரை படித்திருக்கிறேன். ஆகஸ்டு மாத கோகுலத்தில் கவிதையாகவே படித்து விட்டேன்.

செஞ்சி — 2. தா. ஷேக்ஹுசேன்.

* 'உலகக் கோப்பை அதிசயங்கள்' பற்றிக் குண்டுமணியின் துணுக்குச் செய்திகள் நிறைந்த கட்டுரை மூலம் உலகக் கோப்பை கால்பந்து போட்டி பற்றி அதிசயத் தகவல்களை அறிய முடிந்தது.

தச்சநல்லூர், என். வி. உச்சிமாகாளி.

* 'பங்காரு எங்கிருக்கிறான்?' உண்மைக் கதையாய்த் தெரியவில்லை. நேரிலேயே நடந்த நிகழ்ச்சியைக் கண்ட மாதிரி இருக்கிறது. கதையை இறுதிவரை படிப்பவர்களது மனசும் துடிதுடித்துக் கொண்டிருந்தது. கதாசிரியருக்குக் கிடைத்த பெரும் வெற்றி இது.

தக்கோலம், அ. முஸ்தபா.

* 'மந்திர அம்புகள்' படத்தை ஆரம்பம் முதல் முடிவு வரை மிகவும் விறுவிறுப்பாகவும் எளிதில் படிக்கும்படி அழகாகவும் எழுதப்பட்டுள்ள இனிமையான கதை.

செஞ்சி, டி. இராமநாதன்.


* 'கேட்கட்டுமா டாக்டர்?' பகுதியில் இடம் பெற்ற கேள்விகளையும் அதற்குரிய விளக்கங்களையும் படித்த போது கேள்விகளைத் தேர்ந்தெடுப்பதில் கோகுலத்திற்கு நிகர் கோகுலம்தான் என்பது புரிந்தது. அப்பகுதியிலேயே டாக்டர் கு. கணேசனின் புகைப்படத்தையும் பார்த்து மகிழ்ச்சியடைந்தோம்.

ஸ்ரீ ஆதிவராகநல்லூர், சா. கிருஷ்ணசாமி.

* 'நன்றின்பால் உய்ப்பதறிவு' கோகுலத் தலையங்கம் பிஞ்சு நெஞ்சங்களில் ஒழுக்க விதைகளைத் தூவும் வண்ணம் சிறப்பாக இருந்தது. வளரும் பயிருக்குச் சத்தான உரம் போல் வளரும் குழந்தைகளுக்குக் கோகுலம் சிறந்த நண்பன் என்பதில் சந்தேகமில்லை.

ஈரோடு — 1, டி. சந்திரன்.

பரதன் அச்சகத்தில் பரதன் பப்ளிகேஷன்ஸ் பிரைவேட் லிமிடெட் சார்பாக அச்சிட்டு வெளியிட்டவர்: வி. முரளி. ஆசிரியர்: கி. ராஜேந்திரன்.
நிர்வாகக் காரியாலயம்: ரேஸ்கோர்ஸ் சாலை, கிண்டி, சென்னை — 600 032. போன்: 431543, 434157, 434190.
ஆறுமாதச் சந்தா: உள்நாடு: ரூ. 18/—; வெளிநாடு: கப்பல் தபால் ரூ. 60/—; விமானத் தபால் ரூ. 135/—.
ஆண்டுச் சந்தா: உள்நாடு: ரூ. 36/—; வெளிநாடு: கப்பல் தபால் ரூ. 120/—; விமானத் தபால் ரூ. 270/—


அம்மா, இங்கே பாரும்மா! சும்மா என்னைப் பார்த்துக் குரங்கு மூஞ்சி குரங்கு மூஞ்சின்னு சொல்லறன்!!
மாலா-

REGISTERED NO. TN MS (S) 281
Registered as a Newspaper in Srilanka

